உ

ஓம்.

# பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

இஃது

அந்நிபெஸண்ட் அம்மையாரது

ஆங்கில உபந்நியாசங்களின்

## மொழிபெயர்ப்பு.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்"—*திருக்குறள்.*

முதற்பதிப்பு—1000 பிரதிகள்.

மதுரை

பிரஹ்மஞான மந்திரம்

மதுரை:

தமிழ்ச்சங்கம் பவர்பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது

1905

*Copy Right Registered.*

# பொருளடக்கம்.


1-வது உபந்யாசம்—நான்கு ஆச்சிரமங்கள்.

2-வது ஷை ஆலயம், பூஜை, பூஜகர்கள்.

3-வது ஷை ஜாதி முறைமைகள்.

4-வது ஷை ஸ்திரீ தர்மங்கள்.

# மொழிபெயர்ப்பாசிரியரின் நூன்முகம்.

மகா உத்தம க்ஷேத்திரமாகிய காசி க்ஷேத்திரத்தில் 1900-௵ டிசம்பர்௴ பிரஹ்மஞான சபையாரது 25-ம் வருஷோத்சவ காலத்தில் அன்னிபெஸண்டு அம்மையார் நம் நாட்டுப் பிராசீன தர்மங்களின் உயர்வைப்பற்றியும் தற்கால ஆசாரங்களின் சீர்கேட்டைப் பற்றியும் ஆங்கில பாஷையில் நான்கு உபந்நியாசங்கள் செய்தார்கள். சரீரத்தால் மட்டும் அந்நியமாயும் மற்றெல்லா விஷயங்களிலும் பூரண ஹிந்துவாயுமிருந்துவரும் அவ்வம்மை நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் நம் நாட்டுக்கே தத்தம் பண்ணி நம் க்ஷேமத்தின் பொருட்டுப் பல வருஷங்களாய் உழைத்து வருவதை நம் நாட்டார் எவரும் அறிவார்கள். நம் நாடு முன்னிருந்த மேலான நிலைமையையும் தற்காலம் அது சீர்கேடு அடைந்திருப்பதையும் உற்று நோக்கி மனமுருகி அது மறுபடியும் முன்னிருந்த உன்னத நிலைமையை அடையவேண்டுமென்ற முழுநோக்கத்துடன் நம் குற்றங்குறைகளை மிக்க அநுதாபத்துடன் எடுத்துக் காட்டி, நாம் நம்மைச் சீர்திருத்திக்கொள்ளும் வண்ணம் தமக்குத் தோற்றிய உபாயங்களையும் கூறிய பரம ஆப்தராகிய அவ்வம்மைக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு யாதுளது. அவ்வம்மை கூறியவற்றை,

"நகுதற் பொருட்டன் றுநட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்ற திருக்குறளை யநுசரித்துக் கூறிய மொழிகளைக் கருதி என்னாது தன்னாது ஏற்பது நம் கடனாம்.

நம் வைதிகர்களும், கோவில் தர்மகர்த்தாக்களும், பூஜகர்களும், ஸ்திரீகளும், ஜன சமூகத்தார்களும் இவ்வுபந்யாசங்களிற் சொல்லப்பட்ட விஷயங்களை நன்குணர்ந்து மொழிய நம் நாட்டுச் சீர் திருத்தம் எளிதில் உண்டாக இடமில்லை. அநேகமாய் ஆங்கில பாஷைப் பயிற்சி யில்லாதவர்களாகிய அவர்கள் அறிய வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் இத்திவ்வியோபந்யாசங்களைத் தமிழில் மொழிபெயர்க்கலானேன். இவ்வுபந்யாசங்களிற் கூறப்பட்ட கொள்கைகள் நம் நாட்டுத் தர்மமுறைகளுக்கும், சாஸ்திரக் கொள்கைகளுக்குஞ் சிறிதும் விரோதப்படாமலே இருக்கின்றன.

ஆகையால் முதியோராயினும் இளையோராயினும், ஆண்மக்களாயினும் பெண்மக்களாயினும், செல்வராயினும் ஏழையாயினும் மற்றெவராயிருப்பினும் சரி, உண்மையான தேசாபிமானமும் மதாபிமானமும் உள்ள ஹிந்துக்கள் அனைவரும் இவ்வுபந்யாசங்களிற் கூறப்பட்ட விஷயங்களை உய்த்துணர வேண்டுமென்பதும், தம் உடல், பொருள், ஆவியில் தம்மாலியன்ற அளவு சிறிதேனும், தத்தம் செய்யச் சித்த

மாயிருக்க வேண்டுமென்பதும் நமது கோரிக்கை. அவ்வாறு செய்தாலொழிய நம் நாடு சீர்திருத்தமடைய இயலாது. நாம் உயர்வடைய முடியாது. நம் நாட்டின் க்ஷேமங்கள் விருத்தியடைய இடமில்லை. "நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லையன்றோ"? "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற ஆன்றோர் வாக்கை அனுசரித்து அக்காலத்துக்குத்தக்க சீர்திருத்தங்கள் செய்வது வழுவாகமாட்டாது. எல்லாம் வல்ல ஈசனது கிருபை என்று முண்டாவதாக.

இம்மொழிபெயர்ப்பிற் சிறிது பாகம் சென்றவருஷம் மதுரைத் தமிழ்ச்சங்கப் பத்திரிகையாகிய "செந்தமிழ்" வாயிலாய் வெளிவந்தது. அவ்வாறு முற்றும்வருவது நெடுநாட் செல்லுமெனவும் விரைவில் வெளிப்படுத்தலே நலமெனவும் என் நண்பர்களிற்சிலர் கேட்டுக்கொண்டமையால் அன்னோர்விருப்பத்திற்கிசைந்து உடனே புத்தகரூபமாக வெளியிடத் துணிந்தனன்.

இதனை மொழிபெயர்க்குங்கால் என்கூடவேயிருந்து உதவிபுரிந்த எனது ஞானசகோதரரும் மாஜி இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ வி. நாராயணசாமிஐயர் அவர்களுக்கும், இஃது அச்சாகுங்கால் எனக்குப் பேருதவிபுரிந்த செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்களுக்கும், என் நண்பர் மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சாமிநாதையர் அவர்களுக்கும் வந்தனம் அளிக்கின்றேன்.

மதுரை.
12—11—05.

இங்ஙனம்
ப. நாராயணன்.

# பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.*

## முகவுரை.

ஞானோபதேசம் செய்பவரும் ஒவ்வொருவரும் தம்முடைய நிலைமை எவ்வளவு தாழ்மையுள்ளதாக இருப்பினும் தாம் செய்யவேண்டிய கடமைகள் உண்டு. அவையாவன:—உயர்வான மனோபாவத்தை அநுஷ்டானத்துக்கு லக்ஷியமாக எடுத்துக் காட்டல், தற்கால உலகநடைகளில் தீயவற்றைக் கண்டித்தல், உயர்வான பாவங்களை அநுஷ்டிக்கும் நெறிகளைச் சுட்டிக் காட்டல் என்பவைகளாம். அடியில் வரும் உபந்நியாசங்களில் மேற்கண்ட முறைகளை வெளியிட முயன்றிருக்கிறேன். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதிற் பலசங்கடங்கள் உண்டு. அக்காரணம் பற்றி அக்கடமைகளைக்கொண்டு செலுத்தாமல் விட்டுவிடலாகாது.

---

* காசிப்பட்டணத்தில் 1900௵ டிசம்பர்௴ "பிரம்மஞான சபை"யின் 25-ம் ஆண்டு நிறைவிற் கூடிய மகாசபையில் அன்னிபெஸண்ட் அம்மை ஆங்கில பாஷையிற் செய்த நான்கு உபந்நியாசங்கள் இவை.

கஷ்டங்களுக்கும் பயந்து அதைரியமுள்ளவர்கள் பின்வாங்கு வார்கள். தீரர்களோ அவற்றை மேற்கொண்டு கடந்து வார்கள்.

இந்த 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியதேசமானது இரண்டு மார்க்கங்களின் மத்தியிலிருக்கின்றது. ஒன்று—அதோமுகமான நாசத்திற்கும், மற்றொன்று—ஊர்த்வமுகமான க்ஷேமத்திற்கும் ஏதுவாகவிருக்கின்றன. இத்தேசத்தினர்களில் உத்தமமானவர்கள் பலர் இந்தியதேசம் நற்கதி அடையுமா என்று சங்கிக்கிறார்கள். பயன்படாத முறைகளைச்செய்து, அதனால் நேரும் மரணகதி தாமதமாக நடைபெறுவதைவிட, 'இந்தியதேசம் யாதொரு முயற்சியுமின்றித் தானாகவே நாசம் அடைவதாக' என்று அவர்கள் சும்மா இருப்பார்கள்போலும்! மற்றவர்களோவென்றால், தேசாபிமானமுடையவர்களாயினும், தங்கள் தேசத்தைக் காப்பாற்றுவதற்குரிய வழி தெரியாமல் அறிவின்மையான முறைகளை அநுஷ்டிக்கிறார்கள். அஃதாவது இத்தேசத்தின் பிராசீனமுறைகளைக் காற்றிற் பறக்கவிட்டு, மேல்நாட்டாரின் முறைகளை இத்தேசத்துக்கும் பரமௌஷதமென்றெண்ணி, அவற்றை அநுஷ்டிப்பாராயினார்கள். அஃதுண்மையில், தேசத்தின் நாசத்துக்கு ஏதுவாகவேமுடியும். பின்னுஞ்சிலர் அடியில் வருமாறு நம்புகின்றார்கள். இத்தேசத்துக்கு இனி இகபரசம்பத்துக்கள் வரப்போகின்றன என்

னும் நம்பிக்கையுள்ளவர்களாய், பிராசீன சிரேயஸ்கரமான முறைகளை இக்காலத்துக்குத் தக்க முறைகளுடன் சம்பந்தித்துச் செய்ய முயல்வாராகின்றனர். இத்தகையார்களில் யானும் ஒருத்தி. இந்நோக்கத்தை முதன் முதல் வெளியிட அடியில்வரும் உபந்நியாசங்கள் செய்திருக்கிறேன்.

யான் மகாத்துமாக்களின் தாழ்மையான ஒரு வேலைக்காரி. இந்திய தேசத்தை மேன்மையான பதவிக்குக்கொண்டுவரச்செய்யும் முயற்சிகளில், யார் வருவாரேனும் அவரவர்களுக்கு அங்கீகாரமான முயற்சியில் யானும் ஒருசிறிய பாகத்தைக் கைக்கொள்ள ஆசையுடையவளாக இருக்கிறேன்.

இதுகாறும் 7-வருஷங்களாக நான் செய்துவந்த உபந்நியாசங்களில் பிராசீன சிரேயஸ்கரமான மனோபாவங்களை இந்தியர்களும், மற்றுமுள்ள உலகத்தினரும் அறியும்படியாகவும், இந்தியர்க்குத் தங்களுடைய சநாதனமான மதத்தில் பக்தியும் சிரத்தையும் உண்டாகவேண்டியும் பிரஸ்தாபித்து மாத்திரம் வந்தேன். அவைகள் பயன்படாமற் போகவில்லை.

எச். பி. பிளாவாட்ஸ்கி அம்மையார் (H. P. Blavatsky) செய்துள்ள கிரந்தங்களாலும் எச். எஸ். ஆல்காட் (H. S. Olcott) துரையவர்கள் செய்துவந்த நற்செய்கையாலும் இந்து மதத்திற்கு உண்டாயிருக்கிற ஊக்கம் உறுதிப்பட்ட

தோடு, அவ் இந்துமதத்துக்குத் திரும்ப ஜீவகலை ஏற்படுவ தற்குப் பிரஹ்மஞானசபையே முக்கிய காரணமென்பதைச் சத்துருக்களும் மித்துருக்களும் சமமாக ஒப்புக்கொள்ளுகி முர்கள். ஆனால் நன்மையைத்தொடர்ந்து தீமையும் விளைந் திருக்கிறதென்பது ஆச்சரியமன்றாயினும், பார்க்க வியசனமாகவே யிருக்கிறது. ஹிந்து மதம் உயர்விக்கப் பெற்று நடை பெறுவதுடன், துராசாரங்களும், மூடபக்தியும், அறிவீனமான மனோபாவங்களும் இப்போது பலப்பட்டுத் தலை தூக்கி நடமாடத் தொடங்கியிருக்கின்றன. ஆகவே, சநாதன மதத்தின் பெருமையைப் பற்றிப்பேசுவதுடன், இத்துரா சாரங்கள் மூடபக்திகளைப் பற்றியும் வெளிப்படையாய்க் கண்டித்துப் பேசுவதும் என் கடமையாக நேர்ந்திருக்கிறது. இந்தத்துராசாரங்களை அநுஷ்டிக்கும்படி நான் சொல்வதாக நினைக்காமலும், சநாதன தர்மத்தின் சிறப்பை வற்புறுத்து வதால் இந்த அநாசாரங்களையும், மூடபக்திகளையும் நானும் அங்கீகாரஞ் செய்கிறேன் என்ற எண்ணமுண்டாகாமல் தடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகள் மேலிட்டா லும், ஹிந்துமதக் கோட்பாட்டுடன் சம்பந்தித்தாலும் இந் தியதேசம் நாசத்தை யடையும்; இகழ்ச்சிக்குள்ளாகும். அழுகி வருகின்றவற்றைச் சுத்தமானவைகளினின்று வேறு படுத்தி இயலுவதுதான் க்ஷேமசாதகமாகும். அன்றிச் சுத் தமானவற்றுடன் சம்பந்தித்திருக்கின்ற காரணம் பற்றி

அழுகியவற்றை நீக்காமற் பிறரறியாதவண்ணம் புதைத்து மூடிவைப்பவர்கள் இந்தியதேசத்தை உண்மையில் அபிமானிக்கிறவர்கள் அல்லர். அழுகலானவை புரையோடும்: புரையோடவே நாசம் சம்பவிக்கும். அது சரீரத்தில் இருந்தாலும் சரி: ஒருதேசத்திலிருந்தாலும் சரி; ஆகையால் துராசாரங்களையும், அவற்றை நீக்கும் உபாயங்களையும் பற்றி மறைக்காமல் வெளிப்படையாகவும் பேசியிருக்கிறேன்.

இவ்வாறு உபந்நியாசங்கள் செய்தகாலத்தில் விடப்பட்ட சிலவிஷயங்கள் ஆங்காங்கு இப்போது சேர்த்து அச்சிடப்பட்டுள்ளன.

இந்த உபந்நியாசங்கள் இந்துக்களை நோக்கிச் செய்திருந்தபோதிலும், அவற்றிற் பெரும்பான்மையான விஷயங்கள்—முக்கியமாய் முதல் வியாசத்திலும் கடைவியாசத்திலுமுள்ளவை—ஹிந்துமதத்துக்குப் புறம்பாயுள்ளவர்க்கும் உபயோகமாகவிருக்கும். தற்காலத்தில் உலகநடையில் நன்றாய்ச்சேர்த்துக்கொள்ளக்கூடிய உயர்வான கருத்துக்களும், ஆசரணைகளும் இவ்வுபந்நியாசங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தியதேசத்தின் பகுதிகளாகவுள்ள இராஜ்ஜியங்களைச் சார்ந்த ஒவ்வொருவரும் இந்தியதேசத்தின் க்ஷேமத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த உபந்நியாசங்களிற் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ள

அபிப்பிராயங்கள் நேர்மையாகவும், சாதகமானவையாகவும் இருக்குமாயின், இந்தியர்கள் அவற்றை அங்கீகரிப்பார்களாக. அவை, அவர்களின் மேம்பாட்டுக்கு அநுகூலமான உபகரணங்கள் ஆகுக.

அன்னிபெஸண்டு.

---

## முதலாவது உபந்நியாசம்.

## நான்கு ஆச்சிரமங்கள்.

---

சகோதரர்காள் !

பிரஹ்மஞானசபை என்று தியசாபிகல் ஸொஸைடியானது, அநேக சங்கடங்களின் மத்தியிலும், பல இடையூறுகளிருந்தும், தான் சிரமேற் கொண்ட உயர்வான விஷயம் நிறைவேறும் வண்ணம் சென்ற 25-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. அக்காலத்திற்குள் உலக அநுபவம் பெற்றும், தன் பலாபலத்தை உணர்ந்தும் குற்றங்களை அறிந்தும் தவறுகளை விலக்கியும் வருங்காலத்துக்குச் சாதகமான அநேக அநுபவங்களை அடைந்துமுள்ளது. மேற்றிசையார் கணக்குப்படி நூற்றாண்டு முடிவும், சபையின் 25-ம் ஆண்டு நிறைவும் ஒரே சமயத்தில் நேர்ந்திருக்கின்றன. இதேசமயம், கீழ்த்திசையார் கணக்குப்படி கலிச்

சிறுவட்டங்களுள் ஒன்று முடிவும் பெறுகின்றது. ஆகஃ, இன்று நாம் நிற்கும்நிலை எத்தகையதென்றால், உலக சரித்திரத்தில் உயர்ந்த மாறுதல்களுக்கு அங்குரார்ப்பணம் செய்தற்கும், மானுஷ்ய மேம்பாட்டைப் பயக்கும் நற்காரிய முயற்சி தொடங்குதற்கும் உரிய ஒரு காலவட்டத்தின் முகப்பாக இருக்கின்றது. இஃது ஏற்றதொரு நல்லசமயம்; உத்தரவாதமுந்தங்கிய சமயம். இத்தருணத்திற் செய்யும் தீர்மானங்கள் பெரிதான பலப்பிராப்திக்கு உரியவாகவிருக்கும். இச்சமயத்தை முன்னோக்கிச்செய்யும் யத்தனங்களினால், நெடுங்காலம்வரை, தேசத்தார் நடக்கவேண்டிய நெறிகள் இன்னவையென்று உறுதியாகும். மேற்கண்ட விஷயத்தைக் கருத்தில் வைத்துக்கொண்டு முன்னோக்கியும் பின்னோக்கியும் பாருங்கள். உலகத்துக்கு இந்தியாவைக் கொண்டு என்ன சாதகம் செய்யலாகுமென்று முன்னோக்குங்கள். சரியான நெறியைக் கைக்கொண்டால் இந்தியாவாற் செய்து முடிக்கக்கூடியவை என்ன என்று உற்றுணருங்கள். இப்போது இரண்டு மார்க்கங்களிருக்கின்றன; எந்த மார்க்கத்தைப்பற்றி ஒழுகலாமென்று யோசியுங்கள். தெய்வங்களின் தீர்மானமான கதியை அதிக்கிரமிக்க முடியாது. அக்கதியைப்பற்றியே ஒரு ஜாதியாரின் க்ஷேமமும், அதன் நாசமும் நிகழ்கின்றன. அன்றியும் இனிவரும் முறையும் அதுபற்றியே இருக்கிறது.

இந்தப்பிர்ஹ்மஞான சபையானது, உலகத்துக்குச்சில நன்மையான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்துடன், இந்திய தேசத்துள்ள மஹரிஷிகளாலே ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது. அதன் சுபாவமான கொள்கையை அநுசரித்தே, இந்துதேசத்தின் விருத்தி விஷயமாக முயற்சி எடுத்துக்கொள்வது அந்தச் சபையின் கடமையாகும். இந்தச் சபையில் இந்துக்கள் அங்கத்தினராகவிருப்பதில், இந்தியாவின் தற்கால நிலைக்கு ஏற்ப அதற்கு மேம்பாடு பயக்கும் முயற்சியைத் தாங்களே தலைக்கொண்டு நடத்தத் தைரியமும், ஊக்கமும் அவர்கட்கு இல்லாமற் போகுமாயின், கீழ்த்திசையாரைப்பற்றிய அந்தச்சபையின் உத்தேசம் சபலமின்றிப் பொய்த்துப்போம். அக்காரணம் பற்றியே மேற்றிசையாரைப் பற்றிய நோக்கமும் பயனற்றதாக முடியும். இந்தியதேசத்தில் இனி நடக்கவேண்டிய முறையைத் தீர்மானிப்பது எவ்வளவு முக்கியமோ—அவ்விதமே இந்தச் சபையில் இனி நடத்தவேண்டிய முறையைத் தெரிந்து நிச்சயிப்பதும்.

சென்ற 7-வருஷங்களாக உங்களுடன் ஜீவித்துக் காலக்ஷேபம் செய்து வந்திருக்கிறேன். உங்களுக்காக உழைத்தும் வந்திருக்கிறேன். இந்தியாவின் தற்கால நிலைமைக்கு விமோசனம், எந்த வழியைப்பற்றி ஒழுகினாற் கைகூடுமென்னும் நினைப்புள்ளவளாய் அதன் தற்கால நிலையையும்,

அதன் சங்கடங்களையும், குற்றங்களையும் தெரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன். இவ்வேழு வருஷங்களில் உங்களுடன் நான் இருந்த மாதிரியால், என்னுடைய மனோபாவங்களெல்லாம் ஹிந்துவினுடையதாகவேயுள்ளனவென்னும் நம்பிக்கை உங்களுக்கு உண்டாயிருக்குமென்றாவது எண்ணுவதற்கு இடமுண்டென்று நினைக்கிறேன். இனி நான் சொல்லப்போகும் விஷயங்களில் ஏதேனும் நீங்கள் இணங்காதவைகளும் இருக்கலாம். ஆனால், இந்த விஷயங்களில் ஒற்றுமையும் ஏகபாவமும் நிகழ்வது துர்லபம். அப்படியிருக்குமாயின், இந்தியாவின் க்ஷேமத்தை உத்தேசித்தும், இத்தேசத்தில் எனக்கிருக்கும் அன்பின் மிகுதியைக் கருதியும், நல்லெண்ணத்துடன் நான் சொல்லுகிறேனென்று நீங்கள் நம்புமாறு வேண்டுகிறேன். ஏதேனும் தவறான அபிப்பிராயங்களை நான் வசனிப்பேனாயின், அவைகள் அறியாமையால்நேர்ந்திருக்குமேயல்லது, மனத்துடனே வேண்டுமென்று சொன்னேனென்று நினைக்க ஒண்ணாது. உங்களுக்கு வியசனத்தையும் வெட்கத்தையும் விளைக்கக்கூடிய சிலபிரத்யக்ஷவிஷயங்களைப்பற்றி நான் வெளிப்படையாய்ப் பிரஸ்தாபித்தால், அஃது, அவற்றின் விமோசனார்த்தமான வழியை நாடவேண்டுமென்று வற்புறுத்துவதற்கேயாம்; அக்குற்றங்களைத் தெரிந்து அவற்றை நிவிர்த்திசெய்து தெய்வங்கள் ஆசீர்வதிக்கக்கூடிய சிரேயஸ்கரமான மார்க்கத்தை நாடவும்,

இந்தியதேசம் மேன்மையான சம்பத்தைப்பெறவும், இந்தியர் உலகத்தாருள்ளும் உயர்நிலையை அடைந்து, உலகத்தார்க்கு ஞானாசாரியர் என்ற சிறந்த பதவியை வகிக்க யோக்கியதை பெறவும் வேண்டும் என்பதற்கேயாம்.

இவ்விஷயங்களைப்பற்றிச் சொல்லப்போவதால், அப்படி முற் கண்ட முறையை அநுசரிக்க உத்தேசிக்கிறேன். முதலில், பிராசீனதர்மம் இன்னபடி இருந்தது என்று என்னால் கூடியவரை விவரிப்பேன். ஆனால், தேவர்களுக்குத் தோன்றியவிதமாகவும், மஹரிஷிகள் மனோபாவத்தில் உதயமாகி, அவர்கள் உலகத்தார்க்கு வெளியிடும்விதமாகவும் அவ்வுயர்வான தெய்வீகம் பொருந்திய தர்மத்தை உள்ளபடியே விரிவாக வெளியிட மனுஷ நாவினால் முடியாது. ஆயினும், அத்தர்மத்தின் அழகை நீங்கள் அறியும்படியும், அஃது இந்தியாவுக்கும் பொதுவாய் உலகத்தார்க்கும் எவ்வளவு பிரயோசனமுள்ளதாக இருக்கிறதென்பதை மதிக்கும்படியும் நான் அதைப்பற்றிப்பேசலாமென்று நினைக்கிறேன். இந்த ஒரு தேசத்தில் மாத்திரம் அத்தர்ம உபதேசம் ஏற்படினும், இதற்குமாத்திரமன்று, உலக முழுமைக்கும் அஃது ஏற்பட்டுள்ளது; அஃது இந்தியாமூலமாகப் பரவினாலன்றி வேறுவழியாக உலகத்திற் பரவல் இயலாது. அத்தகைய பிராசீனதர்ம முறைகளை ஆதி ரிஷிகள் உங்களிடந்தான் ஒப்பிவைத்தார்கள். தற்கால கதிக்கிணங்க, இந்தியாவில்

ஏதேனும் மாறுதல் அவசியம் நிகழ்வதாக இருப்பினும், இந்த உயர்வான தர்மங்கள் மங்கவாவது குறையவாவது கூடா. அவற்றின் ஆதியிலே பூர்ணமான தெய்வத்தன்மை குன்றாமல் இருக்கக் கடவது. அவைகளின் பரஸ்பரநேர்மையும், பரிசுத்தமானவியல்பும் இருந்தே தீரவேண்டும். இக்காலத்திற் செய்யவேண்டுமென்ற மாறுதல்கள் எல்லாம் அந்த ஆதிதர்மங்களை, முன்போல, அநுஷ்டான பூர்வகமாக விளைவிப்பதுதான். இக்காலத்திய க்ஷணிக சுபாவமுள்ள மனோபாவங்களுக்கும், வழக்கங்களுக்குந் தக்கவாறு, அந்தத் தர்மங்களை மாற்றவுந் தாழ்த்தவும் ஒண்ணாது. இனிச்சொல்லப்புகும் ஒவ்வொரு சங்கதியிலும், முதலில் அதன் பிராசீனமுறை எவ்விதமிருந்தது என்பதைக் காட்ட முயலுவேன். பிறகு தற்காலத்தில் அம்முறை எவ்விதமாக மாறிச்சீர்குலைந்து கெட்டுப்போயிருக்கிற தென்பதையும் எடுத்துக்காட்டுவேன். முன்னதுடன் பின்னதான இக்கால வழக்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய தேசாபிமானி ஒவ்வொருவனும் முற்றும் மனநொந்து கண்ணீருங் கம்பலையுமாயிருக்கும்படி செய்யக்கூடிய அவ்வளவு கொடுமையுடையனவாகவும், தாழ்மையுடையனவாகவும், உயர்வான ஆதிமுறைகள் தடுமாறிப் போயிருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியவரும். இந்திய தேசத்துக்குத் தெய்வபலமெப்போதுமுள்ளது என்ற நம்பிக்கை நமக்கு இல்லா

மற் போகுமேயானால், இந்தியாவிற்கு இனி விமோசனம் இல்லை யென்றும், இந்தத் துர்க்கதிப் பிரவாகத்தினின்றும் அதைக் கரையேற்றுவது இயலாதென்றும் சொல்லக்கூடும். நாமும் இவ்வித மனோபாவத்தாற் சோர்வையடைந்து களைப்புமடைவோம். ஆனால், இத்துன்பங்களை ஜயித்துக் கீழ்ப்படுத்தும்படியான தெய்வபலம் பூர்த்தியாயிருக்கிறதென்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றமையால், சரியான மார்க்கத்தில் இன்றியமையாத சீர்திருத்தங்களை உண்டுபண்ணவும், அவசியமாயின், தேசநன்மைக்காகத் தங்களுடைய உயிரையே தியாகஞ் செய்யவுங்கூடிய தீரர்கள் இந்தியாவில் இனிக்கிளம்புவார்கள் என்று என்போலிய சிலர் நம்ப இடமுண்டு. அவர்களால் இந்தியாவிற்கு விமோசன காலம் எப்போது வருமென்று எண்ணிக்கொண்டிருக்குங் கனவெல்லாம் இனிச்சம்பவிக்குமென்று நம்பத் தைரியமுண்டாயிருக்கின்றது. நான் செய்யப்போகின்ற ஒவ்வோர் உபந்நியாசத்திலும் உயர்வான தர்மமின்னதென்றும், அது தற்காலம் இவ்விதம் குறைவுற்றிருக்கிறதென்றும் எடுத்துக்காட்டியபிறகு, எவ்விதமான சீர்திருத்தங்களைக் கைக்கொண்டு நடந்தால் இந்தியா பிருகிருத நிலைமையைவிட்டுத் தன் சுதந்தரமான உயர்பதவியைப் பெறுமோ—இனி உலகத்தில் ஜனவிகாஸமுறையில் உலகிற்கே ஞான குருவின் ஸ்தானத்தை வகிக்கக் கூடுமோ, அத்தகைய சீர்திருத்தங்களைப்

பற்றித் தெரிவிப்பேன். இந்த விஷயங்களைப் பற்றித்தான் இந்த வியாசங்களில் விசாரிக்கப் போகிறோம். அவைகள் உங்களுக்குச் சம்மதமாக இருக்கும்படியாகவும், அவற்றை உங்கள் அனுஷ்டானத்திற் கொண்டுவர உங்களைத் தூண்டவும் நான் முயல்வேன். இம் முதல் உபந்நியாசமானது பின் வருவனவற்றிற்கு முகவுரையாகவிருக்கும். இதில் உலகவியல்பும் அதன் கதியும் இவ்வண்ணமென்று சொல்ல வேண்டியிருந்ததால் அது சிறிது விரிவாகத் தோன்றும். அவ்விரிவினால் நீங்கள் கேட்கச் சிரமப்படுவீர்களென்று மதிக்கிறேன். நாம் எண்ணியிருக்கும் உயர்வான முடிவு இன்னதென்று வெளியிட்டாலொழிய, அதை நோக்கிய முறை விவரங்கள் உங்களுக்குப் புலப்படா. உத்தேசத்துக்கும் அதற்குரிய பிரயோஜனங்களுக்குமுள்ள நேர்மை உங்கள் மனத்துக்கு வாராது. வழி நேர் அல்லது கோணல் என்ற விஷயம், கதியின் முடிவு தெரிந்தாலொழியச் சொல்ல இயலாது. அந்த முடிவு நீங்கள் இதுவரையிற் கண்ட கனவின் திறத்திற்கு மேற்பட்டதாகும்.

வழக்கமாய்ப் பார்க்கிறது போலல்லாமல், விரிவாய் உலகத்தின் சரித்திரத்தை நோக்கிப் பாருங்கள். பிராகிருத சம்பந்தமுள்ள ஒரு ஜாதியார் மற்றொருவருடன் போர் புரிதலும், ஒருவர் மற்றவரைக் கண்டு பொறாமைப்படுதலும், ஒருவர் மற்றவரைத் தாழ்த்தித் தன்னை உயர்வு படுத்தலும்,

வதையுற்றவர் குரோதமும், வஞ்சப்பவன் கொடூரமும் நிரம்பியிருக்கின்ற நிலைமையை மனத்தினின்று விலக்கிக் கவனியாமல், அவை நசுவரமான பிரகிருதியின் தன்மைகள் என அறியுங்கள். தெய்வகதியின் சுவரூபம் தெரியக்கூடிய உயர்வான இப்பூமியின்கண் மனத்தைப் புகவிட்டுப் பாருங்கள். அதனால் இப்போது நாம் பேசப்போகிற இந்திய ஜாதியார் என்ன தர்மத்தைக் கைக்கொண்டு நடக்க வல்லவர் என்றதை ஒருவாறு தெரிந்துகொள்ளுங்கள்.

இந்தியாவின் தற்கால நிலையைக் கவனிப்பீர்களாக. அதன் முன் பின்பக்க சம்பந்தங்களையும் பார்க்கக்கடவீர். சென்ற நூற்றாண்டுகளிற், பல ஜாதியார்கள், ஒருவர் பின் ஒருவராக இத்தேசத்தின்மீது படையெடுத்து அதை வசப்படுத்தி அதிற்றங்கி அதனை ஆண்டுவர முயன்றார்கள். ஆன எத்தனித்தவர்கள் இத்தேசத்தின் அபிவிர்த்தியை உண்டுபண்ண யோக்கியதை யுள்ளவர்களா இல்லையா என்று சீர்தூக்கப்பட்டார்கள். மேற்றிசையார்கள் ஒருவர்பின் ஒருவராய் இந்தியாவின் எல்லைக்குள் தங்களுடைய ஆளுகையை நாட்ட முயன்றார்கள். சில இடத்தைக் கைப்பற்றுவதும், பின்பு தளர்ச்சியடைவதுமாக இருந்துவிட்டனர். இந்தச்சமாசாரத்துக்கு கிரேக்க ஜாதியாரின் பண்டைக்காலப்படையெடுப்புக் காலம்வரை நாம் போகவேண்டியதில்லை. இற்றைக்கு இரண்டு அல்லது மூன்று நூற்

றாண்டுக்கு முற்பட்ட சரித்திரத்தைப் பார்ப்பதாலேயே தெரியவரும். உலாந்தக்காரர் போர்த்துகீஸார், பிராஞ்சுக்காரர் இவர்கள் தொடர்பாக, இந்தியாவில் தங்கி நிலையாகவிருந்து ஆளமுயன்றும் அநேகமாய் முற்றும் அதை விட்டு விலகி மறந்துவிட்டார்கள். இவர்களுக்கெல்லாம் பின்னர், மேற்கே வெகு தூரத்துள்ள தீவினின்று ஆங்கிலேயர் இத்தேசத்துக்கு வந்து குடியேறித் தங்களுடைய ஆளுகையை நாட்டினர். மேன்மேலும் அவர்கள் இராஜ்ஜியம் பரவியோங்கி விருத்தியாகி வருகின்றது. இப்பொழுது பெரும்பான்மை இந்தியா முழுவதும் அவர்களுடைய நேரான ஆட்சியிலும், சிறுபான்மை, அவர்கள் செல்வாக்குக் குட்பட்டு அவர்கள் சார்பிலுமாக இருக்கின்றது. ஆகவே, இவ்விசாலமான தீபகற்பத்தின்கண், கீழ்த்திசையாரும் மேற்றிசையாரும் சேர்ந்து வாழ்க்கை நிகழ்த்தும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்விரு ஜாதியாரும் மேன்மேலும் அபிவிருத்தியாகி வருகின்ற ஒரு பெரிய இராஜ்ஜியத்தின் சம்பந்திகளாக அமைகின்றார்கள்.

உலக சரித்திரத்தைப் பார்க்கும்போது, பலஜாதிகளை ஒருங்கு சேர்த்து, இப்பூமியின்கண் ஒரு பெரிய இராஜ்ஜியம் ஏற்பட்டு உலக முழுமையும் ஆளவல்ல நிராக்ஷேபமாயுள்ள ஏகசக்ராதிபத்தியமாய் அமைவது சகஜமே. நம்முடைய ஆரிய ஜாதியாரின் உட்பிரிவுகளான எவ்வொரு சிறிய ஜாதி

யாரும் தாம்தாம் மேம்பாடுற்ற காலத்தில் உலக முழுதும் தங்கள் அரசாட்சியைச் செலுத்திவந்திருக்கிறார்கள். இமாசலத்திற்குத் தென்புறமாக ஆரிய ஜாதியாரின் முதல் உட்பிரிவினர் குடியேறி ஒரு பெரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார்கள். ஆரிய அரசாட்சியும் நாகரீகமும் இந்தியதேசத்தின் எல்லைக்கு அப்பால் அதிகமாகப் பரவவில்லை. அதன் புறம்பில் இருந்தவர்கள் நாகரீகமற்ற மிலேச்சர்களேயாயினும் ஆரியராஜாங்கத்துக்குட்பட்டுக் கப்பங்கட்டி வந்தார்கள். அக்காலத்தில் பூர்வீக அர்சர்கள் பெரும்பான்மையும் இந்திய தேசத்தைச் சார்ந்தவர்களே. இவ்விதமாக, ஒவ்வோர் உட்பிரிவு ஜாதியாரின் சரித்திரத்தைப் பார்ப்போமாயின், அதுவும் மேற்கண்ட வரலாறுபோலவே நடைபெற்றிருக்கின்றது. அக்காடியர்களின் இராஜ்ஜியமாகிய பாபிலோனியாவும், ஐரேனியா என்ற பாரசீக ராஜ்ஜியமும், ரோமாபுரியைப் பிரதானமாகவுடைய கெல்ட் ஜாதியார் இராஜ்ஜியமும் இவைகட்கு முன்னிருந்த இராஜ்ஜியங்களுமெல்லாம் உலகத்தில் அது அது மேம்பாடடைந்து உலக முழுமையுந் தன் தன் ஆளுகையைச் செலுத்திப் பின்பு மறைந்தன. அது அது தான் தான் அபிவிர்த்திபெற்ற தசையில், இனி வரப்போகின்ற ஒவ்வோர் உட்பிரிவு ஜாதியாரின் அங்குரமும் ஏற்பட்டு அது வளர்ந்து பாதுகாக்கப்பெற்று வந்தது. ஐந்தாம் உட்பிரிவான டியூடானிக் ஜாதியார் காலம் இவ்

னும் பூரணமாகவில்லை. முன்னவர்களைப் போலவே, இந்த ஜாதியாரும் உயர்வானதும் விசாலமானதுமான இராஜ்ஜியம் வகிப்பார்கள் என்ற சின்னங்கள் இப்போது வெளியாகி வருகின்றன. பலநாட்டார்களும், (Colonies) அவ்வாங்கிலரின் ஒரு கிளையாகிய ஐக்கியதேசத்தினரும், ஜர்மனியரும் ஒன்றுபட்டு உலகெங்கும் பரவிய டியூடானிக் ராஜ்ஜியம் ஒன்று உதயமாகிக் கொண்டு வருகின்றது. அதுதான் உலகத்தில் இனி ராஜ்ஜியபாரம் வகிக்கும். அதன் ஆளுகையில் அதனுடைய பலத்தால் சண்டைகள் நின்று சமாதானம் நிலைபெறும். அந்த ராஜ்ஜியம் நடைபெறுங்காலையில் இனிவரும் ஆறாவது உட்பிரிவு ஜாதிக்கு அங்குரார்ப்பணம் ஏற்படும். இனிப்பிறக்கும் அந்த ஜாதியானது சமாதானமே தன் கடைப்பிடியாகக் கொண்டொழுகும். ஒருவருக்கொருவர் போட்டிபோடும் வழக்கம் தொலைந்து, அன்பும் ஆதரவுந்தங்கிய சகோதர பாவத்தை மேற்கொண்டு அதுநடைபெறும். அந்த நாகரிகத்தின் அழகெல்லாம் சமாதான நிலையேயாம். அந்த இராஜ்ஜியத்தின் முறையில் இந்தியாவின் கதி எம்மாதிரியாக இருக்கலாகும்?

இப்போது இந்திய தேசமானது அந்நிய தேசத்தாரால் ஜயிக்கப்பட்டு, அவர்களுடைய சைந்நிய பலத்தால் ஆளப்படுகின்றது. ஆனால் இந்தியாவின் இலக்கியங்களும் அவைகளிலடங்கிய உபதேசங்களும், மனோபாவங்களும்

ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று வருகின்றன. ஆங்கில பாஷையே, உலகெங்கும் பரவிவர, உலகப் பொது மொழியாக அது அமையும்படியான நிலையை உடையதாகி வருகின்றது. முக்கியமான ஜாதியார்கள் அந்த பாஷையையே பேசுகின்றார்கள். ஆகவே, இராஜ்ஜிய விஷயமாக இந்தியா மற்றைய ஜாதியாருக்கு உட்பட்டிருப்பினும், அதன் மனோபாவங்கள் மேனாட்டு நாகரிகத்தின்கண் பரவி மேற்கொள்ள ஆரம்பித்து விட்டன. இந்த விஷய மொன்றன் மூலமாக, இந்தியா, இனி வரும் உலகமுறையில் எவ்வித முயற்சியை வகிக்கக் கூடுமென்பது குறிப்பிக்கப்படும். முன்னாள் உலகத்துக்கு ஞான குருஸ்தானத்தை இந்தியா வகித்திருந்தது. இப்போதும் உலகத்தின்கண்ணுள்ள ஜாதியார்கள், முன் போலவே உயர்வானதும், பரிசுத்தமானதுமான சிறப்பை இந்தியா திரும்பவும் பெற்று நிகழவேண்டுமென்றே ஒப்புக்கொள்ளுகின்றார்கள். உலக பாஷையாகிய ஆங்கிலத்தின் மூலமாக இந்தியாவின் உயர்வான உபதேசங்களை ஏனைய ஜாதியாரும் உணர்ந்து தன்மயமாக்கிக் கொண்டுவருகின்றார்கள். மேலும் அந்த ஆங்கிலம் இப்போது நம்முடைய இந்தியாவின் பொதுமொழியாகவும் பரவிவருகின்றது. இவ்வுபதேசங்கள் எங்கும் பரவி அங்கிகாரமும் பெற்றுவருகின்றனவே. அவற்றுள், எந்த உபதேசம் உத்தமமானது? இனி வரும் நாகரீகத்திற்கு உற்ற ஆதாரமாக ஏற்

படக் கூடிய உபதேசம் யாது? என்று கவனிப்போம்.

உயர்வானதும், அருமையானதும், பிராணுதாரமானதும், ஸர்வசாரபூதமானதுமாயுள்ள தத்துவோபதேசம் என்ன வென்றால் :—ஆத்ம ஏகிபாவம். அஃதாவது ; எல்லாந்தனக்குள் அடங்கியதாயும், எல்லாவற்றுள்ளுந் தானிருந்து நடத்துவதாயுமுள்ள ஆத்மா ஒன்றே என்பதுதான். இதுவே உத்தமோத்தமமான உபதேசம். ஆத்மா ஒன்றே: அஃது ஒன்றேயுள்ளது: அந்த மகா சமஷ்டிப் பிராணியில் வியஷ்டிப்பிராணிகள் உள்ளன. அந்த பரபிரஞ்ஞையானது மற்றைய பிரஞ்ஞைகளின் மூலமாக இருக்கிறது. "ஏகம் ஏவா அத்வதீயம்" அஃது ஒன்றே: இரண்டற்றது. அதனுள் எல்லாம் அடங்கும்.

இந்தியாவின் வாயிலாக வெளியிடப் பட்டுள்ள இந்த உபதேசமானது உலகெங்கும் பரவி வருகிறதைப் பாருங்கள். அதுவே, இனிப்பிறக்கும் ஜாதியாரின் உற்ற ஆதாரமான கொள்கை. அந்த ஜாதியார், ஜனங்களின் ஏக ஆத்ம ஐக்கியபாவத்தைக் கொண்டவர்களாய் நடை பெறுவார்கள். ஆகையாற்றான், அந்தக் கொள்கையானது, "பிரஹ்மஞானசபை" யின் (Theosophical Society) முக்கியமான கடைப்பிடியாகக் கைக்கொள்ளப் பட்டுள்ளது. எல்லாரிடமும் சகோதர பாவத்தைப் பாராட்டி ஒழுகும் அதன் சிறந்த கடைப்பிடியானது, இந்த ஆத்தும ஐக்கிய தத்துவத்தின்

ஆதாரத்தின் மேல் நிற்கின்றது. வருணாம் ஜாதி பாரம்பர்ய ஆசாரம், வழக்கம், பிறப்பு இவை எத்தன்மையவாயிருப்பி னும், எவ்வித வேற்றுமையுள்ளனவாக நிகழினும், ஏகாத்ம தத்துவ பாவத்தில் ஜனங்கள் எல்லாரும் சகோதரர்களே. இந்த பாவனை தான் இனி மூளைக்கும் ஜாதியாரின் அறிகுறி யான உற்ற கொள்கையாகவிருக்கும். இனி வரும் ஜாதி யாருடைய கொள்கையானது இந்தியாவின் உத்தமதம மான உபதேசங்களே—என்றால்—அச்சொல், எவ்வளவோ அர்த்த புஷ்டியுள்ள தென்பதை யோசியுங்கள்.

இந்த உபதேசத்தின் உரிமையானது பலவாறாகப் பர வவேண்டுமாயின், இந்தியா தான் செய்யவேண்டிய கருமம் யாது? ஜனங்களுக்கு ஞான குருவாக அமைதற்குற்ற முயற்சி செய்து, தானே ஆயத்தம் செய்து கொள்ள வேண் டுவதேயாம். பிராசீன பரிசுத்த தர்மங்கள் மறுபடியும் இந்தியாவில் அநுஷ்டானத்துக்கு வரல் வேண்டும். தொன் று தொட்டுக் கிடைத்திருக்கும் புகழ்பெற்ற சித்திகளெல் லாம் கையாளும் இந்தியர்கள், நல்லொழுக்க முள்ளவர்க ளாகவும், பரிசுத்த நடையுடையவர்களாகவும், பிரஞ்ஞா வான்களாகவும், சிரேயஸானவற்றிலேயே நோக்குடையவர் களாகவும் ஆக வேண்டும்; இவ்வண்ணம் நிகழுமாயின், இனி உலகெங்கும் பரவும் இராஜாங்கத்தில், இந்தியாவின் கதி, அடிமையான ஸ்தானமாக இராது. அதற்குப் பிரதியாக,

உலகத்து மற்றைய ஜாதியாருக்கு ஞானசாரியராகவும், சமய நெறிகளை உபதேசிக்கவு மேற்ற உயர்ந்த மரியாதையான ஸ்தானத்தை அடைய இடமுண்டு. இனிப் பிறருடைய ஆட்சிக்குட்பட்ட தேசமாகப் போகாது. இனிச்சம்பவிக்கும் இராஜ்ஜியத்தில் தானும் சுதந்தரமான பாகமுடையவர்களாக நேரிடும். இந்தியர்கள் மந்திரிகளாகவும், அரசாட்சி நடத்துவோராகவும் இருப்பார்கள். அவர்களின் உபாத்தியாயர்கள் உலகத்துள்ள மற்றச் சமயங்களைச் சீர்திருத்தி, ஞான பாகத்தை அவற்றிற் புகட்டி, இக்காலத்துள்ள அஞ்ஞானமான இருளைத்துரத்தி ஞானோதய மாகும்படி செய்வித்து, எங்கும், பூஜ்ஜியர்களாக ஆவார்கள். இவ்விதமாக இனி வருகிற நிலைமை அமையும். ஆனால் உயர்ந்த சம்பத்தையும், அந்த மேலான வைபவத்தையும் அடைவதற்கு உற்றபடி, நீங்கள் ஆயத்தம் செய்து கொள்ளல் வேண்டும். அதுதான் நாம் கவனிக்கவேண்டிய லக்ஷியம். அதனை அடையும் சாதனம் என்னவெனில்:—ஜனங்களுக்குக் கல்வி கற்பித்து, அறிவை உண்டுபண்ணித் தேசமுழுமையும் மேம்பாட்டைப்பெறும்படி செய்தலேயாம்.

இது தான் நாம் கவனிக்கவேண்டிய குறியாகும். அதனை அடைதற்குரிய சாதனமென்னவென்றால் ;—ஜனங்களுக்குக் கல்விகற்பித்து அறிவையூட்டித் தேசமுழுமையும் மேம்பாடுபெறச் செய்தலேயாம். முற்காலத்திருந்த

கௌரவத்தையே உன்னி உன்னிப் பாராட்டிக் கொண்டிரு த்தலால் யாதொருபயனும் கிடையாது. நீங்களே முயற்சி செய்து மேம்பாடடையாவிட்டால், இந்தியாவிற்கு விமோ சனமும் உயர்வும் வாரா. ஒருதேசத்தாரின் மேம்பாடு, அத்தேசத்தார்களில் ஒவ்வொருவரின் மேன்மையளவைப் பற்றியதாகவே இருக்கும். இந்தியர் மேன்மைபெறுதொழி வராயின் இந்தியா உயர்வைப் பெறுவதென்பது எங்ஙனம்? முன்பிரஸ்தாபிக்கப்பெற்ற—உலகமெங்கும் பரவிநிகழும் இராஜ்ஜியத்தின் ஒருபாகத்தை வகிக்கவல்ல யோக்கியதை உங்களிடம் இருக்கிறதா? அதன் உத்தரம் தேவதைகளு க்குத் தான் தெரியும், தகுந்த சந்தர்ப்பம் தேவதாநுக்கிரக த்தால் நேர்ந்திருத்தல்பற்றி, அது சாத்தியமென்றே மதி க்கத்தக்கது. அநுகூலம் பயப்பதற்கு இடமின்றேல், தெய் வங்கள் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணும். அநுகூலம் லபிக் கும்படி நாம் முயலவேண்டும். தீரமான சித்தவிருத்தியுள்ள வர்களாய், வருங்காலத்து நமக்கு ஏற்படும் சிரேயஸைக்கருதி அதற்குத் தக்கவாறு முயலுவோமாயின், அவ்வநுகூலங் கள் சித்திக்கும்.

நம்முடைய நோக்கம் இது தான். இச்சமயத்துக்கு ஏற்றகேள்வியொன்று உண்டு:—இக்காலகதிக்குத் தக்க வாறு இந்தியா தன்னை இணக்கிக்கொள்ளல் கூடுமா? இந்தி யாவில் இப்போதுள்ள நிலையிலேயே இருப்போம் என்பார்

ஒருசாரார். அது நாசத்தின் அறிகுறியாகும். கடவுளால் அமைக்கப்பெற்ற காலதேசவர்த்தமானங்களுக்கு நேர்மையாய், மனம் வாக்குக் காயங்கள் நடப்பித்தற்குத் தக்கவாறே ஜீவகதியும் இருக்கும். 'காலகதி' என்று சிலர் உற்சாகத்தோடும், சிலர் அதை யொட்டியே நடக்கவேண்டுமென்றும் சிலர் அதனைத்தடுக்கவேண்டுமென்றும், இவ்வாறு, பலவாறுகப் பிரஸ்தாபிக்கின்றனர். காலகதியென்றால் என்ன? உள்ளபடி யுணர்ந்தால் ஈசுவர சங்கற்பம், மனிதனை, தன் விகாச கதியின் வழியே இழுத்துச் செல்கின்றது. அதன் கதியை மனிதன் தன் அறிவின்மையாற்றடுத்துப், தவறுகளால் எதிர்த்தும், குற்றங்களால் மறைத்தும் இடையிடையே செய்து வருகிறான். காலகதி—இன்னவிதமென்பதைக் கவனித்துத்தெளியவேண்டும். அதனால் ஈசுவர சங்கற்பம் இம்மாதிரி உலகத்தை நடத்துகிறதென்பதைத் தெரிந்து கொள்ளல் கூடும். ஈசுவரசங்கற்பமின்றி இவ்வுலகம் எவ்வாறு நடை பெறும்? அச்சங்கற்பத்துக்கு விரோதமாக மனிதன் ஒழுகக்கூடுமென்று நினைக்கமுடியாது? மாறி மாறிப் போர்புரியும் சங்கற்பங்கள், அறிவின்மையால் விளைந்த துஷ்கருமங்கள், தவறுகள், குற்றங்கள், குறைகள், பாவங்கள்—இப்படி—மனிதனிடம் எத்தனையோ இருக்கின்றனவே; இவற்றின் மத்தியில், ஈசுவரன், தமது தவறாத சங்கற்பம் நிறைவேறுமாறு ஜனங்களின் துஷ்கருமங்கள், அறி

வீணை முதலியவற்றையே தம் கருவிகளாக அமைத்துக் கொண்டு, தாங்கருதிய மேன்மையான காரியங்களைக் கொண்டுசெலுத்துகின்றார். மனிதன், தண்டுசக்கரத்தில் வைக்கப்பெற்ற குயவன்கை மண்போல்வன். குயவன் போல்வன் ஈசுவரன். ஈசுவரன் தண்டுசக்கரத்தைச் சுழற்றுகிறான். மண்ணான மனிதன் மனம், பற்பல பாண்டங்களாக, ஈசுவரன் சுழற்சியால் அமைகின்றது. அவன் அசைய அணுவும் அசையும். அவனின்றி அணுவும் அசையாது. குப்தமான காலகதிக்கு விரோதமாக நாம் இயல்வது, குருட்டுத்தனமாகவும், அறிவீனமாகவும் முடியும். சிலகதிகள் அத்துணை ஆழமாக இரா. ஆனால் உலக விகாசத்திற்குரிய ஆழ்ந்த முக்கியமான காலகதியின் போக்கை உற்றுநோக்கித் தெளிதல் வேண்டும். அதனைச் சார்ந்தே நம் முயற்சியும் நடைபெறல் வேண்டும். அதனால், ஈசுவரசங்கற்பம் முடிவுறும். அதற்கு விருத்தமான நமது முயற்சி சிதறுண்டுபோம். அதற்கொத்தவை ஈசுவரகாரியங்களேயாம். நாமும் அவர் வேலையைச் செய்பவர் ஆவோம். பிடிவாதமாய் ஒருவன் ஒன்றைக்கைப்பற்றிக் கொண்டு, "முற்காலத்தில் இத்தகைய காரியம் நன்மை பயந்தது; இப்போதும், இனியும் அவ்வாறே அமையும். காலகதி என்பதை அநுசரித்து நடக்கமாட்டேன்" என்று இயலுவானாயின், அது நாசத்துக்கே ஹேதுவாகும். அவன்உயர்ந்த சிலைபாவமானவன்;

தான் மேற்போகாது வரவரத் தாழ்மையடைவன். அவ்வாறே, முன்னோக்காமலும், முன்னோர்பாற் சிரத்தை பாராட்டாமலும், இக்கால நிலைமையின் காரணங்களை விசாரியாமலும், முரட்டுத்தனமாகவும், தீவிரமாகவும் நடப்பவனும் நாசத்தைத்தான் அடைவன். முன்னவனுக்கும், பின்னவனுக்கும் இதே கதிதான். அபாயமான இவ்விருவர் நெறிகளைத் தவிர்த்து, நடுவில், நம் தேசத்துக் கப்பலைக் கடத்த வேண்டும். ஒன்றையும் மாற்றாதவனுடைய வழியை அநுசரித்தால், இந்தியா நிலை பெறாது. எல்லாவற்றையும் மாற்றுபவன் வழியை அநுசரிப்பினும், இந்தியா ஒழிந்துவிடும். அறிஞர் நடக்கும் வழி இவ்விரண்டுமல்லாத வேறொன்றும். இந்தியாவிற் குரிய இலக்ஷணம் ஞானத்தன்மை. அதனை எவ்வாறு காப்பது? இதுவே நாம் ஆராய வேண்டிய விஷயம். ஏனெனில்; இனி நடை பெறும் உலக நிகழ்ச்சியில், இந்தியா வகிக்கவேண்டிய உத்தரவாதம், இந்த ஞானத்தன்மையேயாம். இக்குணசீலத்தைக் காப்பாற்றிக் கொண்டே, ஏனைய ஜாதியாரிடமிருந்து கிரகிக்க வேண்டிய ஒவ்வொரு நன்மையான விஷயத்தையும், உயர்வு பயக்கும் ஒவ்வோர் அறிவையும் கைப்பற்றி, இந்தியரின் ஸ்வபாவத்திற் கலக்கும்படி புகவிட வேண்டும். நல்லவற்றை நாடிப் பெருக்கவும், தீயவற்றைக் கடிந்து விலக்கவும் வேண்டும். இந்தியாவின் இலக்கணத்திற்குப் பொருந்தாதவற்றை மேற்றிசையாரிட

பிருந்து கைக்கொள்ளாமலும், காலதேசபரிபாகத்தே பழமை யையே பாராட்டிச் சிலாபமாகாமலும், நாம் நடக்கவே ண்டும். புதியன புகுதலும், பழையன கழிதலும் நம் முடைய கடமைகளாம்.

இதுதான் நாம் நிர்மாணிக்க வேண்டியது. உள்ளவாறு நிர்மாணிப்போமாயின், இனி இந்தியாவுக்கு வரப்போகும் மேன்மையும் சம்பத்தும் முன்பு இருந்திரா; அவ்வளவு உயர்ந்தவை. அவ்வாறு சரியானபடி நிர்மாணிக்காமற்போ னால் இந்தியதேசமென்ற பெயரே போய்விடும். இந்தியா வின் அறிவும் ஞானமும் அந்நிய தேசம் புகுந்துவிடும். ஆரிய வகுப்பின் மூத்த புதல்வரான இந்தியாவின் ஜன்மிய தர்மத்தை அந்நியருள் எவரேனும் ஒருவர் வகிப்பர். ஆ னால், உள்ளபடி, இந்தக்கதி இந்தியாவுக்கு ஒருக்காலும் வரா து. உலகத்தின் கண்மணியின் றாம் இந்தியா மறையாது. தெய்வ ங்கள் ஆளுகை உள்ளமட்டும் தெய்வாநுகூலம் பெற்றுள்ள இந்தியா உலகசரித்திரத்தினின்று விட்டு விலகாது.

இதில் தவறுதல் ஒன்றும் செய்யாதேயுங்கள். மேம் பாட்டை அடையவேண்டின், தியாகத்தினாற்றான் அது சாத் தியமாகும். தியாகமின்றி நன்மை உண்டாகாது. தியாகத் தினி தேவலோகம் எட்டுமென்றெண்ணிப் பொறுக்கலாங்கிட் டா. இந்தியர்கள் தங்கள் தேசத்தின் க்ஷேமத்தையும் மேம் பாட்டையும் கருதித், தங்களைத் தாங்களே தியாகஞ் செய்ய

வேண்டியிருப்பின் செய்தற்குச் சம்மதிக்க வேண்டும். இல்லையேல், விசேஷமானமில்லை. தப்பெண்ணங்கள் பலமாயிருக்கின்றன. நீங்கள் அவற்றைத் தாக்கித் தொலைக்கவேண்டும். இம்முயற்சியிற் பலர் தடுமாறுவார்கள். அவ்வாறு பலர் முயற்சிக்க, தப்பெண்ணங்கள் என்ற மதில் சற்று இடங்கொடுக்கும்; பின்னர் இலகுவாக வசப்படும். என் முன்பாக இருக்கின்றவர்களிற் பேச்சு மாத்திரம் இல்லாது, செய்கை புரிய வல்லவர்கள் யாரேனும் இருக்கிறீர்களா? வேலை செய்யத் துணியாமல், நான் சொல்லும் வார்த்தைகட்கு இலகுவான உத்தரமாகக் கைகொட்டிக் கொக்கரித்து விடுவீர்களா? இச்சபையிலிருந்து கேட்டு 'ஹம்' என்று அங்கீகாரஞ் செய்து விட்டு, சபைகலைந்தபின், பழக்கம்போலத் துக்கம் கொடுக்கக் காரியங்களை, காதில் விழுந்தவைகளைப் போற் செய்துகொண்டிருப்பீர்களா? இந்திய தேசம் உய்யுமாறு, உங்களது செல்வ பதவியையும், செல்வாக்கையும், உங்கள் உயிரையுங்கூட, அதிக பெறுமான காரியமாகிய உங்கள் புதல்வர்களையுங்கூடத் தியாகஞ் செய்யத் துணிவீர்களா? உங்களிற் சிலரேனும் இத்துணிவுடையவர்களாயின் இந்தியாவிற்கு விசேஷமாய் ஆகிவிட்டது. அன்றி, நீங்கள் கோழைத்தன முடையவர்களாக விருப்பின், துர்க்கதி வந்திருக்கும்: இந்தியா அழிவுறும்; இந்தியா இனி இராது.

[illegible]

வுரையாகப் பிரஸ்தாபித்த விஷயங்கள் இத்தன்மையன: இனி, முற்கால தர்மங்களின் உயர்வையும், இக்கால ஆசாரங்களையும் இனிச்சீர்திருத்த வேண்டிய முறைகளையும் பற்றி விசாரிப்போம்.

இவ்விசாரணையில், சாஸ்திரங்களினின்று மேற்கோள்களாக அநேக ஆதாரங்களைக் காட்டவும், அவற்றின்மீது பாஷ்யகர்த்தர்கள் புரியும் சண்டையிற் புகவும் மாட்டேன். ஒன்றற் கொன்று முற்றும் விருத்தமான விஷயங்களுக்கு முன்பின்சம்பந்தமும் சந்தர்ப்பமும் வாய்த்துத் தனித்தனி ஆதார சாஸ்திரமேற்கோள்களும் கிடைக்கலாம். பொதுவான ஆதாரசாஸ்திரங்கட்கு, அவரவர்க்கு வேண்டியவாறு அருத்தம் பண்ணிக்கொள்ளலாகும். ஆனால் நான் கற்றறிந்தபடியும், நான் நேரிற் பிரத்தியக்ஷித்துக் கண்டதையும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அத்தர்மங்களின் அழகும், அந்து அறிவிற்கு நேர்மையாக விருத்தலும் உங்களுக்குத் தானே புலனும். சிற்சில சந்தர்ப்பங்களில், உதாரணமாக, சாஸ்திர மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவேன். ஆனால், சாஸ்திரங்களைப் பெரிதும் ஆராய்ச்சி செய்து அதன் மூலம் இந்தத் தருமங்களை அறிந்தேனல்லேன். ஆயினும், உள்ளபடி நிகழ அந்த தருமங்களைக்கண்ணுற்றேன்.

இன்று நாம்படிக்கப்புகும் விஷயம் இலகுவானது. கேட்கிறவர்களுக்கு அதிக விபரீதமான ஆக்ஷேபணைகளி

ல்லை. அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிற விஷயத்தில் சிரமசாத்தியமானதொன்று இதிலிருக்கிறது. நான்கு ஆசிரம தர்மங்களினுயர்வைப்பற்றிச் சொல்லுகிறது பொதுவாய் சிரமமானதன்று.

நான்கு ஆசிரமங்களென்பது உயிர்வாழ்க்கையை ஜனனம் முதல் மரணாந்தம் நேர்மையாய் நடைபெறும்படி செய்வதுதான். இவைகளில் முதலிரண்டான பிரஹ்மசரியமும் கிருகஸ்தமும் ஜீவன் பிரவிர்த்தி மார்க்கம் பற்றிக் கொள்வன். இது உலகவிகாசம். ஒவ்வொருவனும் தனக்குள்ளே யெம்மாத்திரமாவது இதுபற்றி யொழுகுவான். இந்த இரண்டு ஆசிரமங்களும் ஒவ்வொருவனுங் கைக்கொண்டு நடப்பான். மற்றைய இரண்டான வானப்பிரஸ்தம் சந்நியாசம் ஜீவனின் நிவிர்த்திமார்க்கங்களாம். உலகத்தை விட்டு விலகுதற்குற்ற முறைகளாம். உயிர்வாழ்வின் நேர்மையை அறியவேண்டின் இந்த வேற்றுமை அறியத்தக்கது. ஒவ்வொரு மனிதனும் ஒழுகவேண்டிய நெறியை முன்னோர்கள் இவ்விதம் நான்கு ஆசிரமமாக அழகாய் வகுத்திருக்கின்றார்கள். ஒருவன் அதை அநுஷ்டித்து நடைபெறுவானாகிற் பிரவிர்த்தி தர்மங்கள் இன்னவென்று உணர்வான். முதன்மையில் பிரமசரியநிலைமை சரியானபடிபற்றிச் சீராய்ப்பழகத் தக்கது. பின்னர் கிருகஸ்தநிலைமையில் உலகவிஷயங்களிற் சுறுசுறுப்பாய்ப் பலவாறு தொழில்புரிதல்.

இதன்பின்னர்ச் சிறுகச்சிறுக உலகப்பற்றினின்று ஒழிதல், உள்நோக்குதல், ஏகாந்தத்தைநாடுதல், உபாசனை, தியானம், உலகவிஷயங்களிலிருக்கின்றவர்களுக்குப் புத்திமதி கற்பித்தல் முதலியன—வானப்பிரஸ்த நிலையின் தர்மங்களாம்.

இதன்பின்னர்ச் சிறு பான்மையாவது அநுஷ்டிக்கக் கூடியதானது முற்றும் துறந்தநிலை. இந்தமுறையை அநுஷ்டிக்கிறவன் இதைவிடச் சிறந்ததும் அறிவுக்கு ஒத்ததுமான வேறுமுறை ஜனனமுதல் மரணமீறாக உண்டென்று கருதான். இந்தமுறை ஒருதேசம்பற்றி மாத்திரம் ஏற்பட்ட தர்மமன்று. இது எல்லா ஜாதியாருக்கும் எக்காலத்தும் பொருந்தும். வாழ்நாளில் ஒருபாதி சுறுசுறுப்புள்ள உலக வியாபாரம் பற்றியது. மற்றொருபாதி உபசாந்தியும் ஒழிவும்பற்றியது. கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும், நேர்மை அமைந்த இந்த உயிர்வாழ்க்கை நெறி திரும்பவும் அநுஷ்டிக்கத்தக்கது. இப்படியாமாகில் தங்களுக்குரிய காலத்திற்கு முன்னரே கிருகஸ்தர்களாகும் பாலர்கள் இரார். ஒழிவு அமையாமல் இயமன் உயிர்நீக்கும் வரை மணத்திலும் கவுரவத்திலும் பற்றுள்ளவர்களான விருத்தர்களும் இனி இரார்.

மேற்கண்ட நான்கு ஆசிரமங்களை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துப்பேசுவோம். முதன்மையில் பிர்ஹ்மசரிய

த்தின் பிராசீனமுறை என்ன? அதை உங்களுடைய சாஸ்திரங்களில் விரிவாயறிந்து கொள்ளுங்கள். அதை இங்கு நான் சுருக்கிச் சொல்லுவேன். ஒவ்வொரு பையனும் அவனுடைய எல்லாசுபாவங்களும் நன்றாய்ப் பயிற்சியடையும் வண்ணம் ஒரு குருவின் சுவாதீனத்தில் ஒப்புவிக்கப்படுவான். மனிதரியல்புக்குரிய நான்கு முக்கியமான சுபாவங்கள் விகாசிக்குமாறு அவர்களுடைய படிப்பு நடைபெறவேண்டும்.

(1) பாலர்கள் வேதஅத்தியயனம் செய்துவந்தார்கள். சமயநெறிகளைக் கற்றுணர்ந்தார்கள். சமய சாஸ்திரங்களைப் படித்தார்கள். தினந்தோறும் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களிற் பயின்றார்கள். இவ்விதமாக ஸ்ரீ இராமசந்திரரும் வேதசாஸ்திரங்களைக் கற்றும் காலைமாலை சந்தியாவந்தனம் செய்தும் வந்தார்; ஞானம் உதயமாகுதற்குரிய சாஸ்திரப்படிப்பும் கர்மானுஷ்டானமுஞ் செய்து வந்தார். அவருடைய குருவினிடத்தில் எவ்வண்ணம் சாந்தத்திற்கு காரணமான ஆத்மதத்வ சாஸ்திரத்தை உணர்ந்தாரென்றும் கர்மஸம்ஸ்காரங்களில் எப்படிப் பயின்று அபிவிர்த்தியடைந்தாரென்றும் நீங்களே தெளிந்துகொள்ளலாம்; இப்படிக்கு அவருக்கு வேண்டுவதில்லை: ஆயினும் பாலர்கள் அனுஷ்டானத்திற்குத்தாம் திருஷ்டாந்தமாக இருக்கும்படி ஒழுகலாயினர். இது பிராசீனப் படிப்பில் முதன்மையில் கவனிக்கவேண்டிய விஷயம்.

(2) பின்பு பாலர்கள் நீதிமுறை கற்று அதன்படி பயின்றார்கள். ஆத்மார்த்த முறையிலும் நீதிமுறையிலும் பயின்றார்கள். வணக்கம் மரியாதை சத்தியம் தைரியம் வினயம் இம்முறைகளைக் கற்றார்கள். மாதா பிதா குரு இவர்களை வணங்கி யன்புபாராட்டவும் தன்னைப்பேணாது ஜீவகாருண்யத்தைக் கைக்கொள்ளவும் அவர்கள் அறிவுறுத்தப்பெற்றார்கள். அவன் பிறர் க்ஷேமத்தைக் கருதுவான் என்றது பாலனுடைய நீதிஅப்பியாச முறையின் மகுடமாகப் பாவிக்கப்பட்டது.

(3) புலனறிவு அபிவிர்த்திசெய்யப்பட்டது. பலசாஸ்திரங்களைப் பாலர்கள் கற்றார்கள். அவைகளின் தத்துவங்களிலும் அவைகளின் அனுஷ்டானக் கிரமங்களிலும் பயின்றார்கள். மனிதப்பிறப்பின் மூன்றாவதான புலனறிவும் நீதி ஆத்மதத்வஞானம்போன்று அபிவிர்த்தியானது.

(4) பாலர்கள் சரீரப்பயிற்சி செய்தார்கள். விளையாட்டுகளையும் சரீரப்பயிற்சிக்குரிய கசரத்துகளும் குதிரை முதலியன ஏறி நடத்தவும் சாரத்தியஞ் செய்யவும் தங்கள் சரீரங்களைப் பேணவும் மனுஷவுதவி நாடும் மிருகங்களைப் போஷிக்கவும் கற்றுப்பயின்றார்கள். இவ்விதமாகப் படிப்பு எல்லா பாவங்களும் விகாசிக்கும்படியாய் அமைந்திருந்தது. ஆகப்பாலர்கள் உலக வியாபாரத்திற் பிரவேசித்தால் ராஜாங்கத்திற்குத் தகுதியானவர்களாகி தெய்வ பக்தி நீதி

முறை கல்வி சரீர பலம் இவைகள் நிறைந்தவர்களாக ஆகி வந்தார்கள். இந்த நான்கு முறைகள் பற்றியே பூர்வீகத்தில் இந்தியாவிற் கல்விப்பயிற்சி நடைபெற்றுவந்தது.

இக்காலத்திய ஸ்திதியைப் பார்ப்போம். ஒரு பாவம் மாத்திரம் விர்த்தியடைகிறது. அதாவது புலனறிவை அபிவிர்த்திசெய்யக் கூடிய படிப்புக் கற்பிக்கப்படுகிறது; ஏனைய மூன்றும் கவனிக்கப்படாமல் விடப்படுகின்றன. தத்துவ ஞானம் நீதி முறை சரீரப்பயிற்சி இவைகளை முற்றும் விட்டுவிட்டார்கள். புலனறிவை விருத்தி செய்கிறதும் சரியான படியாகவில்லை. இம்மாதிரியாய படிப்பினால் உலக காரியத்துக்குத் தகுந்த மனிதன் எப்படி ஏற்படுவான்? ஒரு மனிதனின் நாலிலொருபாக மாத்திரம் கல்வியினால் விருத்தியடையப்பெறுகிறது. நீதிமுறையை அசட்டைபண்ணிவிட்டார்கள். தத்வஞானத்தை முற்றுங் கைவிட்டார்கள். சரீரமோ உயர்ச்சியின்றி துர்ப்பலமாகவும் அதிகவேலைகொண்டு தளர்ச்சியடைந்துமிருக்கிறது. இவ்வண்ணமாகக் கால்பாகம் மட்டும் அதுவும் பூர்ணமாகவில்லாமல் அறைகுறையான விருத்தியம்சம் பெற்றதாயிருக்கின்ற ஜாதியாருக்கு என்னவித யோக்கியதை இருக்கக்கூடுமென்று நினைக்கிறீர்கள்? இம்மாதிரியான கல்வியின்பயன் என்னை? புத்திநுட்பமுள்ள மனிதர்கள் உண்டாகலாம், ஆனால் அவர்கள் சுயநயவிருப்பமுள்ளவர்களாயும் பிறர் க்ஷேமத்தைக் கருதாதவர்களா

யும், தேசத்தின் க்ஷேமத்தைக் கொஞ்சமேனும் நினையாத வர்களாயும், தாமுண்டு தம்குடும்பமுண்டு தாம் சௌக்கிய மாயனுபவித்தாற்போதும்: பிறர்கஷ்டம் துக்கம் முதலியன சற்றேனும் கவனியாமல் ஈரமில்லாத நெஞ்சினராயுமிருப் பார்கள். புத்திநுட்பமாத்திரம் பெற்றுச் சீலம் மரியாதை பொதுநன்மைபாராட்டுதல் உள்ளபடி வாய்மை பேசுதல் வார்த்தைநேர்மை ஒழுக்கம்நேர்மை இவைகளின்றி ஒழுகு வார்கள். இந்த ஸ்திதியைத்தான் பார்க்கிறோம். இது சம யமுறை, நீதிமுறை இவைகளைக் கற்பிக்காமலிருந்ததின் தோஷப்பயனும். தம் லாபத்தைக்கருதாமல் பிறர்க்ஷேமத் திலேயே கண்ணுகவுள்ளவர்கள் எத்தனைபேர்கள் இக்காலத் தில் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? பிறர் மேம்பாட டை அடையாமல் தாம் மேன்மையை யடையவொண்ணுது என்றுணர்கின்றவர்கள் எத்தனையுண்டென்று நினைக்கிறீர் கள்? எங்கும் வியாபகமாய் எங்கும் நிறைந்ததாயுள்ள பிராணன் ஒன்றே என்றும் அதினின்று தம்மை வேறுபடுத் திச் சொந்தலாபத்தைக் கருதிப் பிறர்க்ஷேமத்தில் அலக்ஷிய முள்ளவர்களாய் நடைபெறுவது தமக்கே பிராணஹானி என்றும் பிறருக்கு ஈசுவரப்பிரசாதம் வாராமல் தடுப்போ மாகில் அக்கதியே தமக்குமென்றும் தாம்வேறு பிறர்வேறு என்ற ஃவரையேற்படுத்திறைல் தமக்கு ஈசுவரன் அருள் இன்றி முடிகிறதென்றும் உண்மை உணர்கிறவர்கள் எத்தனை

பெயர்கள் இக்காலத்திலிருக்கின்றார்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

இனி நாம் செய்யவேண்டியவையென்னவெனில் சங்கல்ப மாத்திரம் போதாது; இன்றுசெய்ய வேண்டிய வேலையை இனிச்செய்யலாம் என்று இராமல் இன்றேசெய்து முடிக்க வேண்டும். பண்டைக்காலத்து முறையை இக்காலத்திலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய முயற்சி உங்களுடைய பிரயோஜனார்த்தமாகச் செய்யப்பட்டுவருகின்றது. நான் பேசுகின்ற அறை அமையப்பெற்ற இந்தக்கலாசாலை பிராசீனக் கல்விமுறையைத் திரும்ப நிலைநாட்டுவதற்காக ஏற்பட்டுள்ளது. அந்த நான்குமடங்கான முறையால்தான் இந்தியாவுக்கு க்ஷேமகாலமுண்டாகும். ஆனால் முன்முறைகள் எல்லாவற்றையும் திரும்ப நடைபெறும்வண்ணம் செய்வதென்று எங்கள் கருத்தன்று. அப்படிச்செய்வதில் ஆதிமுறையின்கருத்துப் பயன்படும்படி தற்காலகதிக்குக்கூறிய படி அதை அமைக்கப் பெறலாகும். ஆங்கில நாட்டிலும் அதன் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் மேற்கண்ட நான்குமடங்கான கல்விப்பயிற்சி நாட்டப்பெற்று வருகின்றதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்போலும். ஆங்கில நாட்டில் எந்தப்பாடசாலைக்குப் போனாலும் தொடக்கத்தில் கடவுள் வணக்கமும் சமயகிரந்தங்களின்படனமும் நடக்கும். ஒவ்வொருபாலனும் ஈசுவர உபாசனை செய்

முறை கற்றுக்கொள்ளுகிறான். நீதிமுறைகளில் தெளிவாய்ப்போதனை பெறுகிறான். சமயம் நீதி இவ்விரண்டுடன் சரீரப்பயிற்சியும் பழகுகிறார்கள். இது கட்டாயமாய்ப் பழக வேண்டியது. ஒவ்வொரு பையனும் தன்னவயவங்கள் பலப்படவும் சரீரம் உறுதிப்படவும் விளையாடவேண்டும். கஸரத்துச்செய்யவேண்டும். ஹாரோ, ஈடன், ரக்பி, வின்சேஸ்டர் முதலான விடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களைப் போய்ப்பார்ப்பீர்களாகில் நான்குமடங்கான கல்விப்பயிற்சி கிறிஸ்துமார்க்க நெறியில் நடைபெறுவதைக் காணலாகும். ஆதிமுறையின் உயர்வான பாவம் ஆசரிக்கப்படுகின்றது. அந்தக்கல்விமுறை நேர்மையுள்ளதாக விருக்கிறது. இதனால் சகலவிதமாகவும் பயின்ற தேசாபிமானமுள்ள மனிதர்கள் உண்டாவதற்கு ஆஸ்பதமாகவிருக்கின்றது. மதாபிமானமும் தேசாபிமானமுமுண்டாகிவருகின்றன. ஹாரோ பாடசாலையைச்சார்ந்த உபாசனைமண்டபத்திற்குட்போய்ப் பார்ப்பீர்களானால் அதன் சுவர்களில் தேசத்திற்கனுகூலமான கிருத்தியங்கள்செய்து மேன்மைபெற்று ஆதியில் அப்பள்ளிக்கூடத்திற் கல்விபயின்றோர் பெயர்கள்பதிந்த தாமிரசாசனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அம்மண்டபத்தில் அப்பெயர்வரைந்த தாமிரசாசனங்களைப், பையன்கள் ஈசுவரவுபாசனைசெய்கையிற் பார்க்கும்போது, தாம் இப்போது இருக்குமிடத்தில் முன்னிருந்தவர்களான ஹாரோப்பையன்

கள் மனிதர்கள் ஆன மேல்தேசத்திற்கும் இராஜாவுக்குமாக ஆபத்துக்காலத்தில் தங்களுடைய உயிரையே தியாகஞ்செய்து தேசத்தின்மேம்பாட்டை விருத்திசெய்தவர்கள் இவர்களல்லவோவென்று தங்கள் மனத்திற்பதிய, இனி அம்மாதிரியே நாமும் நடக்கமுயலுவோம் என்னும் எண்ணங்கள் உண்டாகாமலிருக்கக்கூடுமா? அம்மண்டபத்தில் ஈசுவரவுபாசனை செய்கிற ஒவ்வொரு பையனுடைய மனத்திலும் கௌரவமான ஒழுக்கபாவமும் தேசாபிமான பாவமும் தானேயுண்டாகும். இவ்வுயர்வான பாவங்கள் இம்மாதிரியாகப் பையன்கள் மனத்திற்பதிய, தேசாபிமானிகளாகவும் தேசத்தின் க்ஷேமத்தைக் கருதினவர்களாயும் தம் தேசத்திற்கு கவுரவம் பயக்கக்கூடிய சிலர்களாகவும் ஆகிறார்கள்.

இம்முறையை இத்தேசத்திலும் நாட்டவேண்டும்:— இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிறவிதம் எப்படி? நாங்கள் 40, 50 பெயர்களா பிறர் உதவியில்லாமல் இப்பெருங்காரியத்தைச் செய்யவல்லவர்? அது சரியன்று. இஃது உங்களுடையவிஷயமுமன்றோ? எங்களுடையதுமாத்திரமா? உங்களுடைய பிள்ளைகள்தாம் இனி இந்தியாவின் மனிதர்கள் ஆவார்கள். அந்தயோக்கியதைக்குத்தக்க கல்வியைக்கற்பித்துப் பிராசீன தர்மநெறிகளைப் புகட்டவேண்டிய முயற்சிசெய்கின்றீர்களா? நான் வசனிக்கிறதைச்சிலாகித்து ஆரவாரஞ்செய்தால் மாத்திரம் போதாது. இந்தவிதமான

படிப்பினை நடைபெறுமாறு வேலை செய்வீர்களா? உங்களுடைய சொந்தக் காரியம்போல், உங்களுடைய காலம் பொருள் முதலியனவற்றை இந்த விஷயத்திற்கு அர்ப்பணஞ்செய்வீர்களா? அப்படிச்செய்யாவிடிற் பிறர்செய்கிற வேலையை வீணாகமெய்ச்சுவதில்மாத்திரம் என்ன? அப்படிச் செய்ய நீங்கள் அநர்கர்களாவீர்கள்.

இந்தக் கல்வி விஷயத்தில் இன்னும் சில சமாசாரங்கள் நான்சொல்லவேண்டியிருக்கின்றன. அவைகளைச்சிரத்தையாயுங் கவனமாயுங் கேளுங்கள். பழைய சாஸ்திரங்களைப் படிக்கிறதினால் நான் தெரிந்தவிஷயம் யாதெனில் முற்காலத்தில் படிக்கின்ற சிறுவர்கள் எப்போதும் பிரஹமசரிய விரதத்தைக் கைக்கொண்டுவந்தார்கள். ஒவ்வொரு மாணாக்கரும் விவாகமின்றிப் படிப்புமுடியும்வரை கிரகஸ்தஆச்சிரமத்தையடையாமலிருந்திருக்கிறார்கள். 36, 18, 9 வருஷங்கள் மாணாக்கராகக் கல்வி கற்றுக்கொண்டு வரவேண்டியகாலம். இக்காலம் முடியும்வரை விவாகமில்லாத நோன்பையே கைக்கொண்டு மாணாக்கரொழுகக்கடவர். கிரகஸ்தனாகு முன்னரே, முற்காலத்தில் போர்வீரராவார்கள். அந்த ஆதி உயர்வான ஆசாரணை யிக்காலத்தில் என்னவாகவாயிற்று? இக்காலத்திய பாடசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் குழந்தைகளைப் பெற்றிருக்கிறார்கள். கலாசாலை புகுமுன்னமேயே மாணாக்கர்கள் மக்கட்பேறுபெற்றிருக்கிறார்கள்; அஃதாவது, அவர்

களே குழந்தைகள்! அவர்களுக்குக் குழந்தைகளுண்டாயிருக்கின்றன. இத்தன்மையானது, ஆதி உயர்வான தர்மங்களுக்கு முற்றும் விருத்தமானது. இஃது இந்தியாவிற்கு க்ஷீணத்தைப் பயக்கத்தக்கது. இதனுல் கிடைக்கிறதென்னவென்ருல், கலாசாலைப்படிப்புமுடிய பூர்ணசக்தியும் வீரியமுமுள்ளவராக விருக்கவேண்டிய மாணுக்கர், சரீரபலங் குன்றி நாடி நரம்புகள் தளர்ந்து மூளை நைந்துபோய் நடைப்பிணம்போலிருக்கிருர். இக்காலத்துப் படிப்போ சரீரவறட்சியையுண்டுபண்ணத்தக்கது. கிரகஸ்தாச்சிரம தர்மத்தையும், மக்கட்பேறு முதலிய உத்தரவாதத்தையும் வகிக்கிறதினுல் இன்னுமதிக க்ஷீணகதி ஏற்படுகின்றது. என் சகோதரர்காள்! இது சரியன்று. இஃது இந்தியாவின் நாசத்திற்குரிய வழி. யௌவன தசையிலிருக்கவேண்டியவர்கள் வார்த்திகத்தையடைகிருர்கள். இருக்கவேண்டியபடி நீங்களில்லையென்று அறியவில்லையா? அளவுக்குமீறிய பாரத்தை மூளை வகிக்க மாட்டாதென்று நீங்களறியவில்லையா? இந்தியர்கள் ஆகிருதி வரவரக்குறைவுபடுகிறதை நீங்கள் கவனிக்கவில்லையா? பால்யவிவாகத்தினுல் ஆகிருதி வரவர க்ஷீணமாகிக்கொண்டுவருகிறது. இந்தியாவின் சிலநாடுகளில், தொட்டிற் குழந்தைகளுக்கு விவாகஞ்செய்கின்ருர்களாம். இதனுல் பால்யத்திலேயே மக்கட்பேறு ஏற்படுகிறது. பிராசீன தர்ம சாஸ்திரிகள் மூலமாய், தேவர்கள் இந்தியாவுக்கு உபதேசித்த தர்மங்களின் முறைப்படியாகவா இப்போது இந்தியர் ஒழுகுவாராகின்ருர்கள்?

இவ்வினுவுக்கு மறுமொழியுங்களாற்றுன் முடியவேண்டும்; இது விஷயத்தில் சிரமமிருக்கிறதென்று நன்றாய் நாமறிவோம். முன் தர்மப்படி யனுஷ்டிக்க ஒருவன் தைரியமாய்முயன்றால், தம்முடையமனத்திலப்படிச்செய்ய விரும்புகிறவர்களுங்கூட தைரியமின்றி வெளியிலே கோபித்துக் குற்றஞ்சொல்ல அனேகர்கள் கிளம்புகிருர்கள். "தாங்கள் சொல்லுகிறபடிசெய்தல் நலம், அவசியம்" என்று என்னிடமெத்தனை பிதாக்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆனாலதையனுஷ்டிக்கவும், அதனாலுண்டாகும் நிந்தையை லக்ஷியம் பண்ணுமலிருக்கவும் எத்தனைபேருக்குத்தைரியமுண்டு. இவ்விதமான தைரியத்தினாற்றுன்பெரியகாரியங்களை நடத்தமுடியும். தேசம் விமோசனம் பெறும். கோழைத்தனத்தினால் கீழானஸ்திதிக்குவந்துவிட்டோம். இனி, மேலானஸ்திதிக் கேறவேண்டுமானால் தைரியத்தினாற்றுனமையும். அறிவின்மையாலிழிவான நிலைமையிலிருக்கின்றோம். கல்விப்பயிற்சியினாலும், பிராசீனவுயர்வான தர்மங்களைத்திரும்பக்கைக்கொள்வதினாலும், நாம் மேம்பாட்டைப்பெறவேண்டும். பிராசீன தர்ம முறைகளுக்கே விரோதமாக நடக்கமாட்டோம், மனத்துக்கு விரோதமுஞ் சரீரதர்மத்திற்குத் தீங்குவிளைவிக்கிறதுமான வழக்கத்தை யனுஷ்டிக்க மாட்டோம் என்று, உங்களிற்சிலரேனுஞ் சொல்லத் தைரியமுள்ளவர்களாகி, எவர் ஆக்ஷேபணையுங் கவனியாமல் விவாககாலத்தைக் கொஞ்சந்

தாமதிக்கச் செய்வீர்களேயாமாகில், வீரியமுள்ளவும், பலமுள்ளவுமான ஜாதியா ருற்பவிக்க ஹேதுவான அங்குரார்ப்பணஞ் செய்தவர்களாவீர்கள். ஏனையர் போதிக்கிறபடி பிராசீன வழக்கங்களை விட்டுவிடுங்களென்றும், நவீன வழக்கங்களை யனுஷ்டியுங்களென்றும் நான்சொல்லவரவில்லை. பிராசீன வழக்கங்களைத் திரும்பவனுஷ்டியுங்களென்று சொல்லுகிறேன். அதற்கப்படியாக, பெண்களுக்கு விவாகம் 14-வது வயதிலும், சிறுவர்களுக்கு விவாகம் 18-வது வயதிலுஞ் செய்யவேண்டுமென்றும், ருதுசாந்தியதற்கு 2-வது கிரமித்ததின்மேலிருக்கலாமென்றுஞ் சொல்லுவேன். இந்தவிதியனுஷ்டானம் பெறின் ஜாதிவீரியத்ததாகவாகுமென்று நீங்களே சீக்கிரத்திலுணர்வீர்கள். எந்தப்பாடசாலையிலுங் கலாசாலையிலு மிந்தவிதி யனுஷ்டானத்திற்கு வருமென்று நம்புகிறேன். உடனேயே பிராசீன வொழுக்கத்தைக் கைக்கொள்ளமுடியுமென்று நாமெண்ணவில்லை. ஆனாலதை நோக்கியே வரவர மேன்மேலும் முயன்றுகொண்டுவரக் கூடுமென்று நம்புகிறேன். இதை உதாரணமாக மற்றவர்களும் பார்த்து அனுஷ்டிக்கத்துணிவார்கள். இவ்விதமாக இந்தியர்களுக்குச் சரீரதிடமேற்பட்டு வீரியமுள்ள தீரர்களுண்டாகலாமென்று நினைக்கிறோம்.

பிரஹ்மசரியமானதின்மேலென்னபருவத்தை யடைந்தவனுயக் கிரகஸ்த ஆச்சிரமத்திற்பிரவேசிக்க வேண்டியவனாக

விருக்கிறன்? இந்தவாச்சிரமமானது சீலத்தைவிருத்திபண்ணுகிறதிலதிகமுக்கியமானதென்று நீங்கள்தெரிந்துகொள்ளலாம். இந்த ஆச்சிரமத்தின்கண் பிறர் க்ஷேமம் கருதல், மிதமாகவிருத்தல், தம்மின்மெலியாரிடமன்புபாராட்டி புகு விபுரிதல், இலகுவாய்த் தியாகஞ்செய்யப் பயிலுதல் அஃதாவது, அன்புபாராட்ட அதன் பிரயோஜனமாக அன்பு பயத்தல் முதலிய கற்பனைகளையடைய இவை சாதகமாகவிருக்கின்றன. உலகத்தின்கண்பரிசுத்தமானமனோபாவங்களின்முதன்மையானதும் ஆத்மா ஈசுவரனிடம் வைக்குமன்புக்கடுத்தபடியானதுமான ஸ்திரீ புமான்களின் பரஸ்பர அன்புநிகழ்ச்சியும், பிதா தன்மக்களிடமும் மக்கள் பிதாவினிடமும் பாராட்டுமன்பும், முன்னதிலாதரவும் பின்னதில் நன்றியும் மரியாதையு மிவைகளெல்லாஞ் சீவன்கிரகஸ்தாச்சிரமமடையா நிலைபிற் படிப்பினைகளாம். இந்த ஆச்சிரமம் மற்றைய ஆச்சிரமங்களுக்குற்ற துணையாம். "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை." மேலும் பற்றுள்ளவிடத்தில் பற்றற்று இருக்கப்பழகவும், எல்லாப் போக சம்பத்துக்களும் உள்ளவிடத்து ஜிதேந்திரியனாகவிருக்கவும், இல்லறமனுகூலமானது. பிராசீன உயர்வான வொழுக்கமிருக்கலாம்; அது நடைபெற்றுப் பிரகாசிக்கவேண்டுமானாலெவ்வளவு மாறுத விக்காலத்திய வழக்கத்திற் செய்யற்பாலதாகவிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி விஸ்தார

மாயினி இந்திய ஸ்திரீகளைப்பற்றிப் பேசும்போது வசனிப்பேன். இந்தியாவின் விவாகதர்மத்தினுயர்வுக்குச் சமானமானது எங்குமில்லை. ஆனால் அந்த வுயர்வான தர்மம் இக்காலத்தி லனுஷ்டானத்தில் துர்லபமாகவிருக்கிறது.

பிதா, மக்கள் இவர்களுடைய பரஸ்பர வொழுக்கங்களைக் கவனியுங்கள். அவைகளிருக்கவேண்டிய முறைப்படியிக்காலத்தி லிந்தியாவிலிருக்கின்றனவா? பிதா சௌஜன்னியமின்றியும் மக்கள் கூச்சமும், அச்சமுமுள்ளவர்களாகவுமிருக்கின்றார்களல்லவா? இருவருடைய வொழுக்கத்தினாலும் மகன் பிதாவிடம் அந்தரங்கமில்லாதவனாக விருக்கின்றானல்லவா? மகன் சந்தோஷமாகவு முல்லாசமாகவு மிருக்கவேண்டி, கிரகம் சுகமாகவும், பிரீதிகரமாகவு மிருக்கும்படி பிதா செய்விக்கிறானா? மகனின் வேண்டுகோள்களைக்கருதாமலும், பால்யனாயிருக்கின்றமையால் அவனுற்சாகங்களைக் கவனியாமலும், தகப்பன்மார் தங்கள் காரியங்களைப்பார்த்துக்கொண்டு உள்ளடங்கினவர்களாகவும் ஆலஸ்யமுள்ளவர்களாகவும் இருக்கின்றார்களல்லவா? என்னபரிதாபம்! அந்தோ! மகன், தகப்பனிடஞ்சொல்ல அச்சமுள்ளவனாகத்தீயவைபற்றிய வுல்லாசங்களில் காலங்கழிக்கச்செல்லுகின்றான். தகப்பன்மார் அன்பும் ஆதரவுமுள்ளவர்களாகில் நல்லவைபற்றிய வுல்லாசங்களில் மகன் நேர்மையாக வொழுகுவானன்றோ? அந்தோ என்ன பாவம்! தகப்பன்மார் மக்களிடத்தில் அன்

பும் சிநேகமும்பாராட்டாமலும், பக்ஷம்வெளிப்படப்பாராட்டாமல் அதிகாரம் பாராட்டிக்கொண்டும் இருக்கிறதினால், இந்திய வாலிபர்கள் நீதிமுறைதப்பிப்பதட்டமுள்ள துன்மார்க்கர்களாகின்றார்கள். வாலிபகாலத்தில் மக்களிடம் பக்ஷமும் இன்சொல்லும் ஆதரவான வொழுக்கமும், தகப்பன்மார் அமைந்து நடைபெறவேண்டும். தங்களுக்குத் தங்கள் கிரகஞ் சுகமில்லையென்றும், அருவருப்புற்றதாக இருக்கிறதென்றும், அதைவிட்டு விலகவேண்டுமென்றும் சிறுவர்கள் சிலவேளைகளில் என்னிடஞ் சொல்லிக் கொள்ளுவார்கள். அதனாற்றான் நான் இவ்வண்ணஞ்சொல்லுகிறேன். இரக்கமின்றி அதிகக்குரூரமாக அதிகாரஞ்செலுத்துவதினால் இந்தியகிரகத்தில் அதை யெதிர்க்க இடமுண்டாகிறது. எப்போது மகனெதிர்க்க வெத்தனித்தானோ அப்போது அநேகமாகக் குற்றவாளி தகப்பனே. பால்யாவஸ்தைக் குரிய மகனுடைய மனோபாவங்களையும் மனோரதங்களையும் உதறித்தள்ளி அன்பின்றித் தகப்பன் நடைபெறுகின்றதினால், சிறுவனும் எதிர்க்க ஆரம்பிக்கின்றான். இந்த எதிர்க்கும் சுபாவமானது அனேகமாக வெளியாகாமல் பொருமிக்கொண்டேயிருக்கும். அதுவும் அபாயகரமானதுதான். மகனுக்குத் தகப்பன் உற்ற அந்தரங்க சினேகனாக இருத்தல்வேண்டும். அன்பும் ஆதரவுமுள்ளவனாக இருத்தல்வேண்டும். பிரியமுள்ள ஆலோசனை சொல்லுகிறவனாக இருத்தல் வேண்டும்.

இப்படித் தகப்பன்மார் இருப்பார்களாகில் மகன் எதிர்பேசாமல் வணக்கமும் மரியாதையுமுள்ளவனுகவிருப்பான். கிரகத்தில் ஏதேனுஞ்சங்கடம் நேரிடுமாகில் அதற்குக்காரணம் மூத்தோரே; வாலிபரல்லர். சம்பந்தநேர்மையில் பங்கமுண்டானுல் குற்றம் மேலாயினேரிடமிருக்கும், கீழாயினேரிடமிராது. மேலோர் அவர் கடமையில் வழுவவே யேனையோரும் அவ்விதம் ஆரம்பிக்கின்றுர்கள்.

இஃது ஒவ்வொருவருந் தமக்குத்தாமே யோசித்து நடத்திக்கொள்ளவேண்டியவிஷயம். உயர்வான தர்மமென்னவென்றுல் தந்தை, மகனுக்குற்ற நண்பனுகியும் மகன் தந்தைக்குற்ற அன்புள்ள தோழனுகியும் இருத்தல்வேண்டும். ஒவ்வொருவரும் இந்தத்தர்மம் எவ்விதமிக்காலத்தில் அவரவர் கிரகத்தில் நடைபெறுகிறதென்று கவனித்துப் பார்க்கவேண்டும். அறிவீனமான நடத்தை அல்லது தவறுனவொழுக்கம் மகனிடம்நேர்ந்தால் தகப்பன் அன்பாகவும் ஆதரவாகவுமொழுகுவானுகில், அவைகள் நீங்கி மகன் நேர்மைபற்றி யொழுகுவான். இல்வாழ்க்கைநேர்மையாய் அமையும். உலகத்திலெல்லாக்கிருத்தியங்களு மொழுங்காக நடைபெறும். பிராசீன கிரகஸ்த தர்மங்கள் எங்குமனுஷ்டானத்திற்கு வரும். அவை நடைபெறவே இந்தஆச்சிரமமுடிவில்அடுத்தஆச்சிரமமாகிய உலகவியாபாரங்குறைந்து தியானபரனுக விருக்கிறநிலையை யனுஷ்டிக்கிறது இலகுவாயிருக்கும். இத்தகையதான வான

ப்பிரஸ்தவாச்சிரமத்தை இக்காலத்திற்குத் தக்கபடி யெவ் வாறு மாற்றிக் கைக்கொள்ளலாம். பிற்காலத்தில் ஏகாந்த காலக்ஷேபஞ்செய்யவேண்டிக் காட்டகத்தே செல்லுதலும் குகையில்வாசஞ்செய்தலும் இக்காலத்திற்குப் பொருந்தாத விஷயம். இந்த ஆச்சிரம தர்மத்தை உள்ளபடியாதரிப்பது இக்காலத்திய நாகரீகத்தின்நெறிக்கு முற்றும்புறம்பாகவிரு க்கிறது. இக்காலத்தில் ஜனங்கள் தங்களுடைய தேவை களைப் பலவாருக விருத்திசெய்துகொண்டிருக்கின்ருர்கள். மூத்தோர்கள்திரவிய ஆர்ஜிதவியாபாரத்தை விடவும், கிரக கிருத்திய விசாரணையைவிடவும், உலககாரியங்களில் நேரில் தலையிடாமல்விடவும், இளைஞர்களிவைகளில் பிரவர்த்திக்கும் படி செய்யவுங்கூடுமல்லவா? நிவிர்த்திமார்க்கத்தில் பிரவேசி க்கக்கூடாதா? கௌரமான ஏகாந்தநிலையை ஒருவாறு அனு ஷ்டித்து, உபாசனை தியானம் ஆத்மவிசாரணை முதலியன செய்துகொண்டும் உலக அனுபவங்கள் நிறைந்தவர்களாகை யாலும் உலகப்பற்று இல்லாமையாலும் நிஷ்பக்ஷபாதமாய் நடுநிலைமையாய் வேண்டுங்காலங்களில் இளைஞர்களுக்குப் புத்தி போதித்தும், அவர்கள் காலங்கழித்தல் சாதகமாக விருக்கும். விருத்தர்கள் இவ்வண்ணம் உலகவியாபாரங்களி னின்று ஒழிவடைந்தும் இளைஞர்களுக்கு ஆலோசனை சொல் லிக்கொண்டும் அவர்களை நல்லவழியில் நடப்பிவித்தும், அனு பவங்கள் நிறைந்தவர்களாயும், ஞானவான்களாயு மிருக்கி

ன்றமையால், பூஜிதர்களாகவும் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாகவும் அமைந்தொழுகவேண்டும். இம்மாதிரியாக இந்த ஆச்சிரமமானது திரும்பவும் நடைபெறுமாகில் வெகு அனுகூலமாக விருக்குமல்லவா?

கடைசி ஆச்சிரமமான சந்நியாசம், உயர்வான ஞானப் பயிற்சியுள்ளதாக இருக்கவேண்டியதாகையால், சொற்பப் பெயர்கள்தான் அந்த ஆச்சிரமத்தை யனுஷ்டிக்கக்கூடும். இக்காலத்தில் அது துர்லபமாக இருப்பினுஞ் சிலதலைமுறைகளானபின்னர் ஏனைய ஆச்சிரமங்கள் சீர்திருத்தம்பெற்று ஜனங்கள் சீலமும் ஞானபாவமும் மேன்மையாக அடையும்போது இந்த ஆச்சிரமிகளுமேற்பட இடமுண்டாகும்.

சந்நியாசி என்றசொல் இக்காலத்தில் வெகு சாதாரணமாக வழங்குகிறது. ஞானமார்க்கம் பயில கிரகஸ்தாச்சிரமம் அதிக முக்கியமான சாதனம். அதைவிட்டு விலக அநேகமாக அருகர்கள் ஒருவருமில்லை என்றுசொல்லலாகும், இந்திய ஞானிகள் கிரகஸ்தாச்சிரமம் எல்லோரும்பற்றி யொழுகக்கடவர்களென்று ஆலோசனையின்மேல் விதித்திருக்கின்றார்கள். விருத்தர்களுக்குங்கூட சந்நியாசத்தை யுள்ளபடி அனுஷ்டிக்கமுடியாதாம். பால்யத்தில் அதை யனுஷ்டிப்பது மிகத்துர்லபமாம்.

பாலயோகியாய், மாசற்ற ஞானியான சனக்குமாரர் போன்று நடைபெற்றால், சிரேயஸ்கரந்தான். அந்த ஆச்சிரம

வுயர்வும் நன்கு விளங்கும். உலகரக்ஷணார்த்தம் ஒருமஹான் அவதரிப்பாராகில், அவர் குழந்தைப் பருவமுதற்கொண்டே சந்நியாச மார்க்கத்தைப்பற்றி யொழுகக்கூடும். ஆனால் இக்காலத்திலோ, அனேக இளைஞர்களும் யௌவனர்களும் இந்த ஆச்சிரமத்தின்கண்வெளிப்படையாய்த்தன்னிஷ்டமும், உலகநிர்பந்தங்களுத்தரவாதங்களின்மையும், அமைவுற்றிருக்கிறதைக்கண்டு, இந்த ஆச்சிரமத்தின் அதிக சிரமமான வுத்தரவாத பாரங்களைத்தாங்கி நடத்த எண்ணமில்லாதவர்களாய் இலகுவாயும் பதட்டமாயும் காஷாயந்தரிக்கின்றார்கள். தேகக்கொழுப்புந் தேகதிடமு முள்ளவர்களான சோம்பேறிகள் பிறர் ஆர்ஜிதங்களைப் பக்ஷித்துக்கொண்டும் யாருக்கும் எவ்விதபிரயோசனமுமின்றியும் இத்தேசத்தில் ஆயிரக்கணக்காய்த் திரிகின்றார்கள். அனேகர் காஷாயத்தின் கௌரவத்தைக்கொண்டு வேஷதாரிகளாய், காமிகளாய் துர்மார்க்கத்தில் பிறர்களை நடத்தி, பேரின்பநெறி முற்றுந்துறந்து சிற்றின்பத்தில் முழுமையும் மூழ்கி ஜிதேந்திரியர்களாக இருக்கவேண்டிய முறைதவறி இந்திரியாதிபர்களாக அலைகின்றார்கள். உண்மையான சந்நியாசி அருமை பெருமை தங்கியவரே. எளியவன்கூட தன்பாலுள்ள சிற்றுண்டியையும் அவருக்கிட்டுத்தான் சந்தோஷிப்பான். அவருடைய ஞானசிரேயஸானது, அவருக்குவேண்டிய அற்பவிஷயத்தைக் காட்டிலும் எவ்வளவோ கோடிபங்கு அதிகமானது. அவர் தூய்மையும்

பக்தியும், அவர்போகுமிடமெல்லாஞ் சுத்தப்படுத்தும்; ஸ்ரேயஸ்கரத்தைக்கொடுத்து சீலங்கெட்டுப்போகாமல் பாதுகாக்கும். துர்நடத்தையுந் தீயவொழுக்கங்களுமுள்ள போலிச்சந்நியாசிகள், ஈசுவரனுக்கும் மனுஷனுக்கும் சம்மதமல்லாதவர்களாய், இந்தவுயர்வான ஆசிரமத்திற்குப்பழிப்பும் ஹானியுமுண்டுபண்ணி, சந்நியாசியென்ற பெயருக்கே அகௌரவத்தையுண்டாக்குகிறார்கள். பாலியர்களுக்கு உத்தரவாதங்கள் கடமைகள் நிறைந்த கிரகஸ்த ஆசிரமமே தகுந்தது. இவ்வுத்தரவாதங்களால் தம்மையடக்கப்பயின்று, தம்முடைய கீழான நடைப்போக்குகளைக் கட்டுப்படுத்தி நிக்கிரகஞ்செய்து, பின்னர்த்தனக்கும் உலகத்திற்கும் யாதொரு தீங்குஞ்செய்யவிடமில்லாமல் நிகழுவான்.

பிராசீன உயர்வானதர்மங்கள் இக்காலகதிக்குரியவாறு அமைக்கப்பெற்று, இந்தியாவில் இக்காலத்திலனுஷ்டானத்திற்குவருமேயாகில், அதைப்பார்த்து ஏனையதேசத்தார்களுமனுஷ்டிக்கத் தலைப்படுவார்கள். பின்பு உலகமுழுதும் மாறி இவ்வொழுங்குகளையனுசரித்து ஒழுகாநிற்கும். மேல்நாடுகளில்வாலிபர்கள் வரவரப் பரிசுத்தர்களாக விருக்கும்படிசெய்ய முயல்வோம். தற்காலநாகரீகத்தின் லக்ஷணமான 'தனக்குத் தனக்கு' என்ற போட்டித்தன்மையைத் தவிர்த்துக் கிரகஸ்தர்கள் பிறர் க்ஷேமத்தைக்கருதுபவராயும், செந்தண்மை பூண்டவர்களாயும் ஒழுகும்படி வரவரச்செய்யவேண்டும்.

விருத்தர்கள் திரவிய ஆர்ஜிதத்தொழிலை யொழித்துக் குடும்பங்களுக்கு அறிவு போதிப்பவர்களாக நடைபெறுவதையும், அவர்களிற் சிறுபான்மையரேனு மூலகவாழ்க்கை முற்றுந் துறந்தவராயிருப்பதையும் நாம் பார்க்கவேண்டும். இந்த உயர்வான தர்மநெறிகள் வேரூன்றப் பெற்றதும், அவைகளின் வாசனை கெடாமலிருப்பதும், அவைகளை இன்னுஞ் சிரத்தையுடனே சிந்தனைசெய்கிற ஜனங்களுடையதுமான இந்தத் தேசத்திலேயே மறுபடியும் ஸ்தாபிப்பது உலகத்திற்கு நன்மையைப் பயக்குமன்றோ? மனிதனின் ஒவ்வோரியல்பும் நேர்மையாய் விகாசித்து, ஜனங்களின் யோகக்ஷேமார்த்தமாக யாவரும் பார்த்துக்கற்று அவ்வழியில் நிற்க, இந்தியாவானது பிரத்தியக்ஷ அனுபவசித்தமான உதாரணமாகவிருக்குமல்லவா?

சாயங்காலங்களில் கொடுக்கிறதாக வுத்தேசித்திருக்கிற இவ்வுபந்நியாசங்களில் இதுதான் முதன்மையானது. நான் சொன்ன விஷயத்தை மனதிற் பதியச்செய்யுங்கள். தாங்கள் தினந்தோறும் நடத்தும் ஒழுக்கங்களை நன்றாய்க்கவனியுங்கள். அவைகளிற் குற்றங்குறையுள்ளவைகளைப் பாருங்கள். அதன்மேல் அவைகளுக்குரிய பிராசீன தர்மங்களைத் திரும்பவும்நாட்டிச் சாவதானமாய் அம்முறையில் நடைபெறுங்கள். மனதில் தோன்றியவுடனேயே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டாம். நன்றாய்ப் பலவாறாக யோஜியுங்கள்.

அதன்பிறகு அநுஷ்டியுங்கள். எண்ணியெண்ணிக் கனுக் காணவேண்டாம். இந்தியா க்ஷேமத்திற்கும் வரும்; அப் படி நம்பிக்கை எனக்கிருக்கிறது, என்று வார்த்தைமாத்தி ரத்தில் நிற்கவேண்டாம். அடிபிற்கண்டவாறு செய்யக்கட வீர்கள். ஈசுவர அநுக்கிரகங்களினுல் நாமே இந்தியாவின் க்ஷேமகரமான இந்நெறிகளை யவலம்பித்து இம்முறைகளை அநுஷ்டிப்போம். இந்தவாலிபர்களே இனி இந்தியர்களா கிறவர்கள். இவர்களுக்கு உசித்தான முறைப்படி கல்வி கற்பிக்கக்கடவோம். பிராசீனவுயர்வான மனோபாவங்களை இவர்களுக்குப் புகட்டுவோம். அவர்கள் நேர்மையுள்ள கிர கஸ்த ஆசிரமிகளாக ஆவார்கள். நேர்மையுள்ள கணவர்களா கவும், தந்தையராகவு மிருக்கவேண்டிய முறைகளையுடைய ராய்ப் பிறருக்கு உதாரணமாகவுமிருப்பார்கள். எது சொன் ஞலும் வாங்கக்கூடிய இளமைப்பிராயத்திலேயே, விருத்தர் கள் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டவர்களாய்ப் பூஜ்ஜிய தையடையக்கூடிய நெறியை, பாலியர்களுக்கு எடுத்துக்கா ட்டுவோம். கூடியவரை நாங்களே அந்நெறியை அநுஷ்டித் துக்காட்டுவோம். அஃது அவ்வளவு முற்றும் நேர்மையாக வில்லாவிடினும், இனி அவர்கள் காலத்தில் அதைச் சீர்திரு த்திக்கொள்ளுவார்கள். அதிக சௌகரியங்களேற்பட எங் களைவிட மேன்மையாய் நடைபெறுவார்கள். அவர்களுக் கடுத்த தலைமுறையில் வருகிறவர்கள் இன்னுமதிக மேப்பாட்

டைப்பெற்று ஒழுகுவார்கள். இவ்விதமாக வரவர சிரேயஸ் கரம் விருத்தியடைய சந்ததிக்கிரமமாய் மென்மேலுமுயர்வான தர்மங்கிரீடித்துக்கொண்டுவரும். இந்தியா புதியஸ்வரூபம் பெறுவதாகும். ஆனால் இதற்கெல்லாம் அஸ்திவாரம், 'அன்றுசெய்வாம்' என்று எண்ணாது, இன்றே தாமசியாமற் போடக்கடவோம். இதனால் எவ்வளவு செலவு நேர்ந்தாலும் அதைக்கவனியாது செய்து முடிப்பிப்போம். நாம் அஸ்திவாரம் போடுவோம். இனி வருபவர்களான பாலர்கள் அதிற் சுவரெழுப்புவார்கள். அவர்கள் பிள்ளைகள் அதின் மேற் கட்டிடங் கட்டுவார்கள். இப்படியே மேன்மேலும் விர்த்தியடையும். இந்தியா சுத்தமாயும், மேன்மையாயும் ஞானமுறையுள்ளதாயும் அமைந்தொழுகுவதாகும்.

இத்தன்மையான இந்தியாதேசந்தான், உலகமெல்லாவற்றிற்கும் ஞானகுருவாகவமையும். ஜனசமூகத்திற்கே இந்தியர்கள் பிராஹ்மணராவார்கள். அவர்கள் வாக்குத் தேவவாக்காக விளங்கும். அனுக்கிரகம் அமைந்ததாக நிகழும். அப்படிப்பட்ட உயர்வான ஸ்திதி பயக்குமாறு, அஸ்திவாரம்போட உங்களை வேண்டுகிறேன். உயர்வான கட்டிடங்கள் ஸ்தாயியாக நிலைபெறுமாறு பலமான அஸ்திவாரம் போடுங்கள். இனிப் பின்வருபவர் அதன்மேல் ஆலயங் கட்டுவார்கள். "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை, இன்மை புகுத்தி விடும்" (குறள்).

## இரண்டாவது உபந்நியாசம்

——:o:——

### ஆலயங்கள் பூஜகர் பூஜை இவைகளைப்பற்றியது.

சகோதரர்களே! இற்றைக்கு, 25-வருஷங்களுக்கு முன், இந்தியாவின் நிலைமையைப் பின்னோக்கி விசாரிப்பீர்களாகில், வாலிபர்களெல்லாம் வெகுவாய், மேற்றிசையாரால் கற்கப்பட்டு வருகின்ற முற்றிலும் நாஸ்திகப்படிப்பினைகளால், நாஸ்திகர்களாக ஆகிக்கொண்டுவந்தார்களென்றும், அவர்கள் வரவரத் தங்கள் பிராசீன சமயமுறைகளை விட்டு விலகிக்கொண்டுவந்தார்களென்றும், பிராசீன மஹருஷிகளை முற்றும் மறந்தும் அவர்கள் ஸ்தானத்தில் ஹக்ஸிலி (Huxley), ஸ்பென்ஸர் (Spencer), மில், (Mill) ஹிகல் (Hegel) இவர்களையே தீர்க்கதரிசிகளாகவும், தங்களுக்குக் குரவர்களாகவும் பாவித்துப் பாராட்டிவந்தார்களென்றும் நீங்கள் ஆச்சரியத்துடன் தெரிந்துகொள்ளுவீர்கள். அந்தக் கதியானது, ஞான அபிவிருத்திக்கு ஹானிகரமாகவும், இந்தியாவின் க்ஷேமத்திற்கே கெடுதியைப் பயக்கத்தக்கதாகவும் அமைந்து, அதிர்ஷ்டவசத்தால் அந்தக்கதி இப்போது நின்றுவிட்டது. இக்காலத்திய வாலிபர்கள், தங்களுடைய சமயநெறிகளைக் கற்றுக்கொள்ள வரவரப் பிரியமுள்ளவர்களாகவும், தங்களுடைய மதசாஸ்திரங்களில் சிரத்தையுள்ளவர்களாகவும், பண்டைய காலத்தைப்பற்றிய விசுவாசமும்,

மரியாதையுமுள்ளவர்களாகவும்; பிராசீன ஞானவிஷயமும், மேம்பாடும், திரும்பவும் நிலைகாட்டவேண்டுமென்ற நன்னம்பிக்கையுள்ளவர்களாகவும் இருக்கின்றனவென்று தெரியவருகிறது. இந்தமாதிரியான ஒழுக்கம், வெளிப்படையாகவிருப்பது, எல்லாரும் ஒப்புக்கொண்டவிஷயம். ஆனால் இதைக்கண்டு களிப்புற்றும், பிரீதியுடன் வசனிப்பார்கள் ஒருசாரார். இது தங்களுக்குச் சம்மதமில்லாதபடியால், பிரீதியின்றிப்பேசுவார்கள் மற்றொருசாரார். இத்தன்மையைப் புகழ்ந்தாலுஞ்சரி; இகழ்ந்தாலுஞ்சரி. மித்திரர்களுஞ் சத்துருக்களுமாகிய இருதிறத்தாரும் இத்தன்மை நடைபெறுவது, வாஸ்தவமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது நிர்விவாதமானது.

ஹிந்துமதம் உயிர்ப்பித்துத் திரும்பவும் அதன் நல்ல விஷயங்களின்மேல் சிரத்தையும், நம்பிக்கையுமுண்டாகி விருத்தியடையவே, அவற்றுடன் விசனிக்கத்தக்க தீயவையும் தலைப்பட்டு விருத்தியடைய ஹேதுவாயின. உடலும் நிழலும்போல நன்மையுந் தீமையும் தொடர்கின்றது வழக்கந்தான். பெரியோர் சொல்லியிருக்கிறபடி, அக்கினி எப்படிப் புகையாற் சூழப்பட்டிருக்கின்றதோ, அப்படியே, எல்லாக் கிருத்தியங்களும் தீமையாற் சூழப்பட்டிருக்கின்றன. இது பூரணமற்ற உலகத்தினியற்கை. நல்லவற்றைப்பின்பற்றியே தீயவையும் நிகழும். நன்மை மேலிட்டுப்

பெரும்பான்மை லபிக்கும்படி செய்வதுதான், நாம் செய்யக் கூடியது. புரைதீர்ந்த நன்மை செய்யப்புகின், எடுத்தகாரியம் சித்தியாது; சங்கற்பம் நிறைவேறாது. கூடியவாறு தீயவை குறைவாகவும், நல்லவை பெரும்பான்மையாகவும் நேர்ந்தால், அதனால் திருப்தியடையவேண்டும். இவ்விதம் சம்பவிக்குமாயின், நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்தவர்களாவோம்.

இந்துமதாபிவிர்த்தியில் முயல்பவர்கள், எவ்வளவு கீழானவர்களாயினும் சரி, எல்லாருந் தங்களாற் கூடியவளவு தீயவை குறைவுபடவே செய்யற்பாலர். இந்தியர்களுள், பிராசீன உயர்வான தர்மமுறைகளைக் கைப்பற்றித் திரும்பவும் ஒழுகவேண்டுமென்னு மெண்ணத்துடன், அணைந்து போகாமல் இன்னும் நீறிக்கொண்டிருக்கும் ஞானக்கினியை விசிறி ஞானஜ்வாலையை உண்டுபண்ணவும் கருதுகிறவர்கள், தீயவை சம்பவியாமல் தடுத்து எச்சரிக்கையுள்ளவராயிருப்பதன்றிப் பிறருக்கு மதத்தில் உற்சாகத்தை உண்டுபண்ணுகிறதில் இந்த எச்சரிக்கையை அறிவுறுத்தவும் வேண்டும். சமயமுறைக்கு இரண்டு சத்துருக்கள் உண்டென்று உலக சரித்திரத்தினால், நாம் அனுபவசித்தமாய் அறிகிறோம். ஒன்று நாஸ்திகம்; மற்றது மூடபக்தியும் விபரீத ஆசாரமும். இவை யிரண்டும் சமயநெறிக்குக் கெடுதி பயக்கத்தக்கவைகள். அவைகள் சமயநெறியால் உண்டாகும்

நன்மையை யழிக்கவும், பயனற்றதாகச் செய்யவுமுள்ள கருவிகளாம். நிரீசுவரக்கொள்கையோ பகிரங்கமாய்ப் பகைமைபாராட்டி மதத்தைத் துவம்ஸம்பண்ணுங் கத்திபோன்று, தீக்ஷித்துக்கொண்டிருக்கிறது. மூடத்தனமும், துராசாரமுமோவென்றால், வெளிவராமல் குப்தமாயிருந்துகொண்டு பக்தியென்ற வேஷம்பூண்டு பாஷாணத்தை உண்பிப்பதுபோன்று முற்றுங் கொன்றுவிடாவிடினும், மதத்தைத் துர்ப்பலப்படுத்துகிறது. மதத்தை அபிவிர்த்தி செய்வதில் ஊக்கமுள்ளவர்கள், வெளிப்படையாயுள்ள நாஸ்திகக் கத்தியையும், குப்தமாயுள்ள மூடபக்தியென்ற விஷத்தையும் தவிர்த்து, அவைகள் பயக்காவண்ணம் பாதுகாக்கவேண்டும். கத்தியும் விஷமும் உயிருக்குப்பகையேயாம்; விசுவாசமுள்ள சேவகன் இவ்விருவகை அபாயத்தினின்று காப்பாற்றி உலகத்தை எச்சரிக்கக்கடவன்.

இன்று சாயங்காலம் நான் பேசுவதாகச் சங்கற்பித்த விஷயத்தைப்பற்றிப் பேசப்புகின், பலமான கஷ்டங்கள் எதிராக விருக்கின்றன. இன்று கவனிக்கப்புகும் சங்கதியைப்போலெனக்குச் சிரமமானது வேறொன்றும் இதுவரையிருந்ததில்லை. ஏனென்றால், மனிதனுக்கு உயர்வையும், சிரேயஸ்ஸையும் பயக்கின்ற சிறந்த பக்தி அமையப்பெற்றதும், எதார்த்தத்தை உள்நோக்கி அறிகிறவர்களுக்கு ஈசுவர சம்பத்தைப் பெற்றதும், அநிர்வசனீயமான இந்தியரின் உயி

ருக்குயிராகியிருந்த சங்கதியைப்பற்றி அதற்கு யாதொரு தோஷமும் கற்பிக்காமல் அதுபற்றி நிகழ்கின்ற குற்றங்குறைகளைப்பற்றி மாத்திரம் வசனிப்பதெவ்வாறு? யூதர்களுடைய பிராசீன கிரந்தத்தில் ஒரு கதை சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, ஒரு சமயத்தில் தேவபூஜைப் பேழையை ஒருவண்டியில் வைத்துக்கொண்டு போனார்களாம். பாதையின்மேடுபள்ளத்தினால் வண்டி ஆடினதாம். அப்பொழுது பெட்டி கீழே விழும்போலத்தோற்றியது. அங்கிருந்த ஒருவன் அவசரமாய் யோசனையின்றி அந்தப்பெட்டியைத் தொட்டானாம்; தொடவே அவன் அசுத்தமானவனாகவிருந்தமையால், அதினின்று ஒரு தேவசக்தி அவனைத்தாக்க அவன் மூர்ச்சையிட்டுக் கீழே விழுந்து மாண்டனனாம். சரியானபடி, பிராணபிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள விக்கிரகங்கள் முதலியன மின்சாரமேற்றிய பீரங்கி நிரைபோன்றுள. அவைகளின் நேர்மைக்குமுற்றும் மாறின தன்மையுள்ளவர்கள் தொடுவார்களேயாகில் உயிருக்கே ஹானிநேரிடும். ஆகையால் அசுத்தமான லௌகிகர்கள் அவைகளைத்தொடக்கூடாது என்று எச்சரிப்பேற்பட்டிருக்கிறது. பிராண உத்தாரணமமைந்த பேழைகளை மனத்தூய்மையில்லாமல் அசுத்தமான கைகளால் ஸ்பரிசித்தால் அபாய நேரிடும். நம்முன்னோர்களுடைய சிரேயஸ்கரமான சமயநெறிகள் நன்குவிளங்குமாறு செய்யவேண்டுமென்ற அவாவுடன்

வசனிக்கிற என்னையும், சுரோதாக்களான உங்களையும், நம்முடைய மனசில் பக்திக்குறைவும் மரியாதையின்மையுமுண்டாகாமல், தெய்வங்கள் பாதுகாத்து அருள்வனவாக.

ஒரு மகாபுருஷர் தம்முடைய அவயவங்கள் பிறருக்கு நன்மை பயக்காவண்ணம், அசைவற்றுப்போமாறு விலங்காற் பீடிக்கப்பட்டிருப்பாரேயாகில், அவ்விலங்கை வெட்டி மறுபடி அவர் அவயவங்கள் நடைபெறுமாறு செய்கின்ற புண்ணியவான் வெகுஜன உபகாரியாவான். அவ்விதமே இந்துசமயத்தின் சில அம்சங்களிற் பிழைகளும், தப்பெண்ணங்களும், துராசாரங்களும் ஆழ்ந்திருக்கின்றமையால் சத்தியத்தில் விசுவாசமுள்ளவர்களாகவே நாமும் அவைகளைச் சேதித்துக் களைந்து, சமயங்களுக்குள்ளெல்லாம், உயர்வும், சிரேயஸுமுள்ள ஹிந்துமதத்தைப் பண்டையகாலம் போன்று இக்காலத்திலும், நிஷ்க்கல்மஷமாய் விளங்கா நிற்கும்படிசெய்து அதன்மூலமாக இந்தியாவிற்கு நன்மையும் மேன்மையும் பயக்குமாறு செய்வித்து, உலகத்தார் எவரும் அதன்மீது பக்தியும் கௌரவமும் பாராட்டும்படி முயலக்கடவோம். இந்துமதம் அவ்வளவு உயர்வுபெற்று இருக்கின்றமையால் அதன்கண் உண்டாயிருக்கின்ற பிழைகள் அச்சமயிகளுக்கு அதிகக்கேட்டை விளைவிக்க ஹேதுவாயிருக்கின்றன. தரையிலுள்ளவன் கீழேவிழுவானாகிற் கொடிய காயமடையான். உயர்வான ஸ்தானத்தினின்று ஒருவன்

விழுவானாகில் அவயவங்கள் நொறுங்கப்பெறுவான். இஃது உலகவழக்கு. அதுபோலவே மஹா சிரேயஸ்கரமானது தாழ்மையடைந்தாற் பெருங்கேடு சம்பவிக்கும். எவ்வளவுக்கெவ்வளவு உயர்வும் மேன்மையும் பற்றி ஒரு சமயநெறி நிகழ்கின்றதோ, அது, குணங்குன்றித் தாழ்மைபெறின், அதனால் அந்தச்சமயநெறி அற்றுப்போய், அதை அனுஷ்டிக்கும் ஜனங்களுக்கும் துன்பத்தை விளைவிக்கும்.

பண்டைக்காலத்தில் ஆலயங்கள் இருந்த நிலைமையென்ன? ஈசுவரப் பிரதிமையென்ன, அஃது அமைக்கப்பெற்றிருந்த பரிசுத்தமான கர்ப்பகிரகமென்ன, மனிதர்கள் சரீரசுத்திக்காகவும், ஆத்மசுத்திக்காகவுஞ் செய்துவந்த யாத்திரை க்ஷேத்திரங்களென்ன, தீர்த்தங்களென்ன—இவைகளெல்லாம், கௌரவந்தங்கிய பிராசீன காலத்தில் எவ்வளவோ நல்ல ஸ்திதியிலிருந்தன. அக்காலத்திற் பூஜகர் பரமாத்தும தத்துவத்தை உள்ளபடி அறிந்திருந்தார்கள். ஆத்தும தத்துவஞானம் உயர்வுபெற்று இந்தப் புண்ணிய பூமியாகிய இந்தியாவில் நன்கு விளங்கிற்று.

அவைகள் இன்னபடி ஆதிகாலத்தில் இருந்திருக்கின்றனவென்பது, சூக்ஷ்ம பிரஞ்ஞா பூமிகளின்கண் இப்போதும் அவைகள் சூக்ஷ்மதரிசிகள் புலன்களுக்குத் தெரியவரும். பூமிகளிற் றோன்றுகிறவைகள்தாம், இந்தஸ்தூல பூமி

யின் ஏகதேசமாக ஹிந்துசமயக் கோயில்களாகவும், பூஜகர்கள் செய்துவந்த கிரியைகளாகவும் மேன்மைபெற்ற பூஜகர்களால் உச்சரித்து மந்திரங்களாவும் விகாசித்தன.

ஆலயங்கள் அக்காலத்திலிருந்த நிலைமையைப்பற்றி நானென்ன சொல்வேன். அதன்கண் ஈசுவர தேஜஸ் நிரம்பியிருந்தது. தேவதாசாந்நித்தியம் விளங்கியது. கோவிலுக்குள் நுழையும் பக்தர்கள் கண்ணிலே தேவதா அருள் பிரசன்னமாகும். பக்தர்களின் அன்பின் மிகுதியால் ஈசுவர அருள் பிரத்தியக்ஷமாகும். கோவிலுக்குட் புகும் ஒவ்வொருவருக்கும் சிரத்தா பக்தியுடன் சாந்தியை உண்டுபண்ணியும் உலக எண்ணங்களை மாற்றியும் ஈசுவரபாவங்கள் உதயமாகவும் தானுகவே தங்குதடையின்றி ஸ்தோத்திரத்தை வாய் பாடவும் சுவர்க்கலோகங்களிலிருக்கின்றதுபோலப் பாவங்கள்தாமே உணரவும் இவ்விதமாய் ஒரு தேவ அருள் இறங்கல் அனுபவசித்தமாகவிருந்தது. இவைகளில் விசுவாசமில்லாதவன்கூட அதன்கண் பிரவேசித்த மாத்திரத்தில் அந்த நிமிஷத்திலாவது அதில் கிரீடித்துக்கொண்டிருக்கும் அருள் விசேஷத்தாலும் ஈசுவர பிரதிமையினின்று விளங்கும் சக்தியினுலும் தான் முற்றும் மாறினவனுயிருந்து அனுபவிப்பான்.

பிரீசீன காலங்களில் இவ்விதமாகப் பரிசுத்தம் நிரம்பியிருந்தது. ஞானமும் சீலமும் எப்போதும் பூஜகர்களிடம்

விளங்கின. அவர்கள் அறிவுடனே மந்திரம் ஜபித்தார்கள். தேவாக்கினியால் மனசும் வாக்குஞ் சுத்திசெய்யாத பூஜகராகக் கோயிலை அணுகார். பக்தர்கள் அன்புடன் கொணர்ந்த நிவேதனங்களைப் பூஜகர்கள் பரிசுத்தமான கைகளாற் பெற்றுத் தேவதைகளுக்குச் சமர்ப்பிக்க, அந்நிவேதனங்கள் அதிக சிரேயஸ்ஸைப்பெற்றன. ஆகவே, எல்லோரும் அநுக்கிரகம் பெற்றார்கள். கோவிலிலிருந்து தேவசக்தி எங்கும் பரவியது. கோவில்களில் கண்ணுக்குத்தோன்றாத தேவர்கள் மந்திரகோஷங்களையும், கானங்களையும், பூஜைகளையும், மனிதர்களுடனே சேர்ந்து செய்துவந்தார்கள். இது கனவன்று: வாஸ்தவத்தில் மனிதர்கள் தேவதா சந்நிதானத்தை உணர்ந்தார்கள்.

பண்டைக்காலத்தில் இவ்வண்ணமாகக் கோவில் தெய்விகசம்பத்து அமையப்பெற்றிருந்தது. அக்கோயில்களிற் பிரதிஷ்டைசெய்திருந்த பிரதிமைகள், அடையாளமாகவும், குறியாகவும், சமிக்கையாகவும் ஈசுவரவிசேஷணங்களை விளங்கச்செய்ததன்றியும், சக்தியும் விளங்கின. அச்சக்தியின் உயர்வான கதிதான் ஈசுவர அருளென்றும், தாழ்வான கதிதான், காந்தசாரமென்றும் வழங்குவன. ஸ்தூலபூமியின்கண் ஏதேனுமொரு பொருளையெடுத்துக் காந்தசாரத்தைப் புகட்டி அதன் மூலமாய் ஸ்பரிசமாத்திரத்தால் நோய்களைத் தீர்ப்பார்கள். அவ்விதமே, ஈசுவர பிரசாதம்பெற்ற மஹா

ருஷிகள் தேவதாசக்திகளைச் சித்திபூர்வமாகப் பெற்றுப் பிரதிமைகளில் ஆரோபித்துப் பிராணபிரதிஷ்டை மூலமாக அவற்றின் சக்தி விளங்கச் செய்வித்து வந்தார்கள். ஆகவே, அச்சக்தியைப்பெற்ற பிரதிமைகளை அணுகினவர்கள் நேர்மையாய் உபசாந்தியைப் பெற்றுவந்தார்கள். பக்தர்களுடைய ஸ்தூல சூக்ஷ்மதேகங்களின்கண்ணுள்ள பரமாணுக்களும், அந்தப்பிரதிமைகளின் சாந்திவிசேஷத்தால், நேர்மையான உபசாந்திபெற்றுத்தாமும் நேர்மையாய்ச் சொலிக்கின்றனவாய் ஏற்பட்டன. அவைகளில் முறையாகச் சங்கடங்கள் விலகத் தெய்வசம்பத்து நிறைந்த அருளைப் பக்தர்களும் அடைவாராயினர். அவ்வளவு சக்தியும் அருளும் வாய்ந்த தேவதாபிரீதிகரங்கள், அவைகளை அண்டின அடியார்களுக்குச்சிரத்தையும் பக்தியையுமுண்டாக்கி, மேம்பாட்டையளித்தன. ஈசுவரபிரீதிகரமென்றால் அவ்வண்ணமிருக்கவேண்டும். அப்படியே முற்காலத்திலிருந்தது; அவ்வாறு இக்காலத்திலும் இருக்கலாகும்.

புருஷர்களும் ஸ்திரீகளும், யாத்திரைசெய்து வந்த அக்காலத்தில் புண்ணிய தீர்த்தங்களோவென்றால், அவற்றின்கண் வசிக்கும் யாரேனும் ஒருமஹருஷி ஜலத்திற்குள் தாமிறங்கித் தம்முடைய சக்திவிசேஷத்தினால் அதைப்புனிதமாக்கி, அதன்கண் சக்திவிளங்கும்படி செய்விப்பார். அத்தகைய காரியத்தினால் இயற்கையாய் யோக்கியதையில்லாத

ஜலத்தில் ஸ்நானஞ்செய்பவருக்கு மனசு சரீரம் பரிசுத்தமமையப்பெற்றுக் கிருதார்த்தர்களாவார்கள். முற்காலத்தில் ருஷியானவர் பரிசுத்தஞ் செய்வித்தமேல், அவருடைய சிஷர்கள் ஜலத்திலிறங்கி ஸ்நானஞ்செய்வார்கள். பின்னர் யாத்திரைக்காரர்களின் கூட்டம்பயபக்தி சிரத்தை விசுவாசத்துடனே புனிதஞ் செய்யப்பட்ட ஜலத்திலிறங்குவார்கள். அக்காலத்திய கர்மானுஷ்டானங்களை உற்றுக்கவனியுங்கள். அவைகள் எவ்வளவு பரிசுத்தமாயும், எவ்வளவு சிரேயஸ்கரமாகவும், கடுமையான சொல்லின்றி இன்சொற் பாராட்டியும், ஒருவருக்கொருவர் யாதொரு முரட்டுத்தனமான ஒழுக்கமுமில்லாமற் செய்வித்துச் சாந்தமும் சமாதானமும் அமையப்பெற்று நடைபெற்றுவந்தன. இதனால் அக்காலத்துத் தீர்த்தயாத்திரை இத்தன்மையாக நிகழ்ந்ததென்று தெரியவரும். அத்தீர்த்தங்களையடைந்தோர், எவ்வளவு பரிசுத்தமும் மகாத்மியமும்பெற்று, உலகப்பற்றுவிட்டு, நிவிர்த்திமார்க்கத்தை நினைப்பாராயினர். தேவதாசக்தியும், சாந்நித்தியமும், சம்பவித்தற்குரிய அரிய கிரியை நேர்மையாக நிகழப்பெறுமேயாகில், மனிதனுக்குத் தேவர்களுடைய அனுக்கிரகங்கள் எவ்வண்ணம் லபிக்கின்றனவென்று முன் வரலாற்றினால், ஏகதேசம் தங்களுக்குப்புலனாகும். ஸ்தூலதேகம் பரிசுத்தமாய் நடைபெறின் தெய்வீகமான பிராணசக்தி, யாதோர் அசுத்தமும் பயக்கவொண்ணாத உபாதிகளில் இறங்குவதாகும்.

அக்காலத்திய யாகசாலைகளில் ஒன்றைப்பார்ப்பீர்களே யாகில், அதிற்கிரியைகளைச் செய்கின்ற ஒவ்வொருவரும், வேதவித்துக்களாயும், மனோசீலர்களாயும், ஆசாரசீலர்களா யும் இருந்தார்களென்று அறிவீர்கள். ஸ்தூலமான இஷ்டி கைகளின்கண் ரித்விக்கள் கிரியைகளைச் செய்வார்கள். உங்க ளுடைய சூக்ஷ்மக்கண்கள் திறந்திருக்குமேயாகில், ஹவிர்ப் பாவங்களை நேரில்வாங்கவே உயர்ந்த தேவதைகளையங்கு பார்க்கலாம். மஹாருஷிகளென்ன, முநிகளென்ன, இத்தகைய மஹாத்மாக்கள் உண்மையாய்ச் சிரத்தை பக்தியுடன் செய்யப்படுங் கர்மங்களை ஆசீர்வதிக்கவும், உத்தமர்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவும் வருவார்கள். மிகுதியான தேவகண ங்களும், திவ்வியகந்தர்வர்களும், மந்திரங்களுக்கு ஒற்றுமையா ய்க் கானஞ்செய்வார்கள். தேவர்கள் யக்ஞத்தை அங்கீகரி த்து அதனால் திருப்தியடைந்தார்களென்பதற்கு அறிகுறி யாய் அதற்குத் தேவபுஷ்பவருஷம் வருஷிப்பார்கள். தேவ லோகத்தில் நடைபெற்றுவந்ததின் பிரதிபிம்பமாக, எவ்வள வோ சிரேயஸ்கரமான ஆதிக்யத்தில் ஹிந்துசமயம் விளங்கி வந்தது. தேவலோகங்களிலுள்ள ஆலயங்களைப்போலவே, பூமியில் ஆலயங்கள் அமையப்பெற்றன. பூமியின்கண் நடத் தப்பட்டுவந்த கர்மங்களெல்லாம், தேவலோகத்தின்கண், உலகவிகாசத்தின்பொருட்டு நிகழும் கிரியைகளின் பிரதிகார ங்களாக ஏற்பட்டன. தேவர்களின் சந்நிதியில் உலக ஜன

ங்கள் சிரேயஸ்மார்க்கத்தை யனுஷ்டிக்கவும், மிருகப்பிராயத்தினின்று தேவர்களாகப் பரிபக்குவமாகவும், உத்தேசமாய்ச்செய்யும் தேவயக்ஞத்தையும், யோகத்தையும் நடத்தும் மேன்மையான தேவ ரித்துவிக்களைப்போன்று, அவர்கள் பிரதிநிதியாய்ப் பூமியின்கண் புரோகிதர்கள் அமைந்தார்கள். உலகத்தில் மனிதனுக்கு அனுக்கிரகபூர்வமாகக் கொடுத்திருக்கும் பலவாறுன சமயங்களில் இந்த ஹிந்துமதமொன்றே, தேவயக்ஞத்தின் நேர்மையான பிரதிரூபமாகத் தேவர்களாலேயே, குறைவின்றி யமைக்கப்பட்டுள்ளது. ஆகவே ஹிந்துசமயமானது பிரஹ்ம வித்துக்களுக்கு அந்தரங்கமாக நிரம்பப் பிரியமானது. அதன் எண்ணங்களெல்லாம், தெய்வீகமானவை. அதன் கர்மங்களெல்லாம் பரிசுத்தமானவைகளாகவும், சிரேயஸ்கரமானவையாகவும், விளங்கியதோடு அதின்கண் தேவதா சக்திகளும் அமைந்துமுள்ளன. இவ்வித மேன்மைதங்கிய சமயத்தை உங்கள் முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சமயத்தை நீங்களெவ்வித நடத்தலானீர்கள். அவர்களுடைய வம்சத்தார்களென்று டம்பமா யிறுமாப்புடன், ஆரவாரஞ்செய்கின்ற மக்காள்! சொல்லுங்கள்.

அந்த உயர்வான மகத்துவம் பொருந்திய யாகம் என்ற சமய வெளிக்கிரியை மாத்திரமா? தேவர்களால் இந்தியர்களு

க்குக் கிடைத்த பாக்கியம் இன்னும் பலவுள்ளன. ஆலயங்களில் தேவர்கள் பிரசந்நமாகி வந்தமைபோலக் குடும்பங்களிலும் அவர்கள் சாந்நித்திய மேற்பட்டது. கற்பிக்கவும் உஷக்கால முதல் சந்தியா காலம் வரை ஸ்திரீ புருஷர்களைக் காப்பாற்றவும், கர்ப்ப முதல் மரணாந்த மீறுக, அவர்களைச் சரியான வழியில் நடத்தவும் உரிய குரவர்களையும் ஏற்படுத்தினார்கள். சிரேயஸ் மார்க்கத்திற் படிப்படியாக நடைபெறுமாறு குலகுருவை யமைத்தார்கள். குருவின் கையினாற் புனிதமாக்கப்படாத கிருக கிருத்தியங் கிடையவே கிடையாது. மாதா பிதா ஸ்தூல சரீரத்தை யுண்டு பண்ணினார்கள். அது முதற் ஜனனம். குரு இரண்டாவதான ஜனனத்திற்குக் காரண பூதர். குரு சிஷ்ய பாவம், உலகத்தில் வழங்கும் எத்தன்மையான சம்பந்தங்களைப் பார்க்கிலும் உயர்வானதும், சிரேயஸ்கர மானதுமாம். குரு சிஷ்யனைத் தன் வசம் வகித்தலும் அந்த உத்தர வாதத்தைக்கொண்டு செலுத்தலும் அதிக மகத்தான விஷயம். ஜீவனைப் பயிற்சி செய்து கத்தி முனைபோன்று அதிக நுணுக்கமான ஞான நெறியில் ஜீவனை நடத்திப் பயிலும்படி செய்தல் அதிக உயர்வான உத்தரவாதம்.

குரு பண்டைக் காலத்தில் அவ்வண்ணம் நிகழ்வாராயின் குலத்தில் அவர் வகித்த நிலைமை அவ்வாறு. அவரிடம் ஒப்பிவித்த சிஷ்யர்களுக்கு அவர் புரியும் உதவி, அவ்விதமா

னது. குரு ஆத்ம சாஸ்திரப் பயிற்சியில் கடமை மேற்கொண்டவர். புரோகிதரென ஒருவரும் இருந்தனர். இவரோவென்றால், குடும்ப கர்மாநுஷ்டானங்களை நடத்தி வந்தார். இவரும் கல்வி கேள்வி நிறைந்த மெய்யுணர்வாளர். அக்காலத்திய புரோகிதர் இத்தன்மைய ராயிருந்தாரென்பது, வசிஷ்டர் என்ற பெயரைச் சொன்னதனால் மாத்திரம் அறியத்தக்கது.

இந்து சமயம் இவ்வாறு மகத்துவம் தங்கி எத்தனையோ பங்கு அதிகமான கவுரவத்தைப் பெற்றிருந்தது. அதை நான் சொல்ல அசக்தனாயிருக்கிறேன். எவ்வளவு நேர்த்தியாக உங்களுடைய கற்பனா சக்தியினால் அதை வர்ணித்தாலும், ஆதி காலத்தில் இந்தியாவில் அம்மதம் இருந்த தெய்வத்தன்மை இவ்வித மென்று எண்ண வொண்ணாது. அதன் அழகைச் சொல்ல வார்த்தைகள் சக்தியற்றன. அதன் கம்பீரத்தன்மையை வெளியிடப் பாஷைக்கு யோக்கியதையில்லை.

இக்காலத்தில் ஆலயங்களின் நிலைமை எத்தன்மையது? அவைகளின் பூஜகர்களின் யோக்கியதை எத்தன்மையது? பிரதிமைகளென்ன தீர்த்தங்களென்னஇவைகளெத்தன்மையன. குல குரு வென்ன, குலப்புரோஹித ரென்ன இவர்கள் எவ்வண்ண மிருக்கிறார்கள் ? இவைகளைப்பற்றி விசாரிப்போம், அப்படிச் செய்வதில் அவைகள் ஒவ்வொன்றின் உயர்வான

தன. இக்காலத்தில் பெரும்பான்மையான கோவில்களில் யாதொரு சக்தியும் விளங்கவில்லை. கோவிலுள்ளும், கோவில் வெளியிலும், ஒருதன்மையாக விருக்கின்றது. இன்னுஞ்சில கோவில்களிலோ நன்மை பயக்காமலிருப்பதுமன்றித் தீமை பயக்குந் தன்மையனவாக விருக்கின்றன. அவைகளிற் சுத்தமின்றிச் சாஸ்திரஞானம் அற்றுப்போய் ஆதிசக்திக்கு ஹானியும் அசுத்தமு முண்டாயிருக்கின்றன.

இதற்குக்காரணம் அறிவீர்களா? ஒரு பிரதிமையிலாவது ஒரு க்ஷேத்திரத்திலாவது, இந்தத்தெய்வசக்தியமைக்கப் பெறின், அதினருகில் எத்தன்மையாயிருப்பினும் அதை நோக்காது அந்தச்சக்தியானதுகுறைவுபடாமலெப்போதும் ஒரேரீதியாகவிருக்கவொண்ணாது. மற்றச்சக்திகள்போன்று, இந்தச்சக்தியும், அடுத்தடுத்துப் பலப்படுத்தி ஜீவகலை யுண்பித்தாலன்றி வரவரக் குறைந்தேபோகும். ஆலயங்களின் கண் இன்னும் அச்சக்திவிசேஷம் விளங்குகிறதற்குக் காரணம் யாதெனின், பக்திசிரத்தையுள்ள அடியார்கள் கூட்டங்கூட்டமாய்த் தரிசனத்திற்குப்போய் நிவேதனங்கள் சமர்ப்பிக்கின்றதனாற்றான். அவர்கள் அன்பும், அவர்கள் சிரத்தாபக்தியும், கோவிலின்கண் தங்கியிருக்கும் சக்தியைப்பலப்படுத்திப் பிராணகலை யுண்பித்து வருகின்றன. அவரவர் கடமையைச்சரியாய்ச் செய்வாரேயாமாகில் இன்னும் பிராசீனயோ

க்கியதை திரும்பவும் அமையுமென்று இஃது அறிவுறுத்துகின்றது.

கோவிலைப்பற்றிச் சொன்னவிஷயம் அவைகளின்கண்ணுள்ள விக்கிரகங்களுக்கும் பொருந்தும். அவைகளில் ஆதிசக்திகுன்றி முன்போலத் தெய்வஅருள் விளங்கவில்லை. ஆயினும் அன்பு நிறைந்தபக்தன் விக்கிரகித்திற்குப் பக்கத்திற்குப்போய், வணங்குவானாகில், வழக்கமாய் அங்கு சக்திவிளங்காமற்போயினும், அவனுக்கு ஈசுவரஅருளும், அனுக்கிரகமும் பயக்கும். பக்தனிடம் அன்புபிரகாசிக்குமாகில், தேவதா அருள் இறங்கும். ஸ்தானீகன் எவ்வளவு அசுத்தமாகவிருப்பினும், பக்தன் எவ்விடத்தில் ஈசுவரனை வழிபடுகிறானோ அவ்விடத்தில் அனுக்கிரகம் உண்டாகிறது.

கோவிற் பூஜகர்களோ! அவர்களைப் பற்றி எவ்விதம் பிரஸ்தாபிப்பேன்? நானும் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். கோவில் பூஜகர்களைப் பற்றிப் மபசோவனல்ரோ, ஒரு கவுரவமான சொற் கூட நாவில் உண்டாகக் காணோமே? இது வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஆலயங்களிலுள்ள குருக்களைப் பற்றிய பொதுவான அபிப்பிராயம். தென்னிந்தியாவில் பக்தி சிரத்தை யுள்ளவர்களும், கோவிலுக்குள் அடிக்கடி போய் வழிபாடு செய்கின்றவர்களுமான ஒவ்வொரு ஹிந்துவும், இக் குருக்களைப் பற்றி யடிக்கடி யென்னிடம் மனமுருகி வி

யசனத்துடன் சொல்லிக்கொள்ளுகிறதாவது:—இவர்கள்கல்வி கேள்வியற்ற அறிவீனர்கள். சிற்றின்பப் பிரியர்கள். துர்மார்க்கர்கள். அவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய விஷயத்தைப்பற்றி யொன்று மறியாதார். உயர்வான ஹிந்து சமயத்திற்கு இவர்களாலிருக்குந் தடையும் கேடும் பல. இவர்களால் மானக் குறைவும், ஹிந்து மதத்திற்கு அடிக்கடி நேர்ந்து கொண்டிருக்கிறது. இவர்களைக்கற்பித்துப்பரிசுத்தமான நல்வழிக்குக் கொண்டுவரக் கூடிய விமோசன மார்க்க மில்லையா? ஈச்வர விக்கிரகத்தண்டை துரெண்ண முள்ளவனும், துராசாரமுள்ளவனும் நின்று நிவேதனங்கள் சமர்ப்பித்தல் முதலிய கிரியைகளைச் செய்வானேயாகில், அவனிட மிருந்து துஷ்கரமான வாசனைகள் விக்கிரகத்தினிடந்தாக்கி அதன் மூலமாக எங்கும் பரவித் தேவ தூஷணையும், அபசாரமும் சம்பவிக்கும். கிறிஸ்துப் பாதிரிமார்கள் செய்யும் தூஷணையினால் ஹிந்து மதத்திற் குண்டாகும் தூஷணையை விட ஆயிர மடங்கு ஜாஸ்தியுண்டாகிறது. ஏனெனில், பாதிரிமார் தீங்கெல்லாம் வார்த்தைமட்டிலே. பூஜகர்கள் அசுத்தமும் துராசாரமும் அங்கு விளங்கும்சக்தியைத்தொலைத்துப்போய்க்கும்படி செய்கின்றது. மகந்துக்கள் பண்டாக்கள் பரஷைப்புரோகிதர்கள் என்றநாமங்களை உச்சரித்தமாத்திரத்தில் துராசாரமும் துஷ்கிருத்தியமும், மானக்குறைவும், கவுரவமின்மையும், ஞாபகத்திற்கு வருகின்றன. அந்தோ! என்ன கொடு

மை : புண்ணிய தீர்த்தக்கரையில் தேவர்களுக்கு ப்ரேயஸான புண்ணிய ஜலத்தின்கண்ணேயே யாத்திரைக்காரர்களைச் சுற்றிக்கொண்டு, பணவாசை பிடித்த இந்தப்பண்டாக்கள் முதலாயினோர் அவர்களை இப்படி யப்படி யிழுத்து ஹிம்சித்துப் பணத்தைப் பிடுங்குகிறதற்காகச் செய்யும் கொடுமைகள் எத்தனையோ? கணக்கிடமுடியுமோ? இவ்விடங்களுக்குத்தேவதையுமிணங்கி வருவார்களா? எப்படிவருவார்கள்? கவுரவமுள்ள ஹிந்து பக்த சிரோமணிகள் அநேகர் தங்களுடைய பெண்டுகள் போகக் கூடச் சம்மதிக்காத ஆலயங்களுமிருக்கின்றன. பெண் பாலகர்களின் காப்பில்லா ஆலயங்களுக்குள் தேவர்கள் வருவார்களா ? பக்தி முறை சமய முறையென்று பேர் வைத்துக்கொண்டு அக்கிரமங்கள் நடைபெறு மிடங்களை மஹாத்து மாக்கள் அணுகுவார்களா ? நமரங்காள் ! இக்கொடுமைகள்தான் ஹிந்து சமயந் தலையெடுக்காமல் தடுக்கின்றன. அவைகளை யெல்லாரும் அறிவார்கள். வெளியிற் சொல்லாமல் ரகசியமாகப் பிரஸ்தாபிப்பார்கள். இந்த உயர்வான சமயத்திற்கு இவைகள் வேர்ப்புழுவாம். அதன் கண்ணுள்ள உயிரை யுண்டு அந்த மதத்தில் சிரத்தை விசுவாசமுள்ளவர்களுக்கும் அதின் கவுரவத்தை நன்கு பாராட்டுஞ் சிலர்களுக்கும் அதின்மேல் வெறுப்புண்டாகும்வண்ணம்செய்து வருகின்றார்கள். இக்காலத்தில் குல குருவுக்கும் அன்பும் மரியாதையும் பற்றி ஜனங்கள் ஒழுகின்றார்களில்லை. அதற்கு

காரணம் மேற்றேயத்து ஆங்கிலப் படிப்பும், அதினால் விளையுஞ் சமய விசுவாசமின்மையும் மாத்திரமல்ல. மரியாதைக்கு அநர்கமானவர்களுக்கு மரியாதை யெங்ஙனஞ் செய்கிறது? நாமங்களில் உயர்வான நாமமாகிய குருவென்ற மொழியை, மரியாதையும் மேன்மையும் பொருந்திய, கற்பிக்குஞ் சிலர்களுக்கு உபயோகப்படுத்தக் கூசுகிறார்கள். ஏனெனில், அவ்வளவு துராசாரமுள்ள அப்பெயர் வகிக்கத்தகாத இழிஞர்களுக்கு அப்பெயர் வழங்கி வருகின்றது. இந்த அபாத்திரமான குருவைக் கண்டும், அவரிட மிருக்குங் குற்றங் குறையைப் பாராட்டாமல், மஹா குருவின் அருளும், அனுக்கிரகமும் இறங்கும் நிமித்திய மாத்திரமென்றும், தன் முன்னிற்கும் அந்த அபாத்திரமான ரூபத்தை மறக்கக் கூடிய தத்துவத்தை உணர்ந்துமுள்ள தீரனுக்கு அந்த அபாத்திர குருவினால் உபதேசம் பெற்ற மந்திரம் பலவத்தாகிப் பரிசுத்தஞ் செய்யத்தகும். ஞானனு கூலியாகவு மேற்படும். குருவின் அயோக்கியதை இந்தத் தீரனுக்குத் தீங்கு பயக்காது. ஆகவே, மஹா குருவின் பிரதிநிதியானவன் யோக்கியமற்றிருக்கின்ற காரணம் பற்றி, அன்பு விசுவாசங் குன்றி நீங்கள் ஒழுக வேண்டாம். சொற்ப காலம் பொறுமையுள்ளவர்களாகவிருங்கள். அந்த மஹா உயர்வான ஸ்தானத்தை உத்தேசித்தும், ஆதிகால மஹாத்மியத்தைக் கருதியும், இக்காலத்தில் நடமாடும் அயோக்கியதா ரூபத்தை மறைக்கு மாறு

போல விளங்கும். குரு வென்ற பரிசுத்தமான நாமவுயர்வை நினைத்தும், கொஞ்சம் பொறுங்கள். நீங்கள் மாத்திரம் யோக்கியர்களாக இருப்பீர்களேயாமாகில், இவர்கள் மூலமாயும், ஈசுவர அருளநுமனுக் கிரகமும் உங்களுக்குண்டாகும். ஆனல் அந்த உயர்வான குருவென்ற நாமத்தை இவ்வண்ணம் அறிவின்மையினாலும், துராசாரத்தினாலும், ஆபாசத்தில் தேய்த்துக் கீழ்ப்படுத்தி நிகழுகின்ற இப்பாவிகளுக்குக் கொடூரமான நரகப்பிராப்தி சம்பவிக்கும் என்பதுதிண்ணம். இந்தக் குரு சிஷ்யபாவமானது உலகிலுள்ள எல்லாச் சம்பந்தங்களிலும், அதிக கவுரவமும் மகிமையும் பற்றியது. உலகரக்ஷணைக்குற்ற நிதியாகவு மிருக்கின்றமையால், ஆத்தும ஹத்தி செய்யும் மஹாபாதகர்க்கு ஏற்படும் நரகமே இவர்களுக்குக் கிடைக்கும்.

நீங்களிக்காலத்திலிருக்கின்றமையால் மேற்கண்டமகத்தான விஷயங்கள், ஆதிகாலத்தின் நடைபெற்றவைகளின் ஆபாசங்களென்று நினைக்கின்றீர்களோ? என்ன? அவைகளின் யோக்கியதைகள் போய்விட்டனவென்று, எண்ணுகின்றீர்களா? அவ்வுயர்வான தத்துவபாவங்களின் சக்தி, பொய்த்துப் போயிற்றென்றும், மந்திரங்களுக்கு வீரியமற்றுவிட்டதென்றும், கவுரவந்தங்கிய சாஸ்திரங்களுடைய யோக்கியதையும் வலிமையும் போய்விட்டனவென்றும், கருதுகிறீர்களா? அவ்விதமேதேனும் வேற்றுமைநிகழ்ச்சி யிருப்பினும்,

அது மந்திரமுதலிய வைகளின்கண் அன்று. அவைகளை யுபயோகித்துவருகின்றவர்களின் குற்றமேயாம். அவைகள் அவர்கள் கையிலகப்பட்டு, உயிரில்லா வெற்றுடல்களாகி விட்டன. அவைகள் ஒருகாலத்தில், தேவதாசக்திகளை மனிதர்களுக்குப் புலப்படுமாறு, இவ்வுலகத்திற்கு அழைத்தன. உங்களுடைய சாஸ்திரங்களுக்கு (அதனால் அவர்கள் கௌரவத்தையும், யோக்கியதைகளையும், நீங்கள் அறியீர்கள்) முன்போன்று இக்காலத்திலும் அந்த யோக்கியதைகள் இன்னுமிருக்கின்றனவென்று உங்கள் முன்னர்நிற்கின்ற யான் உறுதிசொல்லுவேன். சரியானபடி நேர்மையான ஸ்வரத்துடன் உச்சரிக்கப்படுமேயாகில், இந்தமந்திரங்களுக்கு இன்னும் முன்போலவே சக்தியுண்டு. மகத்துவந்தங்கிய சுலோகங்களைச் சுத்தமான அறிஞர்கள் கானம் பண்ணுவார்களேயாகில், அவைகளுக்கு முன்னரிருந்த யோக்கியதையின்றும் இருக்கிறதென்று நான்நேரில் அறிவேன். அவைகளைக் கேட்க முன்போலவே நான்குதிக்கினின்றும். தேவர்கள் கூடுகின்றார்கள். அவர்களுடைய திவ்வியவஸ்திரங்களின் சலசலப்பு நமக்குக்கேட்கின்றது. சுத்தமான பரிமளம் வீசிக்கொண்டுவருகின்றார்கள். கந்தர்வர்களின் வாத்தியகோஷங்கள், பூஜகர்செய்கின்ற கான சமஸ்கிருதசுலோகத்திற்கு ஒத்து இசைபாடுமாறுபோலத் தொனிக்கின்றன. அஃது இப்போதும் உண்மை. இம்மந்திரமுதலியவற்றிற்கு உட

லிருக்கின்றது. அவைகளை உயிர்ப்பிக்கவேண்டிய உயிர் மாத்திரம் அபேக்ஷை. அதுதான் குறை. அதை நிறைவு செய்யத்தான் நாம் முயலவேண்டியது.

என் சகோதரர்களே! முந்திய உயர்வான பிராசீனதர்மங்களின் நேர்மையைக் கெடுக்காமலும், குறைவுபண்ணாமலும், அவைகளை வைத்துக்கொண்டே, அவைகளைப்பற்றியுண்டாயிருக்கிற கேடுகளையும், துராசாரங்களையும் விலக்கி, ஆதிதர்மங்கள் யதாப்பிரகாரம் நிகழும்படிசெய்யப் பரிகாரமுண்டா? அல்லவா? இந்தக்கேடுகளையும், துராசாரங்களையும், ஒருங்கே தொலைக்கிறது சிரமமில்லை. இந்தியர்களின் மனத்தில் இவைகளின் கொடுமைகளைப்பற்றிக் கோபமூட்டுவதும், அதனால் இவைகளை வேரோடு அறுப்பதும் பிரயாசையில்லை. அப்படிச்செய்வோமாகில், அவைகளுடன் உயிர்ப்பிக்கவேண்டிய ஆசாரங்களும் தர்மங்களும் எல்லாம்போய்விடுமேயென்று தோன்றுகிறது. இந்தச்சங்கடம் நம்மெதிரே நிற்கிறது. கொஞ்சம்பொறுமையாயும், பதவாகமாயும், வேலைசெய்கிறதுதான் நலம். அன்றேல், இந்தியதேசத்தின் ஞான அபிவிர்த்திக்கு ஆஸ்பதமாயும், அதைத்தங்கப்பெற்றுமிருக்கிற ஆசாரங்கள் போய்விடுமாகில், நம்கைங்கரியகாரியங்கெட்டுப்போம். கவர்னமெண்டு சட்டதிட்டங்களினால், வெளிப்படையாயுள்ள துராசாரங்களையும், கேடுகளை

யும். நிவர்த்தித்துக் கொள்ளுவது ஒருபெரிய காரியமில்லை. ஒருதடவை குற்றவாளியானவன், மடாதிபதியாகவிருக்க அருகனில்லை என்றதை விதித்துச்சட்டத்தைக் கிறிஸ்துவர் ராஜாங்கமுண்டுபண்ணியபடிசெய்வது இலகுவான விஷயம். ஆனால் இந்தியாவின் ஞானமேம்பாட்டைத் திரும்பவும் ஸ்தாபிக்கவேண்டுமென்ற கருத்திருக்குமாகில், அப்படிப்ப ட்டதான சீர்திருத்தமுண்டுபண்ணுகிறதினால், நம்முடைய லக்ஷியமான விஷயம் போய்விடுமல்லவா? ஞான ஆத்மதர் மத்தின்விஷயத்தில் வெளிப்படையாய்ப்பதறி மாறுதல் செய்தல், அவ்வளவுபுத்திசாலித்தனமன்று. இதில் தாமத மென்று எண்ணக்கூடாது. விஷயம் முக்கியமானது. ராஜா ங்கரீதிகளைப்பற்றினவைகளில், சீர்திருத்தஞ் செய்யவேண்டு மேயாகில், உடனே யாதொரு சாவதானத்தையும் கவனி யாமல் சட்டநிர்மாணஞ் செய்தல்மூலமாய்ப் பரிகாரந்தேட லாகும். மேற்கண்ட ஆசாரங்கள், தர்மநெறிகள் இவைகள் சம்பந்தமாயேற்பட்டிருக்கும் கேடுகள் சட்டங்கள் வரம்புக் குள் வாராதபடி ஆழ்ந்து வேரூன்றி இருக்கின்றன. இவை களைக்களைந்து சீர்திருத்தம்பெற வேண்டுமானால், மௌன மென்ன? பதவாகமாய்த்தானேற்படும். நாம் நோக்கா யிருக் கிற லக்ஷியத்தை அபேக்ஷித்து நாம் சற்றுப்பொறுமைபாரா ட்டமுடியாதா? நான் முன் பிரஸ்தாபித்திருக்கிற துராசா ரங்களும், கேடுகளும் நிவர்த்திக்கப்படவேண்டுமானால் இர

ண்டு காரியங்கள் செய்வித்தல்வேண்டும். நாளடைவில் கல்வி அபிவிருத்தியொன்று ஹிந்துக்களுக்குள்ளேயே ஞான பாவம் விருத்தியடையவேண்டுவது. மற்றொன்று இக்காலத்திலிருக்கின்ற கொடுமைகளைப்பார்த்து மனம் கோபங் கொண்டிருக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிறமார்க்கங்கள் அவ்வளவு திருப்தியாக விராதென்றும், அக்கொடுமைகளை இப்போதே தொலைக்கவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயமிருக்கிறதென்றும் நான் நன்றாய் அறிவேன்.

வேலை செய்யவேண்டுமென்று நான் சொல்லுகிறதினாலே அக்கொடுமைகளின் சார்பாகவிருக்கின்றேனல்லேன். இந்தச்சமயம் பிராசீனகாலத்திருந்த ஒரு மஹான் சொல்லியிருக்கிற வசனம் ஞாபகத்திற்குக் கொண்டுவரத்தக்கது. "கோதுமைப்பயிருடன் முளைத்திருக்கிற களைகளை அவசரமாய்ப் பிடுங்காதேயுங்கள். இளங்கோதுமைப்பயிருங் கையுடனே வந்துவடும். பயிர் வலுப்பட்டுப் பின்னர் களை பிடுங்கினால் பயிரின்வேர் அறாது. மணி சேதமாகாது. களையை இலகுவாய்ப்பிடுங்கி நெருப்பிற்போடலாம்."

கல்விதான் முதன்மையாய் வேண்டுவது. நான் பேசுவதெல்லாம் பூஜகர்களுடைய அறிவீனத்தைப்பற்றியேயாம். கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்திருக்கின்ற பண்டித சிரோமணிகளைப்பற்றியன்று. அவர்கள் யோக்கியதை இந்தியாவிற்குக் கவுரவம் பயக்கத்தக்கது. இந்திய தத்துவசாஸ்

திரத்துக்கு மேன்மையை யுண்டுபண்ணுகிறது. ஆனால் கோவிற் பூஜகர்களான குருக்களைப்பற்றிப் பேசுகிறேன். மேற்கண்ட கேடு வேரோடு நீங்கவேண்டுமானால், இவர்கள் கல்விப்பயிற்சி யடையவேண்டும். இதுவிஷயமாக மனுவின் வாக்கியம் ஞாபகத்திற்கு வரலாம். மரத்தினாற் செய்த யானையையும் தோலினாற்செய்த யானையையும் ஒப்பாவான் கல்வியில்லா மூடப்பிராமணன். இவைகள் மூன்றும் பேம்பாட்டில் உள. தென்னிந்தியாவில் சம்ஸ்கிருத பாஷை தெரியாத பிராமணர்களை அநேகரைப் பார்த்திருக்கிறேன். இவர்கள் தாங்கள் ஜபிக்கும் மந்திரங்களுக்கு, ஸ்தூலமான வெளிப்படையான அர்த்தங்கூட அறியார். உள்ளடங்கிய குப்தமான அர்த்தங்கள் அவர்களுக்குத் தெரியவில்லை யென்பது ஆச்சரியமன்று. உயர்வான கிரியைகளில் நடப்பிவைக்கும் பிராமண புரோகிதர்கள் சமஸ்கிருத வார்த்தைகளைப் பிழையறக்கூட உச்சரிக்க முடியாதவர்களாகவிருக்கிறார்கள். மந்திரங்களின்கண் பிசகான சொற்களைக் கலந்து, உபயோகிக்கிறார்கள். மந்திரங்கள் சரியாய் உச்சரிக்கும் பக்ஷத்தில், ஏகதேசமிருக்கக்கூடிய சக்தியும் இக்காரணங்களினாற் போகக்கூடியதாக விருக்கிறது. இதுவிஷயமாய் மனுவின் இன்னுஞ்சில கடினமான வாசகம் ஞாபகத்திற்கு வருகிறது. எப்படி அலியானவன் ஸ்திரீயுடன் சேர்ந்தால் பசு சாந்தியில்லையோ, பசுவுடன் சேர்ந்தால் வர்க்கமில்லையோ, அப்படியே

வேதந்தெரியாத பிராமணன்பதரே. இவைகள் என்வசன மில்லை. ஹிந்து மதத்தின் தலைமைபாராட்டிவரும் உலகத்தில் இந்த ஆரிய ஜாதியாருக்குள் முதன்மைபெற்றவரான மனுவின் மொழிகளாம். பூஜகர்களை வாசிக்கும்படி செய்யமுடியாதா? அவர்கள் படிப்புக்குவேண்டிய சௌகரியங்கள் உண்டுபண்ண முடியாதா? அவர்களைச் சீர்திருத்துவது நாம் நேரில் வைத்துக்கொள்ள முடியாது. அவர்களைச் சீர்திருத்தும் அக்கினி கீழானவர்களிடமிருந்துவாராது. அவர்கள் தாங்களே தங்களைச்சீர்திருத்தக்கடவர்கள். கல்விப்பயிற்சி யேற்பட்டால், அது கைகூடும். அபிவிர்த்தி யக்கினி யவர்களின்கண்ணே உதயமாகவேண்டும். அன்றேல் செய்யும்வேலை நன்றாயமையாது. பலனும் அற்பமாகவும், நெடுங்காலம் நிகழாமல் சுருங்கியும் போய்விடும்.

தென்னிந்தியாவில் ஹிந்துமத அபிமானிகள் இதைப்பற்றி யோசனைசெய்துகொண்டிருக்கின்றார்கள். அதைப்பற்றி யென்னிடமும் சொல்லிச்சரியான பூஜகர்களேற்படும் விஷயத்தில், நானுஞ்சகாயஞ்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காசியிலிருக்கும் பிரதான ஹிந்து வித்தியாசாலையில் கோவிற்பூஜகர்கள் கல்விப்பயிற்சி பெற்றுப்பின்னர் தங்கள் பிதாக்கள் செய்துவந்த பாரம்பரையான பூஜைத்தொழிலை நடத்திவரும்படியான ஒருவகுப்பு நிர்மாணஞ்செய்தால், சாதகமாகவிருக்குமென்று தெரிவித்தார்கள்.

அந்த விஷயம் இன்னும் ஆலோசனையில் இருக்கிறது. இந்தவகுப்பில் பூஜகர் புத்திரர்கள் பொதுவாய்ச்சமயநூல் தர்மசாஸ்திரம் இவைகளைக்கற்றும், மேற்றிசையார் படிப்புப்பெற்றும், வரும்படி செய்யக்கூடும். பொதுவாய்க்கற்கவேண்டியன கற்றப்பின்னர் பூஜைக்காரியத்திற்குரிய சமஸ்கிருதஞானம் மந்திரம் ஆகமசாஸ்திரங்களில் பயிற்சியடையும்படி செய்வதாகும். இவ்வண்ணம் தென்னிந்தியர் கோரிக்கையை இந்தஹிந்துவித்தியாசாலைநிறைவேற்றுமாகில், அதினல் அதிகமேன்மை மேன்மேலும் உண்டாகஇடமுண்டு. கல்விகேள்வி நிறைந்த பூஜகர்களுண்டாவார்களாகில், அவர்கள் பரிசுத்தர்களாக விருப்பார்கள். கல்வியின்மையினுல் அதோகதி நிகழ்கிறது. நாம் நினைக்கிறபடியதுமுடிந்தால், இனி இந்தியாவின்மேன்மைக்கு இஃது அனுகூலமான கருவியாய், அறிவுள்ள பூஜகர்கள் ஆலயங்களில் கைங்கரியம் சரியாய் நடத்துவார்கள். எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டுக் கோவிலின்கண் பிரவேசிக்கும் அடியார்களுக்குத் தங்கள் நடத்தையால், பரிசுத்தமான முறையையொழுகிக்காட்டுவாராவார்கள்.

இவ்விதமான ஏற்பாடு இந்தியாவின் மற்ற இடங்களிலும் செய்விக்கலாம். இதனுல் சீர்திருத்த முண்டாகும். பூஜகர்களை நாம் வேண்டுவது யாதெனில், நீங்கள் வித்தியாப்பியாசம் பெறுங்கள். அதற்கு வேண்டிய சாதகங்களை நாம் செய்துவைக்கவேண்டும். பக்தகோடிகளால், தேவஸ்தான

ங்களுக்கு ஏராளமான திரவியங்கள் கொடுக்கப்படுகின்றன. பூஜகர்கள் கல்வி விஷயத்திற்காக ஏன் அத்திரவியத்தை உபயோகிக்கக்கூடாது. அதனால் கல்வி கேள்வி நிறைந்த அறிவுள்ள பிராஹ்மணர்கள் தேவாலயங்களுக்குப் பூஜகர்களாக அமைவார்களல்லவா? இப்படிச் செய்வோமானால், இவர்களைப்பற்றிய துராசாரம் முதலியன வேரோடு அற்றுவிடும். இக்கேடுகளை நிவிர்த்திக்கக்கருதி வேரை வைத்துவிட்டு நுனி மாத்திரம் களையயோக்கியதையுள்ள சட்டதிட்டங்களைச் சர்க்கார் மூலமாய் அமைத்துக்கொள்வதைப்பார்க்கிலும், முன் பிரஸ்தாபித்திருக்கிறது எத்துணையோ ஆயிரம் பங்கு சிலாக்கியமானதல்லவா ? ஆகையால் பதபாகமாய்ப் பொறுமையுடன் நாம் வேலை செய்யக்கடவோம். இன்னும் 30 வருஷங்களுக்குள் மனம் நோவாமலும், துவேஷ பாவங்களை யுண்டுபண்ணாமலும், பூஜகர்கள் சீர்திருத்தமடைவார்கள்.

மேலும் ஜனங்களின் யோக்கியதைக்குத்தக்கபடி அவர்களின் பூஜகர்களும், குருக்களும் லபிக்கிறார்கள். கோவில்களில் பிரவேசிக்க அநர்கர்களான பூஜகர்கள் ஆலயங்களுக்குக்குருக்களாக அமைந்திருக்கிறதற்குக்காரணம், என்னவென்றால், ஜனங்களிடம் சாத்விக தர்மங்கள் குறைவாயிருக்கின்றமையேயாம். ஒவ்வொரு ஜாதியாருக்கும் கர்மகதிப்படிதான் ஒவ்வொரு காரியமும் ஏற்படும். இந்தியாவில் கீழானதர்மமுள்ள ஜனங்களிருக்கின்றபடியால், துராசாரமுள்ள பூஜ

கர்கள் அமைந்திருக்கிறார்கள். மேற்றிசையார் வெளிப்படை யாயிருக்குங் கேடுகளைக்கண்டு அவைகளை நிவிர்த்திக்க முய லுவார்கள். கீழ்த்திசையார்களோவென்றால், கர்மகதியைக் கண்டு பிடித்து அதற்குரியவாறு நன்மைபயக்கும் வித்துக் களை விதைப்பார்கள். மேற்றிசையார் நினைக்கிறபடி நம்மு டைய விஷயங்களெல்லாம் இந்த ஒரு ஜன்மத்தோடு அற்று ப்போகின்றது அன்று. இச்சரீரங்களுடன் நாம் முடிவு அடை வோமல்லோம். எத்தனைபோ ஜன்மங்கள்நமக்குஉள. ஆகவே வருங்காலத்தையுத்தேசித்துநாம்சாவகாசமாய்ப்பதட்டமின் றிமுயலக்கடவோம். நாம்மேன்மேலும்விகாசமாகிக்கொண் டேவருகிறோம். பண்டையகாலதர்மங்களைப்பற்றிநடக்கக்கட வோம். நம்மைச்சாத்துவிகர்களாகஆக்கிக்கொள்ளக்கடவோ ம். தினந்தோறும்விடாமுயற்சியால்,மேலானஞானப்பிராப்தி லபிக்கவேண்டுமென்று, பஜிப்போமாக. நம்முடைய ஒழுக் கத்தைச்சுத்தஞ்செய்து, அன்பு, ஆதரவு, பூதயை, அமைய ப்பெற்று ஒழுகுவோமாக. இப்படி நம்மைச்சீர் திருத்திக்கொ ள்ளுவோமாகில், ஆலயத்திற்கும் கிருகத்திற்கும் யோக்கிய தைபொருந்திய சரியான குருக்களும், புரோஹிதரும், கர் மானுசாரமாய் வாய்ப்பார்கள். தர்மகதியையும், ஒவ்வொ ருசம்பவத்திற்கும், காரணரூபமாயிருக்கின்ற தேவர்களையும் நம்பி நடத்தக்கடவோம். அத்தேவர்கள் சக்தியுண்மை, அது வே உலகத்தின்கண்ணுள்ள ஜாதியார்களை நடத்துகின்றது.

பக்தியுடன் நம்முடைய ஆசை அர்ப்பணஞ்செய்தால், அவர்களும் அதற்குப் பிரீதிப்பிரயோசனமாக உத்தமகுருக்களையும், பூஜகர்களையும், நமக்குத்தருவார்கள். ஆக நான் தங்களுக்கு அறிவுறுத்துகிறவை இரண்டாம். அவையென்னவென்றால், குருக்கள் கல்விப்பயிற்சியும், ஜனங்கள் மேன்மேலும் பொதுவாய்த் தர்மபாவத்தைக்கைப்பற்றி அநுஷ்டித்தலுமேயாம்.

ஒவ்வொருவரும் இதைத் தன்விஷயமாகப்பாவிக்கவேண்டும். அயலான் செய்யட்டுமென்றிருக்கக்கூடாது. இந்தியா அந்தோ! எவ்வளவு கீழான ஸ்திதியிலிருக்கிறதென்று நாம் சொல்லாமல், நாம் ஒவ்வொருவரும் தாழ்மையடைந்திருக்கிறோமென்று கருதி நாம் மேன்மையடைய முயலுவோமாக. ஒவ்வொருவருந் தனக்கேற்பட்ட தோட்டத்தைப்பண்படுத்தி விருத்திசெய்வாராகில், முழுநிலம் பைங்காலாகி விருத்திக்குவந்து விடும். தேவதா அநுக்கிரகமும் ஜனங்களுக்கேற்படும்.

இவ்வண்ணமாகவே குலகுரு குலப்புரோஹிதர் விஷயத்திலும் நடத்தவேண்டும். நன்றாய் வேலைசெய்யுங்கள். பொறுமையுடன் காரியங்களைக்கொண்டு செலுத்துங்கள். பதட்டமாய்ச்செய்து கேடுஉண்டுபண்ணாதேயுங்கள். முக்கியமாய் லகுவாய் ஒருவிஷயம், நீங்கள் அநுஷ்டிக்கலாம். வைதிககிருத்தியங்கள் பலவாறாக நீங்கள் செய்கிறதில், அவைகளுக்கு வரிக்கப்படும் பிராமணர்களைக் கல்வி கேள்வி நிறைந்த சீ

லர்களைத்தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாய் உங்கள் கிருத்தியங்களைக்கொண்டு செலுத்துங்கள். உங்களுடைய ஒழுக்கத்திற்கும், கடமைக்கும், எவ்விதகுறைவுமின்றி யிதைக்கொண்டு செலுத்தக்கூடும். துராசாரமுள்ளவர்கள், மூடர்கள், இவர்களை விலக்கிவிடலாம். அவ்விதந்தெரிந்தெடுத்தல் கூடுமென்று இருக்குங்காலத்தில், உபயோகமுள்ள அறிஞர்களுக்குக் கவுரவஞ்செய்யாமல், மூடர்களுக்கு என்தக்ஷிணை முதலியவை அளிக்கவேண்டும்? இவ்விதமாக நேர்மையான மாறுபாடுகள் சீக்கிரமாயுஞ் செய்விக்கலாம். உயர்வான தர்மபாவங்களுக்கு எவ்விதமும் ஹானிசெய்யாமல், இவ்வண்ணம் நடத்தல் கூடும்.

இன்னும் கொஞ்சந்தூரமும் போகக்கூடுமென்று எனக்குத்தோன்றுகிறது. இது சிரமசாத்தியமானதுதான். செல்வாக்குள்ள புத்திசாலியான சிலகுருக்களையும், புரோஹிதர்களையும், பண்டாரங்களையும் நம்முடன் சேர்த்துக்கொண்டு, அவர்கள் மூலமாயொருசபையேற்படுத்தி, அச்சபையினின்று அயோக்கியமானவரும் குற்றவாளிகளாகக்கோரட்டாரால் பகிரங்கமாகத்தீர்மானிக்கபெற்றுள்ள வருமான புரோஹிதர்கள், பண்டாரங்கள் இவர்களை அவரவர் தொழிலைச் செய்யாமல், தவிர்க்கும்படி செய்யமுடியுமல்லவா? இவர்கள் கோர்ட்டுகள் மூலமாய்த் தங்கள் சொந்த விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள அதிக ஊக்கமுள்ளவர்களாகவிருக்கின்றார்களென்றுநான் அறி

வேன். தேவதார்ப்பிதமான திரவியத்தைக் கோர்ட்டுகளி லும், விவகாரங்களிலும், வீணாயிறைக்கின்றார்கள். அடியா ர்களால் ஈசுவர அர்ப்பணஞ்செய்த திரவியத்தை வக்கீல்களு க்கும் விவகாரத்திலும் அழிக்கின்றார்கள். புரோஹிதர்கள் த ங்களுடைய மிராசை ஒத்தி முதலான பந்தகங்களுக்குட்படு த்துகிறார்கள். அதினால் சில சமயங்களில், அம்மிராசுக்குக் கிடைக்கக்கூடிய தக்ஷிணை வகையரா சொர்ணாதாயங்கள் ஹி ந்து மதத்திற்குப் புறம்பாயுள்ள இதரமதஸ்தர்களுக்குப் போய்ச்சேருகின்றன. ஆகையால் யோக்கியர்களான சில புரோஹிதர்களும், குருக்களும், ஒருங்குசேர்ந்து அக்கிரமங் களைச் சீர்திருத்தவும், அயோக்கியர்களைத் தங்கள் மிராசுபா த்தியங்களை அடையாமலும், அதற்குரியவரும்படிகளைப் பெறாமலும் தடுக்கக்கூடும். நல்லவர்கள் இவ்விதம் நடத்து வார்களேயாமாகில், அவர்களே இவ்விஷயங்களைப் பரிசீலன ஞ்செய்து தீர்மானிக்க, ஒரு நியாயசபையாகவேற்படுத்திக் கொள்ளலாகும். ராஜாங்கத்தாரும் இச்சபையைக் கவுரவ ப்படுத்தி அதன் தீர்மானங்களை நன்குமதிக்கக்கூடும். ஆல யங்கள், புரோஹிதர்கள், மிராசு வகையரா இவை சம்பந்த மாய் இச்சபையார் செய்யும் தீர்மானங்கள் முடிவுள்ள வைகளாக ஆகிவிடும். இவைகள் சம்பந்தமாய் சீவில் கோர்ட்டுகளில் பிடிக்கத்தக்கதில்லையென்றே சம்பவிக்க வுங்கூடும். முதல்முதலிற் கோர்ட்டாரால், தீர்மானிக்கப் பெற்றுள்ள, குற்றவாளிகளை விலக்க ஆரம்பித்தால்,

பிறகு சிறுசிறு அக்கிரமங்கள் செய்கிறவர்களைப்பற்றிக்கவனிப்பாம். சமயமுறைகளிலும், வியவகார முறைகளிலும், பயின்றவர்கள் தான் இந்த மாதிரியைஅநுஷ்டானத்திற்குக் கொண்டுவரமுயலக்கூடும். நான் இந்த விஷயத்தில் சில உபாயங்கள், யுக்திகள், மாத்திரஞ்சொல்லக்கூடும். அறிவுள்ள கற்ற விவேகிகளான ஹிந்துக்கள் இவைகளை ஆசரணைக்குக்கொண்டுவரக்கூடுமாவென்று யோசித்து, ஆதி புரோஹித தர்மத்திற்கு எவ்விதக்குறையும்,கவுரவஹானியும்,நிகழாமல், நடைபெறுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். ஜனங்கள் சாத்விகதர்மங்களைப் பெறவும், புரோஹிதர்களும், குருக்களும், கல்விகேள்வியிற் பயிலவும், இவ்வண்ணஞ்சீர்திருத்தங்கள் நடைபெறுமாகில், நாளடைவில் ஹிந்து சமயம், ஹிந்து ஆசாரம், இவைகள் மேன்மையான ஸ்திதியை யமையப்பெறும். பூஜகர்களுடைய மூடத்தன்மையும், துர்நடத்தையும் நிவர்த்திக்கவேண்டியதைத் தவிரத் தேவஸ்தானங்கள் சம்பந்தமாய்ப் பின்னுஞ்சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுவது ஆவசியம். அதாவது பிராணிகளைப்பலிகொடுத்தல், தேவதாசிகள் இருத்தலாம். இவைகள் சிறுபான்மையாய் சில ஆலயங்களில் வழங்குகின்றன.

பிராணி பலியைப்பற்றிச் சார்பாய்ச் சிலர் பேசுகின்றார்கள். " அதன் தத்துவத்தை யவர்களைவிட யான் நன்றாயறிவேன். இக்காலத்தில் அனுஷ்டானமாய்க்கொண்டிருக்

கிறப் பிராணி பலிக்குச்சமாதானமே கிடையாது. இரத்தக் குறியானது ஆலயங்களுக்கு அபசாரத்தை உண்டுபண்ணுகிறது. கலியுகத்தில் பிராணி, பலிகள் ஆசுரகிருத்தியங்களாம். அவைகள் பஞ்சபூதாத்மகமான யாக்கைக்குக்கேடு விளைவிக்கிறதுந்தவிர அதில்அந்தர்யாமியாகவிருக்கின்ற ஆன்மாவிற்கும், கிலேசம் விளைவிக்கின்றது. ஆகவே இக்கிருத்தியத்தைத் தவிர்க்கக்கடவோம். "எவ்வுயிரும் பராபரன்சந்நிதியதாகும். இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன்கோயில்" "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிதின்னுயிர்நீக்கும் வினை."

தேவதாசிகள் விஷயமும் இவ்விதந்தான். பூர்வகாலத்தில் ஆலயங்களில் பரிசுத்தமான சத்கன்னிகைகள் என்ற ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். அப்போதைக்கப்போது பக்தஜனங்களுக்கு ஏதாவது எச்சரித்தல், அல்லது உபதேசஞ்செய்யவேண்டுமானால், அவர்களுடைய நுல்லியமான நாவின் துவாரா ஒருதேவர் அல்லது ஒரு மஹரிஷி பேசுவார்கள். ஒரு சுத்தமான கன்னிகையாயிருந்தாற்றான், மஹாத்துமாக்கள், அந்தக்காலத்தில் பரகாயப்பிரவேசம் செய்தல் கூடும். இக்கன்னிகைகள் அதிக கவனமாய்ப் பாதுகாக்கப்பட்டுவந்தார்கள். வெகு கவுரவமாய்க்கொண்டாடப்பட்டுவந்தார்கள். அவர்கள் கோவிலிலிருக்கின்ற குருக்களுக்குச் சிசுருஷை

செய்துவந்தார்கள். ஸுகந்த வாசனை தூபங்கள் போடவும் மண்டபந்தோறும் சுவாமி புறப்பாடு நடைபெறவும், திவ்விய உயர்வான ஹாரங்களணிந்து தாங்கள் கானஞ்செய்துகொண்டே அவைகளுக்கு இசைய, அவர்கள் தேவநர்த்தனஞ் செய்வார்கள்.

பூஜகர்கள் இழிஞராகவே, அவர்களுடன் தேவதாசிகளும் இழிவையடைந்தார்கள். இப்போது தேவதாசியென்ற பெயர் சொன்னமாத்திரத்தினுல், மானக்கேடான துஷ்கிருத்தியந்தான் புலப்படுகிறது. ஸ்திரீகள் இத்தகைய கேடான ஸ்திதியையடைந்தால், சத்ஆசாரமும் சத்வாசனையும் போய்விடுமென்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது. ஆகவே மேலான சத்ஆசாரங்கள் கெட்டு இக்காலத்தில் மகா பாபங்களுக்கு ஆஸ்பதமாகியிருக்கின்றன.

பிராசீன சத்ஆசாரங்களை இந்தியதேசத்தின் ஆலயங்கள் திரும்பவும் பெற்று நடைபெறுவது முடியாதா? அந்நினைப்பெல்லாம் வீண்கனவாகவாமுடியும்! ஆலயங்களின்கண் பிரதிஷ்டை செய்திருக்கின்ற விக்கிரகங்களுக்குமுன்போலச் சக்தி விளங்காதா? பூஜகர்கள் முன்போலிருக்கவொண்ணுதா? குரவர்கள் முன்போலக் கல்விகேள்வி நிறைந்த பரிசுத்தர்களாகவிருக்கவும், சிஷர்களுக்குத் தக்கபடிநேர்மையாய்ப் போதஞ்செய்யும், சிரேய ஸானமார்க்கத்தின்கண் நடத்தவும், இயலாதா? அல்லது இவைகளெல்லாம்வீண்மனோராஜ்ஜியந்தானு?

என் சகோதரர்காள், நான் அவ்விதமாகுமென்று எண்ணுகிறேன் அல்லன். ஏனைய தேசங்களிலில்லாத ஒரு பெரிய யோக்கியதை இத்தேசத்திலிருக்கின்றது. ஜனங்களின் ஹிருதயத்தில் சத்பாவம் குப்தமாய் இன்னுங் குடிகொண்டிருக்கிறது. அதின் சக்தி விளங்குகின்ற இடங்கள் இன்னும் தங்கியிருக்கின்றன. பரிசுத்தமமைந்த திவ்விய க்ஷேத்திரங்கள் இனிவருமவர்களை உத்தேசித்து இன்னுமிருக்கின்றன. ஹிந்துக்களின் ஹிருதயத்தில் மற்றையவிடத்தில் கிடைக்கத்தகாத ஞான அக்கினி இன்னும் தங்கியிருக்கின்றது. மற்றைய ஜாதியாரால் முடியாததான ஞானப்பிரச்நத்திற்கு உத்தரமளிக்கக்கூடிய திறமை, இந்தியர்களிடம் இன்னுமிருக்கிறது. இவைகளெல்லாம் பாழாகவாபோகும்? இந்தியாவின் உயர்வான மனோபாவம் உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கும் இத்தருணத்திலா, இவைகளெல்லாமிழந்துவிடுவோம்? உலகத்திற்குக்ஷேமகரமான உயர்வானசந்மார்க்க அருள்வெள்ளம் மேன்மேலும் மேற்குத்திசையாருக்குவந்துகொண்டிருக்கும் இச்சமயத்திலா, அவ்வெள்ளத்தின்பயனை இந்தியர் மாத்திரமடையாமல், புறம்பாகவிலகியிருக்கக்கூடியவரா? அஃது அவ்விதம் நேரிடாது. நேரிடவேண்டுவதுமில்லை; இது நிச்சயம்; இது சத்தியம்.

இந்தியர்கள் அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வார்களேயாகில், அதாவது, பூர்விக ஸ்திதியையினைந்

தும், தேவதா பக்திபூண்டும், உயர்வான பதவியிலிருந்து ஏனைய தேசத்தினரைக்காட்டிலும், இந்தியர்கள்மேல் அதிக பக்ஷமும், ஆதரவும், உள்ளமும், இந்தியர்கள் தங்கள் நிலைக்குவருதலை அதிக அன்புடன் எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கின்ற சிரஞ்சீவிகளான மஹாரிஷிகளிடம் விசுவாசம் பாராட்டியும், இந்தியர்கள் நடைபெறுவார்களாகில், இந்தியதேசம் மேன்மையடையுமென்பது திண்ணம். இந்திய தேசத்திற்கு இனி க்ஷேமகாலமில்லையென்றுவது, மதங்களிலெல்லாம் மஹா பஹத்துவமமைந்த ஹிந்து சமயம் திரும்பவும், மேன்மையடையமாட்டா தென்றுவது, நான் அற்பமேனுமெண்ணவேயில்லை. அஃது உலகமெல்லாம் பூஜிக்கத்தக்கதான உத்கருஷ பதவியைப்பெற்று உலகத்திற்கு ஞானசக்தியே ஸ்வரூபித்து வந்தமைபோன்றுஆகும். எவ்விதம் நினைப்பினும், இனி அநேக சத்குணசம்பன்னரான ஜாதியார்கள் அதின்கண்ணே உற்பவிக்கப்போகின்றார்கள்; இது சத்தியம்.

ஆலயங்கள் முன்போலவே, சத்பாவங்களமைந்த ஸ்தலங்களாகப்போகின்றன. மஹத்தான மந்திரங்களை முன்போலவே, நேர்மையாகவும், பரிசுத்தகரமாகவும், கானஞ்செய்யப்போகின்றார்கள். தேவபாஷை முன்போலவே, கௌரவம்பெற்று வழங்கப்போகின்றது, மனிதர்களும் மஹிமைபெற்ற தேவதைகளிடம் பக்தி பூண்டு அன்பினால் மனமுருகிப்பணி

வார்கள். ஆசாரியர்களானமஹாத்துமாக்களிடம் விசுவாசமுள்ளவர்களாய், உபசரிப்பார்கள். சகோதரர்களே, இவ்விதம் நடக்கப்போகின்றன என்று கனவாகக்காண்கிறேன்.

இது கனவாக முடியாமலிருக்கும்படி தேவர்கள் அனுக்கிரகிப்பார்களாக. இது கனவாக முடியுமென்று சங்கித்தாலும், சத்விஷயத்தில் முயற்சி நன்றேயாம். சத்கர்மம் ஒருகாலும் வீண்போகாது. முயற்சி திருவினையாக்கும். மெய்யுணர்வு இத்தேசத்தில் உற்பவிக்குமேயாகில், உலகமெங்குமுண்டாகக் காரணமாகும். மெய்யுணர்வின் கவுரவம் இனி இந்தியாதேசத்திற்குச் சம்பவியாமற்போயினும், அக்கவுரவம் ஏனைய தேசத்திற்கு வாய்ப்பினும், எங்கேயாவது உலகமெங்கும் வணங்கற்பால சத்பாவன மெய்யுணர்வு உபதேசிக்கும் ஆசாரியர்ஏற்பட்டாலும், இந்தியாதேசத்திற்கு வரவேண்டுமென்று யத்தனஞ்செய்கின்றவர்கள் மனோரதம் நிறைவேறியதாகும். அந்தப் பரம ஆசாரியன் ஹிந்துவின் சரீரம் பெற்றும், ஆதிமஹரிஷிபோன்று இருக்கவேண்டுவரென்று நான் தேவதைகளைப் பிரார்த்திக்கிறேன். அத்தகையர் ஏற்படவேண்டுமென்றே நான் வேலைசெய்கிறேன். அதற்காகவே என்னுயிரையுந் தியாகஞ்செய்யச் சித்தமாகவிருக்கிறேன். ஹிந்துவின் சரீரம் இந்த ஜனனத்தில் எனக்குப் பிராப்தமில்லை. ஹிந்து சரீரம்பெறும்படியான புண்ணிய ஆத்துமாக்களாகிய நீங்களும், உங்கள் உயிர்களைத் தியாகஞ்செ

ய்வீர்களாக. நான் புகக்கூடாத ஆலயங்களுக்குள், நீங்கள் போகலாம். அவைகளின்கண் நான்போய் நிற்கக்கூடாத பிரகாரங்களினின்று பூஜிக்கலாம். இத்தன்மையான கௌரவம்பெற்ற நீங்கள் மேற்சொல்லியவாறு உலகத்தில் நிகழும்படி, முயற்சிப்பீர்களாக. இஃது என்னைவிட உங்களுக்கு அதிக பிரியமும் சுகிர்தமுமான விஷயம். அன்போடு உருகி அகங்குழைந்து வசனிக்கின்றேன். அதைக்கேட்கும் உங்கள் செவி யிரும்பினும் வலிதா? ஹிந்துசமயம் போகுமாகில் இந்தியாதேசம் முழுகிப்போம். இது சத்தியம். இது சத்தியம்.

---

# ௩-வது உபந்நியாசம்.

## ஜாதி முறைமை.

சகோதரர்களே! ஜாதி முறைமையைப்பற்றி யின்று இரவு விசாரிப்போம். அஃது ஆரியநாகரீகம் இந்தியாவில் தோன்றிய காலமுதற்கொண்டு இக்காலம் வரை நடைபெற்றுவருகின்றது. இந்தியர்களுடைய ஆசாரமுறை நிலைபெற்று இருக்கிறதற்கு முக்கியமான சாதனமாக இருந்திருக்கிறதென்று சொல்லலாம். இதைப்பற்றி விசாரிப்பதில் இதுவரை முந்திய உபந்நியாசங்களிற் செய்து வந்தபடி, இன்று உபந்நியாசத்திலும்செய்வோம். அஃதாவது முதலில் அதன்உயர்வானஸ்திதியைப்பற்றியும், பின்னர்இக்காலத்தில் நாம்பார்க்கிறபடி அது சீர்குலைந்த நிலைமையைப்பற்றியும், பின்புபூர்வ ஸ்திதியைப்பற்றி அஃது ஒழுகவேண்டுமானுல்,என்னகுற்றங்குறைகளை எவ்விதமாய் நிவர்த்தி செய்யவேண்டுமென்பதையும், எவ்விதமான சீர்திருத்தங்கள் சாத்தியமென்பதையும் விசாரிப்போம். ஒரு ஜாதியாரின் ஒழுக்கமுறைமையைப்பற்றிச் சாவதானமாய்ப் பேசவேண்டும். அதில் ஏதாவது மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்று அபிப்பிராயம் சொல்லுவதாய் இருந்தால், சாவதானத்துடனும், முன் யோசனையுடனும், பிரஸ்தாபிக்கவேண்டும். ஆகவே பின் சொல்லிய விஷயத்தைப்பற்றிப் பரிசோதனார்த்தமாகச் சில

விஷயங்களை உங்களுக்குச் சொல்லுவேன். அவைகளைச் சொல்லியவண்ணம் பூர்ணமாய் நீங்கள் அங்கீகரிக்க முடியாவிடினும் நீங்கள் ஆலோசிப்பதற்கு அனுகுணமாயிருக்கும். இதைப்பற்றியும் இது போன்ற மற்ற விஷயங்களைப்பற்றியும் பேசுகிறதில் முக்கியத்தை அமுக்கியத்தினின்று வேறுபடுத்தவேண்டும். எக்காலத்திலுமுள்ளதும், இன்றியமையாததுமானவை இன்னவை யென்றும், அப்போதைக்கப்போது சௌகர்யபக்ஷமாய் உண்டாகியும், முக்கியமாய் ஏற்படாமலும், சனாதனமான ஒழுக்கத்திற்குக் கேடுபயக்கத்தக்கதாகவும், இருக்கிறவை இன்னவை யென்றும், நாம் பகுக்க வேண்டும்.

ஜாதியினுடைய உற்பத்தியைப்பற்றிப் பகவத்கீதை நாலாவது அத்தியாயத்தின் பதின்மூன்றும் சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறார்.

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

(இ. ள்.)—"நாலு வர்ணங்களும் என்றால், குணங்கள் கர்மங்கள் இவைகளைப்பாகஞ் செய்வதினால் அமைக்கப்பட்டன. அக்குணகர்ம பாகமாகிய சிருஷ்டிகளுக்கு நானே கர்த்தா ஆயினும் என்னைப்பற்றற்றவனாகவும் நாசமற்றவனாகவும் அறி." ஆகவே இந்த சுலோகத்தில் கண்டிருக்கிற வார்த்தைகளால் குணகர்மவிபாவங்களே ஜாதி விவஸ்தைக்குக் காரண

மாம். இயற்கையாய்ச்சில முக்கிய குணங்களும் அவைகளின் காரியமான கருமங்களும் இருக்கின்றன. அவைகளாற் சில பலன்கள் வந்தே தீரும். இந்த இரண்டு ஆதாரத்தின் பேரிற்ருன் நான்கு ஜாதி நிர்ணயம் ஏற்பட்டிருக்கிறது. தர்மமின்றித் தன் சுயேச்சையாய் ஏற்பட்டவையல்ல; மனுஷனுல் உண்டுபண்ணப்பட்டவைகளல்ல. குணகர்ம வேற்றுமைகளின் நிகழ்ச்சியால் சுபாவமாய் மேற்கண்ட வர்ணப்பிரிவினைகள் உண்டாயிருக்கின்றன. பரம ஆசாரியரின்வாயினுலேயே அதுதான் விதியென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறது.

இதே அபிப்பிராயத்தை இன்னும் அநேக இடங்களிற் காணலாம். சில ஆசாரியர்கள் ஒவ்வொரு வர்ணத்திற்கும் சில குணங்கள் அடையாளமாய் இருக்கின்றனவென்று சொல்லுகிருர்கள். ஒரு வர்ணத்திற் பிறந்தவன் அதற்குரிய குணங்கள் அமையப்பெருனுகில் அந்த ஜாதியல்லன் என்றும் சில ஆசாரியர்கள் சொல்லுகிருர்கள். இதற்குதாரணமாக மகாபாரதத்தில், பிராமணனுடைய அறிகுறி குணங்கள் இன்னவென்றும், சூத்திரனுடைய அறிகுறி குணங்கள் இன்னவென்றும் சொல்லி முடித்து ஓர் ஆசாரியர் சொல்லுகிறதாவது—பிராமணனுக்குரிய குணங்கள் அவனிடமின்றிச் சூத்திரனிடம் இருக்குமாகில், அந்தப்பிராமணன் பிராமணனுமல்லன் சூத்திரன் சூத்திரனுமல்லன். இதுமுன்

சொன்ன அபிப்பிராயத்தையே அனுசரித்திருக்கிறது. இயற்கையாகவே சிலகுண வேற்றுமைகள் ஆதாரமாயுள்ளன. அவைகளை அனுசரித்து இயங்குகின்ற ஜாதிப்பிரிவும் ஜாதிமுறையும், அவ்வேற்றுமைகளமையப்பெற்று நடைபெறுகின்றன.

கவனித்துப்பார்க்குமளவில், ஒவ்வொரு ஜீவனும் இந்த நான்கு வர்ணங்களின் மூலமாகவே விகாஸிக்க வேண்டியவனாயிருக்கிறான். இந்தநான்குவர்ணப்பிரிவுகள் இந்துமதத்திற்கு மாத்திரம் உரிமை பற்றியதன்று. இந்தியாதேசத்தில் மாத்திரம் நடைபெறுகிறதாக நாம் நினைக்கக்கூடாது. அவைகள் இயற்கையாய் உலகமெங்கும் நடைபெற்றுவருகின்றன. ஆனால் இந்தியாதேசத்தில் அவைகள் நடைபெறும் முறைமைக்கும், மேற்குத்தேசங்களில் அவைகள் நடைபெறும் முறைமைக்கும் வித்தியாசமுண்டு. அஃதாவது, இந்தியாவில் வர்ணப்பாகுபாடுகள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த விவஸ்தையை யனுசரித்தே பொது ஜன வொழுக்கம் வழங்குகின்றது. மற்றையதேசங்களில் ஜாதிப் பாகுபாடுகள் அவ்விதம் வியக்தமாய் அங்கீகரிக்கப்படவில்லை. ஜன சமூகத்தில் மேல் கீழ் என்ற முறைமை ஜாதி விவஸ்தையுடன் பற்றி நிகழ்வதாக இல்லை.

இந்த ஜாதிப் பாகுபாடுகள் வியக்தமாய் ஏற்பட்டு, ஜனவொழுக்கமும் அதை ஆதாரமாகக்கொண்டு நடைபெறுமா

கில், அப்போது ஜாதி முறை (caste) என்று சொல்லுகிறது. அவ்விதம் விவஸ்தை யேற்படாமல், அந்தந்த ஜாதியின் குண கர்ம பாவங்கள் மாத்திரம் கவனிக்கப்படுமாகில் அப்போது வகுப்பு (class) முறையென்று சொல்லுகிறது. ஆனால் அவ்வகுப்பு முறையிலும் பிரிவினைகள் வியக்தமாய்த்தோன்றும். பிராசீன நாகரீகங்களிலும், நவீன நாகரீகத்திலும், ஜன சமூகத்தில் இயற்கையாய் இவ்வித முக்கியமான வேற்றுமைகள் இருந்துகொண்டே யிருக்கின்றன.

ஆனால் இந்தப்பாகுபாடுகளை வியக்தமாய் அங்கீகரித்து ஜனங்கள் ஒழுகுவார்களாயின், அதனால் ஜன சமூகத்திற்கு க்ஷேமமுமுண்டு. ஜனவொழுக்கம் ஸ்திரமாகவும், ஒழுங்காகவும், மேன்மேலும் நன்மை பயக்கத்தக்கதாகவும், நடைபெறும். ஜனங்களுக்குள் போட்டியால் விளையுஞ் சண்டைசச்சரவுகள் நீங்கிச்சமாதானமும் அமைதியும் நேரிடும். பிரான்சு தேசத்திலே இருந்த ஆகஸ்டு கோண்டு என்ற ஞானியார் ஜனசமூகவிபாகத்தைப்பற்றி யெழுதியிருக்கிற தத்துவ சாஸ்திர முறையில் ஹிந்து ஞானிகளால் ஏற்படுத்தியிருக்கிற மேற்கண்ட ஜாதி விவஸ்தைகளை அங்கீகரித்து அவைகளைத் தம்முடைய தத்துவசாஸ்திரத்தில் அமைத்திருக்கின்ருர். இந்த விஷயமானது முக்கியமாய்க் கவனிக்கத் தக்கது. பிராமணஜாதி போன்று புரோகித வகுப்பு ஒன்றை மேற்படி பிராஞ்சு தேசத்து ஞானியார் தம்முடைய

ஜாதி முறை நிர்ணயத்தில் அமைத்துமிருக்கிருர். அவருடைய முறையைப்பற்றி விரிவாய்ப் பிரஸ்தாபிக்க எனக்கு இப்போது சாவகாசம் போதாது. ஆனல் அவருடைய முறையில் ஒரு விஷயமாத்திரம் கவனிக்கற்பாலது. அவர் வகுக்கும் விவஸ்தைகளெல்லாம் எவ்வேழாக வகுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அவர் அமைத்திருக்கிற புரோகித வகுப்பில், தலைமையானவர் தம்முடைய அடுத்த சந்ததியாக புரோகித கைங்கிரியத்தை நடத்துமாறு மற்றப்புரோகிதர்களிலொருவரை நியமனஞ் செய்யும்படி திட்டஞ் செய்திருக்கிருர். இதனல் பார்க்கலாம், அதிகாரங்கொண்டுசெலுத்துமுறை மேல்வகுப்பிலேயே யமைந்திருக்கிறதேயல்லாமல் கீழ்வகுப்பிலன்று. எல்லாத் தொழில்களையும் நேர்மையாயொழுகும்படி நடத்தவும், வியாபாரத்தைச் சரியாய்க்கொண்டு செலுத்தவும் மேற்படி பிராஞ்சு ஞானியார், இந்திய வைசிய ஜாதியின் ஸ்தானத்தில் திரவிய முதலாளிகள் என்ற ஒருவகுப்பையும் ஏற்படுத்தியிருக்கிருர். நம்முடைய சூத்திரஜாதியின் ஸ்தானத்தில் அவர் ஒரு வகுப்பையும் அமைத்திருக்கிருர். அவருடைய முறையில் க்ஷத்திரிய ஜாதி ஸ்தானத்தில் யாதொரு வகுப்பும் ஏற்படவில்லை. அதற்குக்காரணம் ஜனங்கள் சமாதானமாய் இருப்பார்களென்பது அவர் நோக்கம். சண்டையில்லாவிடில் க்ஷத்திரியர் அநாவசியமாம். ஆகவே மேற்குத்திசையாரில் ஒருவரின் சாஸ்திர நீதி மு

றைப் படிக்கும் ஜாதி விவஸ்தை இருந்தே தீரவேண்டுமென்று சித்தாந்தமாகிறது. அம்முறையில் அநுஷ்டிக்கவேண்டிய கடைப்பிடியானது நேர்மையும், அபிவிருத்தியும், இந்தியாவில் வழங்கும் ஜாதி முறையும், மேற்கண்ட பாவத்தை ஆதாரமாகவுடைத்து.

இந்த ஜாதி முறையில் கவனிக்கவேண்டிய விஷயம் இன்னும் ஒன்று உண்டு. அஃது ஆத்துமவிகாசத்திற்கு ஒரு வித்தியாகாரியாகவிருக்கிறது. புனர் ஜனனம் அதில் எப்போதும் ஏற்படுகிறது. குணானுசாரமாயும், கர்மானுசாரமாயும், ஒரு ஜாதிவிட்டு இன்னொருஜாதியில், ஜீவன் சரீரமெடுக்கிறான். உயர்ந்த ஜாதியில் பிறப்பன், அல்லது தாழ்ந்த ஜாதியில் பிறப்பன். ஒருஜன்மத்தின் கர்மபலன், மற்றொரு ஜன்மத்தின் காரணம். இவ்விதமாக ஜீவன் படிப்படியாய் விகாஸகதியில் நடைபெறுகிறான். ஜாதி பரிசுத்தமான நிலையில் இருக்குமாகில், மேற்கண்ட விஷயம் தெளிவாய்த் தோன்றும். ஜாதி உயர உயர ஜீவனுக்கு விதி நிஷேதங்கள் அதிகமாகும், உத்தரவாதங்களும் மேன்மேலும், அதிகப்படும். ஜாதி முறையை உள்ளபடி யோசித்துப்பார்த்தால் சுதந்தரங்கள் அல்லது சௌகரியங்கள் பற்றியே நிகழாது; கடமைகள் அல்லது உத்தரவாதங்கள் பற்றியே நிகழ்வதாகும்; உயர் ஜாதியான் என்றால், அதிக உத்தரவாதத்தை வகிக்கக் கடவனென்று பொருள்படும்.

ஆகவே சொற்ப வுத்தரவாதத்துடனும், சிரமமில்லாமலும் சௌகரியமாகவும், அதிக நிர்ப்பந்தங்களின்றியும், கீழான ஜாதியான் ஒருவனுக்குத்தான் காலக்ஷேபம் நடக்கும். மேலான ஜாதியானுக்கன்று. மனிதன் படிப்படியாய் ஜாதியிலுயரவே அதாவது ஜீவன் மேன்மேலும்முதிர்ச்சியடைந்து பலம் பெறவே, அவன் மேன்மேலும் தியாகஞ்செய்யவேண்டியவனாக ஆகிறான். உத்தரவாதம் அதிகமாய் ஏற்படுகிறதெல்லாம் ஜீவனின் அகம்பாவம் விகாசிக்கிறதற்கன்று. அது சங்கோசமாகி ஜீவன் பிறருக்குபகாரியாக விருக்கவேண்டியதற்காகத்தான். பிராமணனுக்கு கௌரவமும், மரியாதையும் இருந்துகொண்டு வருகிறதற்குக் காரணம், அவன் தலைமேல் தியாகமும், யக்ஞமும், வறுமையுங் கல்வியுஞ் சுமக்கவேண்டியவனாயிருக்கிறதினாலேதான். ஜனங்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டு, அந்நிலைமையின் கௌரவத்தைப் பாராட்டுவதற்காக இந்நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லை. ஆனால் ஜனங்களுக்கு ஈசுவர அனுக்கிரகம் இவன் வாயிலாக இறங்குமாறு இவன் பரிசுத்தமாய் இருக்கவேண்டுமென்பதுதான். தியாகத்தின் தத்துவத்தை அறிந்தவன்றான் பிராமண ஜாதியில் ஜனனமெடுக்க அருகன். சூத்திர ஜாதியிற் பிறந்து ஊழியஞ்செய்யப் பயின்று அதன்மேல் வைசியஜாதியிற் பிறந்து ஈகை தர்மங்களிற் பயின்றவனாகி, பின்பு க்ஷத்திரியனாகப் பிறந்து உயிரையே தியாகஞ் செய்யும்படி

யான தீரனாகிப் பின்னர்த் துறவிலும், மெய்யுணர்விலும், பற்றுள்ளவனாக ஆவானாகில், அப்போதுதான் பிராமண வகுப்பில் பிறக்க அருகனாவன். அப்போதுதான் ஜனங்களுக்கு ஆசாரியனாகவும், குருவாகவும், போதகனாகவும், அமைகிறான். இதுதான் ஜாதிமுறையில் ஆதி உயர்வான தர்மம். இவ்வண்ணந்தான் அது நடை பெற்றுவந்தது.

இது சம்பந்தமாக நீங்கள் அறிந்திருக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு; அஃதாவது ஒவ்வொரு ஜாதிக்கும் உரிய அறிகுறியான சூட்சுமசரீரம் வியக்தமாய் ஏற்பட்டுள்ளது. குணகர்ம விபாவங்களினாலே ஜாதி விவஸ்தைகள் உண்டாயிருக்கின்றனவென்று முன் பிரஸ்தாபித்திருக்கிறோம். அக்குணகர்ம விபாகங்கள் ஸ்தூலவிந்திரியங்களுக்குப் புலப்படாத, ஒவ்வொரு ஜாதியாரின் சூட்சுமசரீரங்களின்கண் அமைக்கப்பட்டுள்ளன. சூட்சுமசரீரம் ஒவ்வொரு ஜாதியாருக்கும் வெவ்வேறானமாதிரியையுடையது. அந்தந்த ஜாதியாருக்குரிய குணங்களுக்கு ஆசிரதமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நாலு வர்ணத்தாருக்கும், நான்கு மாதிரியான சூட்சும சரீரங்கள் உள்ளன. அந்தந்த ஜாதியாரின் குணங்கள் அவைகளுக்கேற்ற உபாதிகளை அவலம்பித்து விகாசிக்கின்றன.

ஜாதிமுறைக்கும் பாரம்பரியத்திற்கும் உள்ள சம்பந்த விஷயத்தைப்பற்றி விசாரிப்போம். அந்தந்தச் சூட்சும சரீரங்

களுக்குத்தக்கபடி, அவைகளுக்கு நேர்மையான ஸ்தூல சரீரங்களை அமைப்பித்து அவைகள் மூலமாய் குணாதிசயங்கள் வெளியாகிறதற்கு இந்தப் பாரம்பரியகதி சாதகமாகவும், அவசியமாகவும் இருக்கிறது. இப்பாரம்பரிய கதியினால் ஸ்தூல சூட்சும சரீரங்கள் நேர்மையின்றி ஒழுகுகிறதற்கு இடமில்லாமல் ஏற்படுகிறது. ஒரு ஜாதிவிட்டு மறுஜாதிக்கு மாறுதல், அதிக சிரமசாத்தியமென்று பேர்போன விசுவாமித்திரருடைய சரித்திரத்தினால் தெரியவரும். விசுவாமித்திரர் பிறப்பால் க்ஷத்திரியர். க்ஷத்திரிய சூட்சுமசரீரத்திற்கு நேர்மையான க்ஷத்திரிய பரம்பரையில் கிடைத்த ஸ்தூலசரீரம் அமைக்கப்பெற்றார். க்ஷத்திரியவர்ணத்தைவிட்டு பிராமண வர்ணத்திற்கு மாறுதல் லகுவான விஷயமன்று. அம்மாறுதல் சரியானபடி நிகழும் வண்ணம், எவ்வளவோ வருஷங்கள் ஒருவிதமான யோகாப்பியாசமுறையை அனுஷ்டித்து, அதன் காரியமாக மேலான சரீரம் ஏற்படவேண்டியதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அந்த யோகாப்பியாசம் ஒருநாளன்று, ஒரு மாசமன்று, ஒரு வருஷமன்று. மேலும் மேலான வர்ணத்தின் ஒழுக்கத்தில் அமைந்தால் மாத்திரம் போதாது. வெகுகாலம் ஏற்ற யோகாப்பியாசங்களை அனுஷ்டித்து அவைகளின் மூலமாய் தம்முடைய, அறிகுறியான சூட்சும சரீரம் மேல் வர்ணத்தின் சூட்சும சரீரமாக மாறி நிகழ்ந்தமையால், விசுவாமித்திரரைத் தேவர்கள் பிரஹ்மரிஷியெ

ன்று பட்டங்கொடுத்து அழைக்கும்படியான யோக்கியதை யை அவர் பெறுவாராயினர். பின்னேக்கிப் பார்ப்போமா கில் ஜாதிமுறையில் இந்த மூலாதாரமான அச்சு அடையாள ங்களும், பாரம்பரிய கதியின் நிகழ்ச்சியும், முக்கியமாய் அமைந்து நடைபெற்று வந்தன என்று நமக்குத்தெரியவ ரும். அவ்வளவு நேர்மையாய் இந்த ஜாதி விவஸ்தை ஏற்ப ட்டுள்ளது. அவனவன் ஜாதிக்குரிய தர்மத்தை விட்டு, அத ஞல் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுக்குள் ஐக்கியம் நீங்கி விரு த்தபாவம் உண்டுபண்ணினவன், ஜாதியினின்று பண்டைய காலத்தில் விலக்கப்படுவான். இவ்விதமாகத்தான் ஜாதியி ன் பரிசுத்தமும் நேர்மையும் ஆதரிக்கப்பட்டுவந்தன. இதன் மூலமாய்த்தான் பொருத்தமான ஸ்தூலசரீரங்கள் பாரம்பரி யமாய் உண்டாயின. பரிசுத்தமான பாரம்பரியத்தை, ஜா திப்பிரஷ்டம் செய்து வந்த முறையினுல், ஸம்ரக்ஷித்து வந் தார்கள். இவ்விதமாக ஜாதி ஒழுக்க முறைமை உண்டாகி, இந்தியாவில் ஸ்திரமாய் நடந்துவருகிறது என்று விசாரணை யினுல் அறிகிறேம்.

மேலும் இன்னும் ஒரு விஷயம் நாம் கவனிக்கத்தக் கது. யதார்த்தமான இந்துவின் நோக்கப்படிக்கும் (இப் போது இந்தியா தேசத்தில் தற்காலத்தியர்கள் எண்ணுமா திரியாகவல்லாமல்) ஜீவனுக்கு இந்த ஒரு ஜனனமே முக்கிய மானதன்று. சென்ற ஜன்மகர்ம விசேஷத்தினுலே ஒரு

ஜாதியில் சரீரம் எடுக்கும்படி நேர்ந்தால், அது முக்கியமான விஷயமாக அறிவுள்ளவன் நினைக்கமாட்டான். தர்மங்குன்றியிருக்கிற இக்காலத்தியர்கள் அதை வேறுவிதமாக எண்ணுகிறார்கள். யதார்த்தந் தெரிந்தவனே கர்மகதியாய்ச் சரீரம் வந்ததென்று அறிந்துகொண்டு, அது சொற்பகாலந்தான் நிற்குமென்று உணர்வுற்றவனாய் இனி மேலான ஜாதியிற் பிறக்கிறதற்கு உரியபடி, தானே நடைபெறவேண்டுமென்று திருப்தியாகவும் பொறுமையாகவும் கிரீடிப்பான். எந்த ஜாதியிற் பிறந்தாலும், அதனதன் தர்மங்களையும், உத்தரவாதங்களையும், விசுவாசத்துடன் ஒருவன் செய்துமுடித்தல் வேண்டும். இதற்கு ஓர் உதாரணம் சொல்லவேண்டுமென்றால், பகவத்கீதையை யுபதேசித்த ஸ்ரீ கிருஷ்ணபகவானே சான்றாம். தானெடுத்த காரியம் நிறைவேறும் வண்ணம் க்ஷத்திரிய சரீரத்தை வகித்தார். ஆனால் தன்னுளடங்கிய உயர்வான மகாத்மியத்தையும், தன்னுடைய தேவாம்சத்தையும், பாராட்டக் கனவிலும் நினைத்தாரில்லை. ஆனால் மனங் கூசாமல் பிரியத்துடன் பிராமணர்களைக்கண்டு வணங்கி அவர்களுடைய பாதப்பிரக்ஷாளநம் செய்து ஒழுகுவாராயினர். தானெடுத்த சரீரத்திற்கு உரியவும், தான் பிறந்த தாழ்ந்த நிலைமைக்குத்தக்கனவுமான தர்மத்தைப் பிறருக்கு உதாரணமாக ஒழுகிக்காட்டினர். முற்காலத்தில் ஒருவன் எவ்வருணத்திற் பிறந்தானாயினும், உயர்வு தாழ்வு

என்று பாவங்கொள்ளாமல், யாதோர் அதிருப்தியும் குரோதமுமின்றி, அவனவன் ஜாதிக்குள்ள தர்மத்தைச்செய்து வந்தான். தர்மகதிகளின் விதிகளை நன்றாயுணர்ந்தவர்களாயிருந்தார்கள். எல்லா ஜீவர்களும் அதனதன் முறையில் எல்லா ஜாதிகளிலும் சரீரமெடுக்கவேண்டுமென்றும், இன்று ஒரு ஜீவன் கீழான ஜாதியில் ஜனனமெடுத்திருந்தால் இனி, மேலான ஜாதியில் பிறக்கிறதற்கு மேலான தர்மத்தைத் தானமையும்படி முயலவேண்டுமென்றும், அக்காலத்தவர்கள் தெரிந்துகொண்டார்கள். யாதொரு விதியின்றியும், தற்செயலாய் ஜனனமேற்படுகிறதென்று, அவர்கள் நினைக்கவில்லை. உலகத்தில் சத்துவபாவமே விகாசிக்கிறதென்றும், அதன் காரியமே உலகமென்றும், அதைப்பற்றியே யொழுகவேண்டுமென்றும், அவர்கள் உறுதியாய் நம்பி அனுஷ்டித்து வந்தார்கள். நாளாவட்டத்தில் இம்முறையில், வேறுபாடுகள் ஏற்படத்தலைப்பட்டன. இச்சாதிமுறையானது ஆதியில் மஹரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்களால் நடத்தப்பட்டு வந்த காலத்தில், வெவ்வேறான குணாதிசயங்களமைந்த ஜீவாத்மாக்கள் அவ்வக் குணாதிசயங்களுக்குரிய ஜாதிகளின்கண் சரீரங்கள் எடுத்து நேர்மையாய் நடைபெற்று வந்தன. ஆனால், பின்னர்க் குணாதிசயங்கள் அரை குறையாய் விகாசமாகி, அமைந்திருந்த ஜீவாத்மாக்கள் இந்தியதேசத்திய ஜாதிகளில் சரீரமெடுத்தும் பிறக்கத்தலைப்பட்டன.

அப்படிப் பிறக்கவே அவர்களுடைய குணகர்ம விபாவங்களும், அவர்கள் அடைந்த ஜாதியின் சரீரங்களும், நேர்மையின்றி மாறாக இருக்கும்படி நேர்ந்தன. ஆகவே இந்திய சரீரங்களின்கண் அவைகளுக்குப் பொருந்தாத அபக்குவமான ஜீவான்மாக்கள் புகவே, அந்தந்த வர்ணத்திற்குரிய தர்மத்தைக்கொண்டு செலுத்த அசக்தர்களாக ஆனார்கள்.

இக்காரணம் பற்றிப்பின்பு, நான்கு பெரிய ஆதிவர்ணத்திற்குள்ளேயே, அவாந்தரபேதங்கள் அமைந்து பலவாயின. உட்பிரிவுகள் உண்டாயின. அந்தந்த ஜாதிக்குரிய குணநிச்சயங்களின்றிச் சரீரபாவத்தில் மாத்திரம் அந்த ஜாதிக்குரிய சரீரம் அமையப்பெற்ற மனிதர்கள், அந்த ஜாதியின் கௌரவம் மாத்திரம், தங்களுக்கு வேண்டுமென்று எண்ணிப் போலியான கட்டுப்பாடுகளை அமைத்துக் கொண்டு தனித்தனி வகுப்பினராய்த் திரிந்தார்கள். இயற்கையான யோக்கியதை யில்லாவிடினும், தாம் பிறந்த ஜாதிக்குரிய கௌரவம் மரியாதைகளை வற்புறுத்திப் பாராட்டுவாராயினர். அவ்விதமாய்க் கட்டுப்பாட்டுகளுக்குள் கட்டுப்பாடுகள், வரம்புக்குள் வரம்புகள், போலியாய்உண்டுபண்ணிக்கொண்டு வந்தார்கள். உண்மையில் அவைகளுக்கு ஆதாரமேயில்லை.

இவ்விதமாய் உண்டாயிருக்கின்ற ஜாதிகள் எண்ணிறந்தன. இக்காலத்தில் இச்சாதிப் பிரிவினைகளால் உண்டாகும் கேடுகளும் கொடுமைகளும் பல. ஆத்ம ஐக்கிய பாவ

த்தைக் கவனியாமலும், ஆத்மகுண விகாசங்களுக்கு வழி முறையாய் ஏற்பட்ட நான்கு வர்ணத்தின் தத்துவத்தை மறந்தும், அகம்பாவம் ஈரிஷை இவைகளால் தூண்டப்பட்டவர்களாய் மனிதர்கள் பொய்யான கட்டுப்பாட்டைக் கற்பித்துக் கொண்டு நூற்றுக்கணக்கான ஜாதிகளை உண்டு பண்ணியிருக்கின்றார்கள். ஆகவே துவேஷ பாவம் அபிவிர்த்தியாய் வந்தது. நான் இன்ன ஜாதி இன்ன உள்வகுப்பில் பிறந்தவன்என்று, தன்னை இறுமாப்புடனே உயர்த்திப்பேசவும், நியாயமாய்ச் சகோதரபாவம் பாராட்டக்கூடிய மற்றொருவனைத்தாழ்த்தவும், அவனைத் தன் ஜாதி உள்வகுப்பினின்று விலக்கவும், இவ்விதமாய்பிரதக்பாவமானது வரவரஅதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

இதனுல் ஜாதி அபிமானம் அதிகப்படவும், பிரதக்பாவம் விருத்தியாகவும், ஜாதி இறுமாப்பும் மேட்டிமையும். உண்டாகவும், பிறர்மனம்நோகும்படியாகநடைபெறவும், தம் போன்று உயர்வான ஜாதியில் இல்லாதவர்களை நோக்கி மரியாதையின்றியும் கொடுமையாய் ஒழுகவும், நேர்ந்திருக்கிறதை இக்காலம் இயல்பாகக் காணுகிறோம். பிறருக்கு உபகாரஞ் செய்யப் பிராமணுக பிறந்திருக்கிறோம், என்று கருதாமல் பிரதக்பாவங்கொண்டு, பிராமணுகப் பிறந்திருக்கிறோமென்று கௌரவம் பாராட்டி, அந்நிலைமைக்குரிய மரியாதைகள் சுதந்தரங்கள் தமக்குத்தான் உரியனவென்று வே

ண்டியும், தம் ஜாதிக்குப் புறம்பாய் இருக்கிறவர்களை நோக்கி, அவர்கள் மனம் நோக ஒழுகக்காண்கிறோம். இவ்வளவு மரியாதை சுதந்தரம் முதலியன பாராட்டுகின்றவர்களிடம், அஜ்ஜாதிக்குரிய தர்ம வொழுக்கங்களாவது இருக்கின்றனவா? அந்தோ! காணோம். வறுமையுங் கல்வியும் முற்காலத்தில் பிராமணர்களுக்கு அழகு. இக்காலத்திலோவெனில் செல்வமும்பேதைமையும், இக்காலத்திய பிராமணர்கள் அழகென்று கருவம் பாராட்டுகின்றார்கள். வேதங்களின் பயிற்சியில்லாமல், மேற்குத்திசையார் நாகரீகத்தில் பயின்றவர்களாய் கோர்டுகளில் (நியாயஸ்தலங்களில்) வக்கீல்களாக நடைபெறுகின்றார்கள். ஜாதிக்குரிய தர்மமும் ஒழுக்கமுமின்றேல், அதற்குரிய மரியாதையுமின்றாம். "ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்" என்பது முதுமொழி. இஃது இயற்கைதானே. ஒழுக்கத்தைவிட்ட பிராமணனுக்கு ஏனைய ஜாதியார் மரியாதைகள்செய்யமாட்டோமென்பது ஆச்சரியமல்லவே. யோக்கியதையில்சூத்திரனைவிட வேறுகவில்லாத பிராமணனுக்குச் சூத்திரன் ஏன் மரியாதைசெய்வான். பிராமண யோக்கியதையிருப்பின் பிரியமுடன் ஏற்படுமரியாதையை, யோக்கியதையில்லாத பிராமணனுக்குச்சூத்திரன்செய்யவேண்டுமென்று பலவந்தமாய்ப்பாராட்டினால், அவ்விஷயத்திற் சூத்திரன் ஆக்ஷேபிப்பது நியாயந்தானே. என்ன ஆச்சரியம். இருக்கவேண்டியபடி பிராமணன் இக்காலத்திலும் ஒழுகப்பெறுவானாயின், அஃதாவது, கல்விகேள்விகளால்நிறைந்தும்,

டம்பமின்றி அடக்கமுள்ளவனுயும், மெய்யுணர்வு பெற்ற வனுயும், மனத்தின்கண் மாசிலனுயும் இருக்கப்பெறின், மற்றைய ஜாதியர்கள் அவனுக்கு வணங்கி மரியாதைகாட்டி, தலைமைத் தன்மைகொடுத்து ஆசாரியனுகவும் வகிப்பார்கள். பொதுவாக ஜனங்கள் சிரேயஸ்தன்மையையறிந்து மரியாதை செய்ய எப்போதுஞ் சித்தமாகவே யிருக்கிருர்கள். ஜனங்கள் அநேகமாய்ப் பிறர்காட்டிய வழியிற்ருமும் நிகழச் சித்தமாயிருக்கிருர்கள். பிறர் வழிகாட்டியும், போதனையுஞ் செய்தல், மனத்துக்கு ரம்மியமாயிருக்கிறது. இது சகஜம். இச்சுபாவம் மானுடவியற்கையென்பதை நாம் எளிதிற்றெரிந்துகொள்ளலாம். நேர்மையான சத் புருஷர்கள் தலைமையாகவிருக்க ஹேதுவில்லாமற்போனுல், அயோக்கியர்கள் வேஷதாரிகளாய்ப்போலிசத்பாவத்தையமையப்பெற, ஜனங்கள் கூட்டங் கூட்டமாக அவர்களை வணங்கி அவர் வழிச் செல்லுகிருர்கள். அந்தோ! என்ன பரிதாபமான காட்சி. இந்திய ஜாதியர்களுக்குள் பிராமணர்களைப்பற்றிக் கோபம், துவேஷம், பொருமை, அவர்களைகௌரவபங்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணம், இவ்விதமாய்ப் பலவாருக அடிக்கடி ஜனங்கள் மனத்தில், உண்டாகிக்கொண்டு இருக்கின்றதைப் பார்க்கின்ருேம், இதற்குக்காரணம் யாதெனின் ஒழுக்கமின்றிக் கௌரவத்தை மாத்திரம் பிராமணர்கள் வற்புறுத்தவேண்டுகின்றமையால், மரியாதைசெய்யுந்தோறும், செய்கின்ற

வர்களின்மனத்தில் அன்புளழாமல் குரோதபாவம்உண்டாகி ன்றது.

இச்சாதிமுறையில் நல்லொழுக்கமும், தர்மமும், குறைவுபட வெளிவேஷமாத்திரம் இருந்துகொண்டு நடை பெற்றமையால் இத்தகைய சுபாவம் வரவரப்படரவே தேவர்கள் கூட இக்கொடுமையைச் சகிக்காமல் அநேக மகாத்துமாக்கள் கீழான வர்ணங்களிலும், அவைகளுக்குப் புறம்பான பஞ்சம ஜாதிகளிலும், சரீரமெடுக்கும்படியாகச்செய்திருக்கின்றார்கள். உதாரணமாகத் தென்னிந்தியாவில் மகா உயர்வும் மாட்சிமையும் பெற்ற ஞானிகள்* பலர் பஞ்சம ஜாதி சரீரத்தைப் பெறவும் நேர்ந்திருக்கின்றது.

ஜாதி விஷயத்தில் முன்முதலில் பிரஸ்தாபித்த முக்கிய அமுக்கிய அம்சங்களைப்பற்றிக் கவனிப்போம். நான்குவகுப்பான ஜாதி முக்கியம். அது சுபாவமாய் அமைகிறது. பலவாறான உட்பிரிவுகள் பலவாறாய் மனுஷ்யகிருதமாய் ஏற்பட்ட உட்பிரிவுகள்; அவைகள் அமுக்கியங்களே. அகம்பாவம், பிரதக்பாவம் இவைகளின்காரியமாய் அவைகள்உண்டாயின. நூற்றுக்கணக்காயுண்டாயிருக்கின்ற ஜாதி உட்பிரிவுகளை நாளடைவில் நீக்கிப்பொதுவாகவழங்கும் நான்குவர்ணத்தை மாத்திரம் கைக்கொள்வோமாக. இந்த விஷயத்தில் ஆஸ்திக புத்தியுள்ள ஹிந்துக்களுக்குள் கௌரவத்திற்கும்

* நாயன்மார்களிலும், ஆழ்வார்களிலும் பார்க்கலாம்.

மரியாதைக்கும் பாத்திரரான ஒரு பெரியவர், நிர்ச்சந்தேக மாகவும் தெளிவாகவும், தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றார். அவர் யாரென்றால் தென்னிந்தியாவில் ஸ்ரீசங்கராச்சாரியார் என்ற மகிமை தங்கிய நாமத்தை வகித்தவரும், இக்காலத்தில் ஒரு பெரிய மடாதிபதியும் தென் ராஜ்ஜியத்தில் ஆஸ்திக புத்தியுள்ள இந்துக்கள் யாவராலும் நன்குமதிக்கப்பெற்று வணங்கப்பெற்றவருமான ஆசாரியராம். அவர் சில வருஷங்களுக்கு முன்னர் தாம் இருக்கும் கௌரவமான ஸ்தானத்தின் உத்தரவாதத்தை யறிந்தவராய், அடியில்வருமாறு ஆக்ஞாபித்தார். அஃதாவது ஹிந்துக்கள் பலவாறான உட்பிரிவு ஜாதிகளின் வேற்றுமைகளை அனுஷ்டிக்காமல் விட்டுவிடல்தக்கது. ஒவ்வொரு வர்ணத்திற்குள்ளும் விவாகமும் பந்திபோஜனமும் நிகழத்தக்கன. எல்லாப்பிராமணர்களும் விவாக விஷயத்தில் ஒன்று சேரலாம். இவ்விதமே மற்றைய ஜாதியாரும் நடக்கற்பாலர். இவ்விதமாகிய அனுஷ்டானமே செய்யத்தக்கது என்று அவ்வுயர்வான ஸ்தானத்திலுள்ளவர் சொன்னதைத்தான் நான் திரும்பச்சொல்லுகின்றேன். இம்மாறுதல் ஹிந்துசமத்திற்கு முரணன்று. இக்காலத்திய கதிக்கு ஒத்திருக்கிறது. நான்குவருணாச்சிரம விவஸ்தையைப்பற்றி இக்காலத்தில் யாதொருபாவமும் துவேஷமுமில்லை. அதற்கு ஆஸ்பதமுமில்லை. நான்குவர்ணத்தினால் விவாதமும்இல்லை. ஆனால் அவாந்

தர அநேக கட்டுப்பாடானவுட்பிரிவுகள் த்வேஷபாவத்தை விருத்திசெய்வதற்குக் காரணமாம். நீ வேறு நான் வேறு, உன் ஜாதி வேறு, என் ஜாதி வேறு, என்று இந்தியர்கள் சிறு சிறு வகுப்பினர்களாய், நிகழ்கின்றமையால் தேசம் ஒருங்கு பட்டு தேசாபிமானபாவம் நிகழஇடமின்றி ஜனங்கள் முழுவதும் ஒருதேசத்தினராய் அமைய ஆஸ்பதமில்லாமலும் இருக்கின்றது. ஏனெனில் சிறுசிறுவகுப்புக்களாகத் தேசத்திலுள்ள ஜனங்கள் முழுமையும் பிரிக்கப்பட்டிருக்கின்றமையால் ஏகீபாவமும் பொதுநன்மையுங் கருதும்பொது நோக்கமும் சம்பவிக்க இடமில்லை.

நான்குவர்ண விவஸ்தையை மாத்திரம் வைத்துக்கொண்டு பலவாறான அவாந்தரஜாதி வகுப்புக்களைத் தவிர்த்து ஒழுக முடியாதா? இந்தியா தேசத்தில் அறிவுள்ளவர்கள் இதை ஒப்புக்கொள்ளார்களா? சிறுகச்சிறுக ஜாதி அவாந்தரபேதங்களை விலக்கமாட்டார்களா? ஸ்ரீ கிருஷ்ணபகவானால் கீதையிற் சொல்லியபடி நான்குவர்ணங்களும் அவராலேயே ஏற்பட்டிருக்கின்றனவே. அவைகளின் ஆதாரத்துக்கும், முறைக்கும், கேடுவிளைவிக்காமல் உட்பிரிவு ஜாதிகளை ஒடுக்கமுடியாதா? ஒரு வர்ணத்தினின்றும் மற்றொருவர்ணத்திற்கு ஒருவன் போகவியலாதா? என்ற கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுகின்றன; அதற்கு உத்தரமாக வேறொரு பிரசங்கம் நான்செய்கிறேன்.

அதாவது ஜாதிவிட்டு ஜாதிமாறுதலுக்கு யாவரும் அங்கீகாரஞ் செய்தற்குரிய தகுந்தஆதாரம் எங்கேயாவதுஇருக்கிறதா? என்னுடைய அந்தரங்கஅபிப்பிராயத்தில் இதுசாத்தியமானதல்லவென்று தோன்றுகிறது. ஒருமகாபுருஷன் இந்தியாவில் அவதாரமாகி இவ்விதஞ்செய்யலாமென்று ஆக்ஞாபித்தாலொழிய இதுசாத்தியமான விஷயமன்று. முன் பிரஸ்தாபித்த விசுவாமித்திரர்விஷயத்தில் ஜனங்கள் அவரை ஒப்புக்கொள்ளும்படியாக அவர் முயற்சிபண்ணிஞரல்லர். தேவர்களே தம்மைப் பிரமரிஷியென்று அங்கீகரிக்க வேண்டுமென்று முயற்சித்தார். அவ்வண்ணம் பிரமரிஷியென்று தேவர்கள்அங்கீகரித்ததின்மேல், அவருடையஜாதி மாறுதலை எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள். இஃதுஉயர்வான மெய்புணர்விஞற்ருன்சாத்தியப்படக்கூடியது. இவ்விதஞ்சங்கற்பிக்கிறதைவிட்டு, அவனவன் பெற்றிருக்கும் சரீரத்தைப் பூர்வகர்மகதியால்வந்ததென்று சந்தோஷமாக அங்கீகரித்து அச்சரீரத்தில் குற்றங்குறைகளைப் பேசுமல், அதைப்பற்றி ஒழுகுதலே விவேகமானஒழுக்கமென்று நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்மத்திஞற் கெட்டசரீரம் கிடைத்திருந்தால் அச்சரீரத்தைப்பற்றி நொந்துகொள்ளாமல், வருஞ்ஜன்மத்தில் உயர்வான ஜாதியின் சரீரம் பெறுவோமென்று எண்ணிநம்பி நடைபெறவேண்டும். தம்முடையஆத்மகுணநிசயங்களுக்குத் தக்கபடியிராமல், கீழானவர்

ணத்தில் ஜனனம் சம்பவித்திருக்குமேயாகில் அவ்விதம் நிகழ்வதற்குக்காரணம், பொதுஜன கைங்கரியார்த்தமாக ஜீவனானவன் மேல்வர்ணத்தை நாடாமல் தியாகஞ்செய்து கீழ்வர்ணத்தில் சரீரமெடுத்திருக்கிறனென்று நாம்அனுமானிக்கவேண்டும். அப்படிக்கீழானசரீரமெடுத்ததின்மேல் அக்கர்மசரீரத்தை அன்புடன்பற்றியொழுகாமல், குரோதபுத்தியை மனத்தில் ஏன் உண்டுபண்ணிக்கொள்ளுவான். நாம் மாயாசரீரத்தால் பந்தப்படாமல், மெய்யுணர்வைப் பெறுவோமாகில், இச்சரீரவேற்றுமைகளை அதிகமாகப் பாராட்டாமலும், தர்மகதியைப்பற்றி நோகாமலும், அது விட்டவழி நாம் நடைபெறுவோம்.

இன்னுமொரு முக்கியமானவிஷயம் அனுஷ்டானத்தில் கவனிக்கத்தக்கது. முற்காலத்தில் ஒவ்வொரு வர்ணத்திலும் அததன் தர்மமுறையில் வியக்தமான கட்டுப்பாடு இருந்தது. அக்கட்டுப்பாட்டை எப்படிநிலைநிறுத்தி வந்தார்களோவெனின், ஜாதியினின்று விலக்குதல், அதாவது, ஜாதிப்பிரஷ்டம் பண்ணுதல் என்றஉபாயத்தினுற்றான். ஜாதியின்சுத்தத்தைக்காப்பாற்றும்பொருட்டுஇதுநடந்துவந்தது. ஒருஜாதிக்குரிய குணங்கள் ஒருவனிடத்தில் இல்லாமற்போய்க்கீழான குணாதிசயங்களமையப் பெறுவானேயாகில், அக்குணங்கள் பற்றிய சரீரங்கள் அவன்சந்ததியார், அவ்வர்ணத்தில் இனிச் சம்பவியாதவண்ணம், அவனை அச்சாதியின் புறம் பாகவிலக்கு

வார்கள். இவ்வழக்கம் இன்னும் அநுஷ்டானத்தில் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்த உத்தரவாதத்தை யார் கொண்டு செலுத்தினார்கள் என்று விசாரித்தால் ஜாதியில் தலைமைபற்றி அறிவிலும், ஞானத்திலுஞ் சிறந்தவர்களும், ஜாதியாரால் நன்கு மதிக்கப்பட்டவர்களுமான, சத் புருஷர் களாம். இக்காலத்திலோ அப்படி அன்றாம். ஜாதி உட்பிரிவு சப்பந்தமானவிவகாரங்களில் தீர்மானிக்கிறவர்கள்வெகுவாய் அச்சாதியில் தகுந்தமனுஷர்களாகஇருக்கிறார்களில்லை. ஜாதி விவகாரங்கள் பெரும்பாலும் கபடமாகவும், சிலருடைய சொந்த லாபத்தைக்கருதியும், நடுநிலைமை பாராட்டாமலும், தீர்மானிக்கப்படுகின்றன. இது யாவரும் அறிந்த விஷயமே. சன்மார்க்கம், மெய்யுணர்வு, கல்வி இவையில்லாத சமயவேடமாத்திரம் பூண்டவர்கள் செல்வாக்குப் பெற்று விவகாரங்களைத் தீர்மானிக்கப் புகுகின்றார்கள். ஜாதியினின்று விலக்கவேண்டுமென்றவிஷயத்தில், அநர்களாயிருக்கின்றவர்கள் தலைமை பாராட்டித் தீர்மானிக்கின்றார்கள். யாவரை விலக்கப்படாதோ அவர்களையே ஜாதிப்பிரஷ்டம் பண்ணுகிறார்கள். இதை நீங்களும் அறிந்திருக்கிறீர்கள், நானுமறிவேன். அவனவன் ஜாதிவரம்புக்குள் ஜாதியின் வெளிவேஷமாத்திரம் போட்டுக்கொண்டு, என்ன அக்கிரமும் அநீதியுஞ் செய்தாலும் அவனைக்கேட்பாரில்லை. வர்ணதர்மமுறைகளை யதார்த்தத்தில் அலக்ஷியம்செய்து அச்சாதிக்குரிய வேஷ

மாத்திரம்பூண்டு நடைபெறுகிறவனை ஜாதியினின்று விலக்கு குகிறார்களில்லை. அவன் அந்நிய ஜாதியாரால் வைத்திருக்கும் சாப்பாட்டுக் கடைக்குப்போவான். பசுமாமிசம் சாப்பிடுவான். குடிப்பான். இவைகளெல்லாம் வெளிக்குக் காட்டாமல் இரகசியமாய்ச் செய்வானாகில் அவன் குற்றங் களைக்கவனியாமல், ஜாதியார்கள் கண்மூடிக்கொண்டுவாளா இருப்பார்கள். ஆனால் ஒருவன் இந்தியா தேசம் விட்டு அந்நியதேசம் போவானாகில், கல்விகேள்விகளால் அவன் எவ்வளவு சமர்த்தனாகிலும், அவன் ஒழுக்கம் எவ்வளவு பரிசுத்தமாய் இருப்பினும், அவன் ஜனங்களும் எவ்வளவு உபகாரிகளாயிருப்பினும், ஒரு சிறு ஜாதி உள்வகுப்பினன் ஆயினும், அந்நியதேசம்போன காரணத்தினால் அவனை அச்சாதியினின்று விலக்கிவிடுவார்கள். இவ்வநீதி நிகழுமேயாகில், ஜாதி முறை எப்படி நேர்மைபெற்று நடைபெறும்? நிலைத்துத்தான் நிற்குமோ? ஒரு வாலிபன் அந்நியதேசத்திற்குக் கப்பலேறிப்போவானாகில் அவனைச் சாதியிற் சேர்த்துக் கொள்வது சந்தேகமான விஷயம். சிலர் அதிர்ஷ்டவசத்தால் ஜாதியில் சேர்க்கப்பெற்று இருக்கிறார்கள். மற்றும் சிலரோ, அவ்வதிர்ஷ்டமின்றி விலக்கப்பெற்று இருக்கிறார்கள். இவர்கள் இன்னார் என எனக்குச் சொல்லப்பிரியமில்லை. அநேகர் கப்பலேறி அந்நியதேசம்போய்ப் பின்பு திரும்பிவந்து, அவர் நல்வரவை ஜாதியார் பிரியத்துடன் எதிர்

பார்த்து அழைக்கப்பெற்றுப் பின்பு அச்சாதியிற் சேர்ந்து நடைபெறுகின்றார்கள். எனக்குத்தெரியும். அவர்கள் பெயரும் சொல்லுவேன். இதற்கு முற்றுமாறாக நடக்கப்பெற்று ஜாதியினின்று விலக்கப்பட்டவர்களின் ஒரு நீண்ட ஜாப்தா நான் வாசிக்கக்கூடும். அவர்களின்மேற் சாற்றிய குற்றமெல்லாம், சமுத்திரந்தாண்டினார்களென்பது தான். அவர்கள் நீதி ஒழுக்கத்தைப்பற்றி எவ்வித ஆக்ஷேபணையும் வெளிவந்ததில்லை. ஒரு சமயத்தில் ஒரு வைசியன் கப்பலேறிப்போகிறான். அவன் திரும்பிவந்ததின்பேரில், ஜாதியில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். மற்றொருவன் போனால் அவனை ஜாதியினின்று விலக்குகிறார்கள். இப்பொழுதுகல்கத்தாவில் ஐரோப்பாவுக்குப்போய்க் கல்விப் பயிற்சிபெற்று இந்தியாவிற்குத் திரும்பிவந்தவன் தன் பிதா சிராத்தம் செய்தான். ஐந்நூறு பிராமணர்கள் யாதொரு ஆக்ஷேபணையில்லாமற் கூடிச்சிராத்தத்தை நிறைவேற்றினார்கள். அதே மாதிரியாகச் சமுத்திரயாத்திரை பண்ணிவந்த மற்றொருவனை ஜாதியிற் சேர்க்காமல் செய்து போட்டார்கள். தென்னிந்தியாவில் இத்தன்மையுள்ள இரண்டு பிராமணர்களை நானறிவேன். ஒருவரை ஜாதியிற்சேர்த்துக்கொண்டார்கள். மற்றொருவரை விலக்கிப் போட்டார்கள்.

நாவாய்யாத்திரைசெய்தல்வேறு, ஐரோப்பியர்ஒழுக்கத்தை யனுசரித்தல்வேறு, என்று பிரத்தியேகப்படுத்திப்பார்க்

கவேண்டும். ஐரோப்பாதேசத்தில் வழங்குகின்றதுராசாரத்தின் காரியமாக அமையும் ஒழுக்கத்தைப்பிரத்தியேகப்படுத்திக் கவனிக்கவேண்டும். இதைப்பற்றி பின் பேசுவோம்.

இந்தியவாலிபர்களுக்குள்நாவாய்யாத்திரைவிஷயமாகப் பிரஸ்தாபம் அடிக்கடி நடந்துகொண்டுவருகிறது. இதைப் பற்றிச்சற்று விசாரிப்போம். இந்தியாதேசத்து ராணுவத்தில்சேருகிற ஒவ்வொருபோர்வீரனும், எவ்வருணத்தாராயினும் கப்பலேறி அந்நியதேசத்தில் சேவகம் செய்யப் பிரமாணபூர்வகமாக ஒப்புக்கொள்ளுகிறுன். அத்தன்மையபோர் வீரர்கள் பிராமணர்களாயிருப்பினும் அவர்களை ஜாதிப்பிரஷ்டம் பண்ணுகிருர்களில்லை. ஆனுல் அதேபிராமணர்கள் ராணுவம் நீங்கி மற்றையுத்தியோக நிமித்தமாக நாவாய் யாத்திரைசெய்து திரும்புவார்களேயாகில் அவர்களை ஜாதியிலிருந்து விலக்குகிருர்கள். அந்தோ! என்னகொடுமை. இதற்கு யாதொரு நியாயமுமில்லையா? இது தருமமன்று. எவ்வளவுக் கெவ்வளவு ஒரு ஜாதியின் உள்வகுப்புக்குள் அறிவீனமும் மூடத்தன்மையும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஜாதிப்பிரஷ்டஞ்செய்கின்ற கொடுமையதிகரிக்கின்றது. கல்விகேள்வி பொருந்தாமல் எவ்வளவுக் கெவ்வளவிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஜாதிப்பிரஷ்ட விஷயத்தில் பிடிவாதம் அதிகரிக்கிறது.

பண்டையகாலத்தில் இந்தியர்கள் இந்தியாவரம்புக்குள்ளேயே சஞ்சரிக்கவேணுமென்ற நியமமுமில்லை. அவ்வித அநுஷ்டானமுமில்லை. ஆனுல் வெளியேறி அந்நியதேசங்களில் சுயேச்சையாய் யாத்திரைசெய்தார்கள். கப்பல் கவிழ்ந்ததைப்பற்றியும் அந்நியதேசயாத்திரையில் அநேக அற்புதங்கள் நேர்ந்திருக்கின்றவையைப் பற்றியும் உள்ள கதைகளை யறிந்திருக்கிருேம். அவைகளில் எல்லாத் திக்குக்களிலும்சுயேச்சையாய்யாத்திரைசெய்துவந்தார்களென்பது வெளியாகிறது. அப்படியாத்திரை செய்வதற்காகக் கனவிலுங் குற்றஞ்சாட்டுகிறவன் கிடையாது. இஃது அக்காலத்தில் மாத்திரமன்று. இக்காலத்திலுஞ்சில உட்பிரிவுஜாதிகளில் இப்படியேயிருக்கின்றது. வியாபாரநிமித்தமாய்ப் பாரசீக தேசத்தின்வழியாய் இந்திய வைசியர்கள் யாத்திரைபண்ணுகின்ருர்கள். தென்னிந்தியர்களில் பலஜாதியரான அநேகர்கள் பர்மாவுக்குப்போகிறதும் வருகிறதுமாகவிருக்கிருர்கள். அங்குச் சாதாரண இந்து ஆசாரணை அநுஷ்டிக்கிறவர்களும், கலியாணமுதலிய சுபங்களை இந்து ஆசாரணைப்படி நடத்துகின்றவர்களுமான இந்துக்கள் ஒருஜாதியாக அமையப்பெறுகின்ருர்கள். முற்காலத்திலும் இக்காலத்திலும் தூரதேசத்தில் யாத்திரைசெய்கின்ற காரணம்பற்றி ஒருவன் மற்றவனை ஹிம்ஸிக்கிறதில்லை.

இப்போது பிரஸ்தாபித்த விஷயந்தவிர இதுவிஷயமாக நீங்கள் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. இக்கால

த்திலோவென்றால் ஒருஜாதியார் மற்றைய ஜாதியாரோடு சம்பந்தித்து ஒருவர் மற்றவர்களைப்பற்றிய குணாதிசயங்களை அறிய முயல்கின்றார்கள். முந்திய வேற்றுமைப்பாடுகள் நீங்கி ஒருவர் மற்றவருடைய குணபாவங்களைக் கிரகிக்கிறார்கள். முன்போன்று இல்லாமல் பலஜாதியார்கள் சமாதானமாய் ஒருவரோடொருவர் இருக்க முயல்வாராகிறார்கள். சண்டைகள் உண்டாகின்றதற்குக்காரணம் ஒருவர் மற்றொருவரைத்தெரிந்து கொள்ளாமையேயாம். ஜாதியார்களுக்குள் பிரதக்பாவமிருந்தால் ஒருவர் மற்றவரிடம்அவநம்பிக்கைகொள்ளுவார். ஒருவர் மற்றொருவரைத்துவேஷிப்பார். கடைசியில் இந்தச்சந்தேகம் இந்தத்துவேஷம் இந்த அவநம்பிக்கையெல்லாம் போராக முடியும். ஒரு ஜாதியார் மற்றஜாதியாரை நன்றாய்த் தெரிந்துகொண்டால் அன்பு உதயமாகிப் பின்னர் ஒருவரையொருவர் நம்புவாராவர். உலகத்தின்கண்இருக்கிற ஜாதியாரெல்லாம் ஒருவரோடொருவர் அணுகிச் சம்பந்திக்க ஆரம்பிக்கின்றார்கள். இத்தருணத்தில் இந்தியர்கள்மாத்திரம் மற்றை ஜாதியாருடன் சேராமலும் அத்தகைய சம்ஸர்க்கத்தால் நிகழும் நன்மைகளைப் பெறாமலும் இந்தியா தேசத்தின் வரம்புக்குள்ளேயே அடைபட்டவராய் ஒழுகி நடப்பானேன்? இந்த அந்நியதேச நாவாய் யாத்திரை விஷயமானது இக்காலத்தில் வெகு முக்கியமாய் ஏற்படுகிறது. அதை நீங்கள் அவ்வளவாகத் தெரிந்துகொண்

டிருக்கமாட்டார்கள். மேலும் யாத்திரையினால் மனம் விரிந்து விசாலிக்கிறது. சீலமும் மேன்மேலும் உயர்வையும் விகாசத்தையும் பெறுகின்றது. அந்நியதேச யாத்திரையில்லாவிடில் உலகத்தின்கண் முன்னேக்காய் வருகின்ற பெரியவிஷயங்கள் எம்மாதிரியாய் நிகழ்கின்றனவென்று நீங்களறியக்கூடும். நீங்கள் சலித்தாலும், சலியாவிடினும், உலகம் சலித்துக்கொண்டேயிருக்கின்றது. நீங்கள் வளர்ந்தாலும், வளராமல் நின்றாலும், அஃதாவது, விருத்தியானாலும் விருத்தியாகாவிட்டாலும், மற்றைய ஜாதியார்கள் மேன்மேலும் அபிவிர்த்தியாய்க்கொண்டே வருகின்றார்கள். அவர்களை நீங்கள் அலக்ஷியஞ்செய்தாலென்ன? அவர்களுடைய விருத்திக்குக்குறைவொன்றுமில்லை. அவர்கள் இந்தியாதேசத்தின் உயர்வான மனோபாவத்தை ஸ்வீகரிக்கின்றார்கள். இந்தியாதேசத்தின் உயர்ந்த தத்துவத்தைத் தன் வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். இந்திய சமயத்தின் ஞான பாகத்தைக்கைக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றார்கள். அவர்கள் வேண்டுவனவெல்லாம் உங்களிடமிருந்து பெறுகின்றார்கள். நீங்களோ குடிசிலில் அடைபட்டவர்களாய் அவர்களிடமிருந்து யாதொரு பிரதிப்பிரயோசனமும் அடைகிறீர்களில்லை. வெளிவிகாசமாயிருக்கின்ற பிரபஞ்சத்தைப்பற்றி உங்களுடைய மனோபாவங்கள் தப்பானவைகளாகவும், குற்றமுடையனவாகவுமிருக்கின்றன. கல்வியறிவுள்ள இந்துக்க

ளுக்குள் புறச்சாதியாரைப்பற்றித் தப்பான அபிப்பிராயங்களும், அதனால் உண்மையில்லாத வீணை சந்தேகங்களும், அவநம்பிக்கைகளும், நடைபெறுகின்றனவென்று அடிக்கடி கவனித்திருக்கிறேன். ஒருவரையொருவர் அறிந்து ஒருவரையொருவர் விசுவாசித்து அன்புபாராட்டினலன்றிச் சகோதரபாவம் நிகழாது. உலகமுழுவதுமேற்படும் சகோதரபாவக் கொள்கையால் இன்று இந்தியாதேசமாத்திரம் விலகிச் சுயநய விருப்பத்துடன் பிரதக் பாவத்தைப் பற்றினதாய் வெகுகாலம் நடைபெறக்கூடுமோ என்று சங்கிக்கிறேன்.

அப்படி நேராது. நேரவும் இயலாது. இந்த அந்நிய தேசத்து யாத்திரை விஷயத்தில் அறிவுள்ளவர்கள் ஒரு மாறுதலைச்செய்தே தீரவேண்டும். அந்நிய தேசத்தின் யாத்திரையின் காரணம் பற்றி ஜாதிப்பிரஷ்டஞ் செய்யுங் கொடுமையை முற்றிலும் உதறித்தள்ளவேண்டும்.

அந்நியதேசத்து நாவாய்யாத்திரை விஷயமாக விரோதமான அபிப்பிராயமிருப்பதற்குப் போதுமான காரணமிருக்கிறது. அந்நியதேசத்திற்குப் போகின்ற வாலிபர்கள் ஒழுக்கங்கெட்டுத் துராசாரத்துடன் திரும்புகிறார்கள். இது வாஸ்தவந்தான். ஆனால்அது யாத்திரையினால்வந்த கேடன்று. எவ்விதமான சாவதானத்துடன் போய்த்திரும்பவேணு

மோ அவ்விதஞ் செய்யாததினுல்உண்டானகுறை. தூரதேசத்திற்குக் கப்பலேறி வாலிபர்கள் போவார்களானுல் அவர்களைக் கவனித்துப்பார்க்கப் பெரியவர்களில்லாமையாலும், அவர்களைக்கண்டிக்க அயலாரில்லாமையாலும், நேர்மையான வழியில் நடத்த அன்புள்ள பந்துக்களில்லாமையாலும், குலதர்மக் கோட்பாடுவிட்டு அந்நியசனக் கூட்டங்களில் சம்ஸர்க்கம் நேரிடுகின்றமையால், புதுவழக்கங்கள், புதுஅநுஷ்டானங்கள், இவைகளைப்பார்த்து அவைகளுக்குஇசைய நடக்கத் தெரிந்துகொள்ளாமல் சன்மார்க்கங்கெட்டுத் துன்மார்க்கராகி ஐரோப்பிய நாகரீகத்தின் தீயபாவங்களைப் பற்றினவராய் நடைபெறுகின்றுர்கள். இஃது ஆச்சரியத்திற்கு இடமன்று. வாலிபர்கள் லண்டன் பட்டணத்திற்கு வருகின்றவர்கள் கொடுமையானதீய சகவாசங்களுள்ள இடத்திற்குப் போகின்றுர்கள். கீழ்க்கடையானஜனங்கள் வைத்திருக்கின்ற சாப்பாட்டுக்கடைக்குப் போகின்றுர்கள். அற்பவியாபாரஞ் செய்கின்ற வீட்டிற்போய்த் தங்குகின்றுர்கள். இவ்விடங்களிற் றெரிந்துகொள்ளும் ஒழுக்கமும், இந்த இடங்களிற் பார்க்கும் நடவடிக்கைகளும், ஆங்கிலருடைய நடவடிக்கைகள் என்று எண்ணுகிறுர்கள். அறிவுள்ளவர்களுடன் பயிலுகிறதில்லை. உயர்ந்த அந்தஸ்துள்ள ஆங்கிலேய ஸ்திரீ புமான்களுடன் பழக்கமேற்படுகிறதில்லை. ஒன்றுந் தெரியாமல் சரியான வழியில் தங்களை நடத்துவதற்குச் சாதகமானவர்

கள் இல்லாமல் லண்டன் பட்டணத்திற்குப் பாலியர்கள் போகிறார்கள். அவர்களின் மேற்குற்றஞ்சாட்டுவது நியாயமில்லை. அவர்களுடைய கதி பரிதபிக்கக் கூடியதாயிருக்கிறது. ஐரோப்பிய தீயவிஷயங்களைக் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். ஐரோப்பிய சதாசாரங்களையும், நல்லமுறைகளையும் கைப்பற்றிக் கொள்ளுகிறார்களில்லை. இந்தியாதேசத்திற்குத் திரும்பிவருங் காலத்தில் தீய ஒழுக்கங்களையும் துராசாரங்களையும் அடைந்தவர்களாய் வருகின்றார்கள். இக்காலத்தில் நடைபெறுகின்ற யாத்திரை விஷயத்திற் சீர்திருத்தஞ் செய்யத்தக்கது. ஐரோப்பாக் கண்டத்தில் வசிக்கிறதினால் ஏதாவது பயன்படவேண்டுமானால் இப்போது போகிறபடி போகக்கூடாது. சீலம் அபிவிர்த்தியாகிறதற்கும், சமயவொழுக்கம் நேர்மையாயிருக்கிறதற்கும், துர்வாசனைகள் அணுகாமலிருப்பதற்கும், கவனமான ஏற்பாடுகள் அமைக்கப் பெற்றுத் தூரதேசத்திற்கு வாலிபர்களை யனுப்பவேண்டும். அப்படிச்செய்தால் முன்போன்று இந்துக்களுடைய நற்குணங்களை யெல்லாமிழந்து ஐரோப்பியருடைய துர்க்குணங்களை யெல்லாம் பற்றி யொழுகாமல் அவைகளுக்கு முற்று மாறாய் இந்துக்களுடைய நற்குணங்களை விடாமல் ஐரோப்பியருடைய நல்லமாதிரிகளை யமையப்பெற்று திரும்புவார்கள். இப்படி நிகழுமாயின் தூரதேச யாத்திரையைப்பற்றி யிருக்கின்ற தப்பான அபிப்பிராயம் நீங்கும்.

அவ் யாத்திரையினுல் முன்னேற்பட்ட குற்றங்களும், குறைகளும், நீங்கிக் குணபாவங்கள் சம்பவிக்கும்.

நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயம் இன்னுமொன்றுண்டு. அதை ஒரே சீராக நடத்துவீர்களாகில் நன்மை பயக்கும். அதாவது நல்லொழுக்கம் தீயொழுக்கம், நற்குணம், துர்க்குணம் இவைகளை அறநெறி முறையில் அறிந்து, தீயவை கண்டித்தும், நல்லவை ஸ்லாகித்தும் அந்தந்த ஜாதிமுறையில் நடை பெறுவீர்களாகில் க்ஷேமகரமாயிருக்கும். "நமரெனக்கோல் கோடாது, பிறரெனக்குணங்கொல்லாது" நடப்பீராக. விபசாரத்திற்காக ஒருவனைச் சாதியிலிருந்து விலக்கவேண்டும். வர்ணதர்மத்தை உதாசீனப்படுத்தித் துர்மார்க்கத்தில் நடக்கிறவனைச் சாதிப்பிரஷ்டம் பண்ணவேண்டும். அப்படிச் செய்வீர்களாகில், ஜாதியினின்று விலக்குதல் என்ற முறையினுற் பிரயோசனம் நிகழ்வதாகும். இக்காலத்தில் நடக்கிறபடி அக்கிரமஸ்தர்களுடைய கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு கொடுமையான கருவியாக ஜாதிப்பிரஷ்டமென்கிற முறையானது வழங்குகின்றது. அதனுல் ஜாதி பரிசுத்தமாய் விளங்குகிறதற்குச் சாதகமேற்படவில்லை. நான் வசனித்தமாதிரியாக இதிற் சீர்திருத்தம் நேருமேயாகில் அனுஷ்டான முறைகளை யேற்படுத்திக்கொள்ளவேண்டும். கல்வி கேள்வி நிறைவும் சரியான அபிமானமுள்ளவர்களான இந்துக்கள் மேற்கண்ட விஷயத்தில் அனு

ஷ்டான கிரமங்களைப்பற்றி யோசனைசெய்து விவஸ்தைகள் ஏற்படுத்தவேண்டும். அவ்வனுஷ்டானங்களின் நெறிபற்றித் தாங்களும் நடக்கவேண்டும். அவ்விஷயத்தில் என்ன இடையூறு நேர்ந்தாலும் அதைக் கவனியாமல் உறுதிப்பாடுஉடையவர்களாய் இருக்கவேண்டும். தூரதேசநாவாய் யாத்திரை செய்வதற்காக ஜாதிப்பிரஷ்டம் செய்யுமுறையைத் தவிர்க்க முயலல் வேண்டும். அவ்விதம் ஜாதிப்பிரஷ்டம் யாரேனுஞ் செய்வார்களேயாகில் அதை அலட்சியஞ்செய்து அது செய்யாமலிருந்தாற்போலத் தாங்கள் ஒழுகக்கடவர். இவ்வித சீர்திருத்தங்களை நடத்துவதில் முன்னிற்பவர்கள் பிறர் நன்குமதிக்குமாறும் தங்களுக்குச் செல்வாக்குப் பயக்குமாறும் நடந்து அதனால் ஜாதியொழுக்கமுறையில் தீயவைகளை நல்லவை நிலைநிறுத்துவதற்கும் சாதகமாவதற்கும் தங்களுடைய ஒழுக்கத்தில் யாதொரு குற்றங்குறையில்லாமல் சுத்தர்களாகவும் அனுஷ்டானிகளாகவுமிருக்கவேண்டும். இப்போது அதிகரித்திருக்கின்ற பேஷஜமும் வேஷமும் முற்றிலுந் தொலையவேண்டும். மனத்தின்கண் அனுதாபமின்றி நடத்தும் போலிப் பிராயச்சித்தங்களைத் தவிர்க்கவேண்டும். தூரதேச யாத்திரைக்காக ஒருவனை ஜாதிப்பிரஷ்டனாக மதிக்கக்கூடாது. இக்காலத்தில் அடிக்கடி நடைபெறுகின்றபடி ஒவ்வொரு தடவையும் போலிப்பிராயச்சித்தஞ் செய்கின்றவனே ஜாதிப்பிரஷ்டனவா

ன். நாவாய்யாத்திரை செய்தாலென்ன, புரோகிதருக்கு ஐந்துரூபாய் கொடுத்துச் சேருவேனென்று ஆரவாரத்துடன் பிரஸ்தாபிக்கிறவனைக் கேட்டிருக்கிறேன். இவ்விதமான பிராயச்சித்தங்கள் துர்க்கிருத்தியங்களாம். இதிற் சம்பந்தித்திருக்கிற எல்லோரும் தீயவரே.

ஜாதியைப்பற்றி நான்ஆரம்பித்த விஷயமுடிவுபெறுவதற்கு முன் ஓர் அபிப்பிராயந்தெரிவிக்க விரும்புகிறேன். அஃதாவது, இந்தியாதேசத்தில் நான்குவர்ணத்திற்கும்புறம்பாக மற்றையஜாதியார்களால் அலக்ஷியஞ்செய்யப்படும் ஆயிரக்கணக்கான ஆண் பெண்கள் இருக்கின்ருர்கள். நான் இப்போது நின்றுபேசுகின்ற இந்தவடதேசத்தில் தென்னிந்தியாதேசத்தைப்போல இவ்விஷயம் அவ்வளவு கொடுமையானதாகவில்லை. ஆனுல் தென்தேசத்திலிருக்கின்றவர்களைப்பற்றித் தனிமையாயியங்கும் சமாசாரங்களை வடதேசத்தாரும், வடதேசத்தைப்பற்றித் தனிமையாயியங்குஞ் சமாசாரங்களைத்தென்தேசத்தாரும் கவனித்து ஒருவருக்கொருவர்அவைகளிற் பொதுவாய்ச் சிரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும். யாதொரு கதியுமில்லாதகூட்டங்கூட்டமான தென்தேசத்திலிருக்கின்ற பறையர்கள் விஷயம் கவனிப்போமாகில் அவர்களின் நிலைமை இந்துமதத்திற்குமானஹாநியைப்பயக்கத்தக்கதாகவும், அபாயகரமாகவும் இருக்கிறது. கிறிஸ்துபாதிரி

மார்கள் இவைகளைச் சமயநெறி முறைபற்றியன்றி ஜாதியில் உயர்வுதாழ்வு என்ற விஷயத்தை அறிவுறுத்திச் சமயக் கொள்கைமாறினால் ஜாதி உயர்வாகுமென்ற பாவத்தைக்கற்பித்து இச்சாதியார்களில் அநேகர்களை கிறிஸ்து மார்க்கத்திற் சேர்த்திருக்கிறார்கள். கூடியமட்டும் நல்லசீலமுள்ளவனாக ஒரு பறையனிருந்தாலும் அவனை இந்துக்கள் வீட்டுக்குட் பிரவேசிக்கவொட்டார்கள். அவ்வளவு அற்பத்தன்மையுள்ளதாக அவர்களுடைய புத்தியானது இருக்கிறது. அதே பறையன் கிறிஸ்து அல்லது மகமதியமதஸ்தனாக ஆவானேயாகில் அவன்தாராளமாய் இந்துக்கள் வீட்டிலும் நுழையலாம். அந்தோ இஃதென்ன அறிவீனம். இதனால் விளையும்பயனென்னவென்று நினைக்கின்றீர்கள். இந்துமதத்தினுடைய வேர் அறுபட்டுப்போவதற்கு ஆஸ்பதமாயிருக்கிறது. இக்காரணத்தினாலே மகமதியர்களும் கிறிஸ்தவர்களும் வரவரப் பெருகிக்கொண்டுவருகிறார்கள். தென்தேசத்தில் ஆயிரக்கணக்காய்க் கிறிஸ்தவர்களாகிக்கொண்டு வருகிறார்களே. இவர்களுடைய ஜாதிவிவஸ்தையை விசாரிப்போமேயாகில், அவர்கள் மிகுதியாய்ப்பறையர்களாய் முடியும். கிறிஸ்துவர்களானவுடனே ஜாதியிலும் உயர்வேற்படுகிறது. தாங்கள் முன்னிருந்த ஜாதியில் உயர்வுபெறுகிறதற்கு யாதொரு வழியுமில்லாததினாலே அந்நியமதத்திற்சேர்ந்து ஜாதி உயர்வு பெறுகிறதற்காகக் கிறிஸ்து மார்க்கத்திற் சேர்கிறதில் ஆச்சரியமெ

ன்னவிருக்கிறது. இந்துமதத்தின் அஸ்திவாரத்திற்கு இவ்விதமாகக் கொஞ்சங் கொஞ்சமாகச் சுரங்கமெடுபடுதல் புத்திசாலித்தனமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா? பறையர்கள் மேன்மேலும் இந்துமதத்தை விட்டுவிலகுதல் அதிகப்பட அதிகப்பட இந்துமதம் தௌர்ப்பல்லியத்தையடைந்துகொண்டு வருமல்லவா? உங்களில் அறிவுள்ளவர்கள் சிலரேனும் இந்தக்கீழான ஜாதியாருக்குக்கல்விபயிற்றுவித்தும், சமயமுறை நீதிமுறைஉபதேசிப்பித்தும்வந்தால் அதனாற் சீலவிர்த்தியாகிறவர்கள் மரியாதையுடன்பாராட்டிநடைபெற மாட்டார்களா? பறையர்களை இந்துமதத்தின் கண்ணேயேநிலையாயிருக்கும் வண்ணம் மேற்கூறிய சாதகங்களைச் செய்வித்து ஒழுகுவார்களேயாகில் அஃது அறிவுள்ளமுறையா? அல்லது இந்துமதத்திற்குப் புறம்பாக அவர்களையோட்டி இந்துமதத்தின்மேல் அவர்கள்மனத்தில் துவேஷங்களை அபிவிர்த்திசெய்வித்து இந்துமதத்திற்கேஅபாயத்தையுங்கெடுதியையுந்தேடிக்கொள்ளுவீர்களேயாகில் அஃது அறிவுள்ள முறையா? மேற்கண்டவைகள் தாங்கள் ஆராய்ச்சிசெய்து தீர்மானிக்க வேண்டியவிஷயங்கள். இவைகள்இந்தியாதேசத்திலிப்போது அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டுவருகின்றன. இந்த விஷயங்கள் பிரஸ்தாபத்தினால் இரண்டு கட்சிகள் ஏற்பட்டுவருகின்றன. இந்தியாதேசத்தில் ஜாதிமுறை விஷயத்தில் எவ்விதமான மாறுதலும் சீர்திருத்தமும் செய்யப்படாதென்

பது ஒரு திறத்தார் பக்ஷம். சாதியை முற்றுந்தொலைத்து விடவேண்டுமென்பது மற்றொரு திறத்தார்பக்ஷம். இவ்விதம் இந்துக்கள் இரண்டுவிதமாகப் பிரிந்திருத்தலானது தேசத்தின் க்ஷேமத்திற்கன்று. ஒருவகுப்பார் நின்ற நிலையில நிற்போம் அசையமாட்டோமென்பார். மற்றொருவகுப்பார்மற்றைய ஜாதியார்களினின்று வேறுபடுத்தும் இந்தியதேசத்திற்கு அறிகுறியாயிருக்கும் உயர்வான பாவங்களை விட்டொழிவோமென்பார். என் போலியர்கள் சொல்லுகிறதென்னவென்றால், இந்தியாவின் உயர்வான பாவங்களைப் பற்றுமின், அவைகளைப்பற்றிய ஆசாரக்குறைகளைக்களைமின்; சநாதனதர்ம முறையிலொழுகுமின், பரிகாசமாக வழங்கும் போலியாசாரங்களைத் தவிர்மின்? நான் சொல்லுஞ் சீர்திருத்தங்கள் தினந்தினம் நிகழ்கின்ற உலகவழக்கம், குலாசாரம், ஜாதிமுறை இவைகளுடன் சம்பந்தித்திருப்பதால் அநுஷ்டிப்பது சிரமமாயிருக்கலாமென்று நானறிவேன். ஆனால் இவைகள் இன்றியமையாதவைகள். இவைகளை யநுசரித்தொழுகின், க்ஷேமம் பிறக்கும். அன்றேல் நாசம்நேரிடும். இது திண்ணம். இவைகளின் முக்கியத்தை உத்தேசித்து வெளிப்படையாய் உங்களிடத்தில் வசனித்தேன். இக்காரணம் பற்றியே ஜாதி சம்பந்தமான நியமங்களையும், கொடுமைகளையும், விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபித்தேன். இந்தியாதேசத்திலிருக்கின்ற யாவரும் என்னுடைய மனோதர்மத்தையறிவீர்கள். இத்தேச

த்தில் வழங்குகின்ற சநாதன தர்மத்தைப்பற்றி நான் சிலா கித்துப் பேசியிருக்கின்றேன். நான்குவர்ணத்தின்உயர்வைப் பற்றிச் சொல்லியிருக்கின்றேன். இந்தியாதேசத்திற்கு விமோசனமேற்பட்டு க்ஷேமம் பிறக்கவேண்டுமாளுல் அந்தச் சநாதனதர்மமுறையின்றியமையாதது.உலகத்திலேற்பட்டிருக்கும் ஜாதிமுறை பலவகைகளில், இந்தியதேசத்திலமைந்திருக்கும் ஜாதிமுறையே நேர்மைபற்றியது. அதுவே ஜீவாத்மா மேன்மேலும் விகாசம்பெறுகிறதற்கேற்ற மேன்மையான முறையாகவிருக்கிறது. என் அபிப்பிராயமிவ் வண்ணமிருக்கின்றமையால் இம்முறையானது இந்தியாவில் நிலைத்திருக்கவேண்டுமென்று அவாவுள்ளவளாயிருக்கின்றேன். ஆளுல் யாதொரு முயற்சியும் செய்யாமலிருப்பீர்களேயாகில் இந்தியதேசத்தின் பிரகிருத கெடுதிகளை யோசிக்குமளவில், அதிககாலம் இம்முறையானது நீடித்து நிலைபெறுமென்று தோன்றவில்லை. இப்போது கேடுற்றிருக்கின்ற நிலைமையிற் பலவாருகப் பலர்கள் இந்தச் சநாதனமுறையானது கீழே விழ யத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்ருர்கள். தர்மத்தைப்பற்றித் தோஷாரோபணம் பண்ணிக்கொண்டிருக்கின்றமையால் உங்களில் ஆங்கிலப் பயிற்சியுள்ளவர்களுக்கு இந்தச் சநாதன தர்மமுறையில் பிடித்தமில்லை. இதைப் பற்றி அவர்களுக்கு மேன்மேலும் துவேஷமதிகரித்துக்கொண்டே வருகின்றது. சமயத்துக்கும் புத்திக்கு மொவ்

வாத சில துராசாரங்களும் தீயகாரியங்களும் இச்சநாதன தர்மமுறையில் களைப்புல்போலுண்டாகி நடைபெறுகின்றமையால், அறிவுள்ளவர்களுங்கூட மேன்மேலும் இச்சமய முறைகளைப்பற்றிப் பொதுவாய்க் குரோதபாவம் பூண்டு ஒழுகுவாராகின்றார்கள். சநாதன தர்மமுறையுயர்வானதாக விருக்கின்றமையால், அதைக்காப்பாற்ற முயலவேண்டும். அதுபற்றிச் சம்பவித்திருக்கும் துராசாரங்களான களைப்புல்கள் அதை மேற்கொள்ளாமலும், மூடர்கள் பலத்து ஜாதிமுறைகளைக் கைக்கொண்டு ஆளாமலுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அறிவுள்ளவர்கள் இந்தவிஷயங்களைப்பற்றிய விசாரணைகளை வகிக்கவேண்டும். கல்வி கேள்வி நிறைந்த சிலர்கள் இது சரி, இது பிசகு என்று தீர்மானிக்கவேண்டும். "உலகமென்பதுயர்ந்தோர்மாட்டே". அவர்கள் வழிவிட்டபடி ஸாதாரண ஜனங்கள் அனுஷ்டிக்கவேண்டும். அதிகாரமுறை அறிவை யாதாரம் பற்றியிருக்கவேண்டும். சத்பாவத்தாலும், சத்விசாரணையாலும், ஜாதிமுறை சீர்திருந்தவேண்டும். ஒவ்வொரு ஜாதியிலிருக்கின்ற அறிவுள்ளவர்களும், சத்புருஷர்களும், ஜாதியில் அக்கிரமஸ்தர்கள் அதிகாரம் வகித்துக் கொடுமைசெய்கின்றதைப் பார்த்தும் ஒதுங்கி மௌனம் பாராட்டி நிற்பார்களேயாகில் அவர்கள் அபராதிகளாவார்கள். ஆகவே அறிவுள்ள இந்தியர்கள் அவர்களுடைய சோம்பல் தனத்தினாலும், பொது நன்

மை பயக்கும் விஷயத்தில் உதாசீனமாயிருத்தலினாலும், மகா அபராதிகளாகின்றார்கள்.

இந்தியாதேசத்தில் ஜாதிமுறையும் இந்துசமயமும் அபின்னமாயிருக்கின்றமையால், சீர்திருத்தமுறையில் காலகதியைக்கவனியாமல் தப்பான அபிப்பிராயத்தைக்கொண்டு ஒழுகாமலிருக்கக்கடவீர். இவ்விதம் உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜாதிமுறை விஷயத்தில் வரும் பிரச்னங்களைச் சிரத்தையுடனும், குரோதமின்றியும் பரிசீலனை செய்து தீயவை நீங்குதற்குரியபடி நடுநிலைமையாய்ப், பரிகாரங்களை யேற்படுத்துவீர்களாக. அப்படி யொழுகுவீர்களேயாமாகில் அப்பரிகாரங்களுக்கு ஈசுவர அனுக்கிரகமும் இருக்கிறதாகவே யுணர்வீர்கள். ஆதியிலேற்பட்ட முறைப்படி இச்சநாதன தர்மமும் தழைத்தோங்கும். இனி இந்தியா தேசமுழுவதும் நான்கு வர்ணத்தாரால், மாஹாத்மியத்தைப்பெறும்.

---

# நான்காவது உபந்நியாசம்.

## ஸ்திரீ தர்மங்கள்.

---

சகோதரர்களே! ஒருதேசத்தின் நாகரீக அளவை எம்மாத்திரம் உளது என்று அறியவேண்டுமானால், அத்தேசத்தின் ஸ்திரீகளுடைய நிலைமையே காட்டுமென்று வழக்கமாகச் சொல்லுகிறார்கள். இது யதார்த்தமான அபிப்பிராயமானால், இந்தியா தேசத்தில் பண்டைக்காலத்தில் ஸ்திரீகள் நிலைமையையும், அவர்களின் உயர்வையும் யோசிக்குமளவில், இந்தியாவின் நாகரீகமானது, உயர்வான பதவியையடைந்திருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. உலகசரித்திரத்தையும், உலக இலக்கியத்தையும், எவ்வளவு பரிசீலனம் பண்ணினாலும், இந்தியா தேசத்து இலக்கியத்தில், ஸ்திரீகளின் உயர்வைப்பற்றியும், அவர்களின் ஒழுக்கங்களைப்பற்றியும், பிரஸ்தாபித்திருக்கிற மாதிரியாக வேறு எந்தத்தேசத்து இலக்கியங்களிலும், சரிதங்களிலும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஒவ்வோர் உயர்வான தர்மமும், ஒவ்வொரு சீலமும், ஒவ்வொரு விதமான அழகும், மானிடசரீரத்தின்கண் ஒருங்காக அமைக்கப்பெற்று, உலகமுழுவதும் வியந்து மெச்சிக்கொள்ளும்படியாக அமைக்கப்பெற்றமைபோல, இந்தியா தேசத்து இலக்கியங்களில் வெளியாகின்றன. இம்மாதிரி உயர்வுபெற்ற ஸ்திரீரத்னங்களைப்பற்றிக் கீழ்நாட்டிற்போல மேல்நாட்டார்களும் வெகு சாதாரணமாய் ஒவ்வொ

ருவருந்தெரிந்து கொண்டிருக்கிறார்கள். மேனாட்டுக்கவிகள் புத்திமான்கள், ஞானிகள் இவர்கள் இந்தியாதேசத்தின்ஸ்திரீ தர்மத்தின் உயர்வையும், அழகையும், நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அன்றியும் உலகத்திற்கு இந்தியாதேசத்தில் ஒப்பு உயர்வு அற்ற ஸ்திரீ ரத்தினங்களின் பூர்ணமான அமைப்பு உண்டாயிருக்கின்றதென்று எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இந்தியதேசத்தின் இவ்வுயர்வான உத்தமிகளின் சரிதங்களைப்படித்து மேல்நாட்டார்கள் அவர்கள் மனதில் உண்டாயிருக்கின்ற மனோபாவங்களை மேனாட்டுக்கவிஞர்களுடைய கிரந்தங்களில் பக்கம் பக்கமாய் நான் எடுத்துக்காட்டுவேன். இதைப்பற்றி இந்த உபந்நியாசத்தின் முகப்பில் நான் வற்புறுத்தி எடுத்துக்காட்டுவதற்குக்காரணம் யாதெனில் மற்றவிஷயத்தைப்போலவே ஸ்திரீ தர்ம விஷயத்திலும் இந்தியாதேசத்தின் பிராசீன தர்மத்தின் உயர்வும், அழகும் நீங்கள் உணர்ந்து இக்காலத்தில் நடைபெறுகின்ற அநுஷ்டானங்களைச் சீர்திருத்தஞ்செய்யவேண்டுமென்றும், உங்களுடைய மனதில் அதுபற்றி உற்சாகம் உதயமாகுமாறுந்தான். ஆதிகால உயர்வையும், இக்கால இழிவையும், ஒப்புநோக்கி உற்றுப்பார்த்தால்தான், ஆதிகால உயர்வு இக்காலத்திலும் பயக்கும்படியான முறையை யாரும் தெளிவாய்த்தெரிந்து கொள்ளக்கூடும். முன்னம் நான் பிரஸ்தாபித்திருக்கிற பிரகாரம், இது முதலிய விஷயங்களில் சீர்திருத்தஞ்செய்கிற எல்லாம் மாற்ற

வேண்டுமென்று ஒருதிறத்தாரும், ஒன்றும் மாற்றக்கூடாதென்று மற்றொருதிறத்தாரும், காரியம் சாதிக்கக்கூடாத இவ்வித இருதிறத்தார் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேர்களுக்கும் மத்தியில், இந்தியா விமோசனமானது லோலாயப்பட்டுக்கொண்டிருக்கிறது. பிராசீனதர்மங்களின் உயர்வை இன்னவையென்று அறியாமல் போவோமாகில், இன்ன சீர்திருத்தங்களைப்பற்றவேண்டுமென்றும், இன்னவைகளை விலக்கவேண்டுமென்றும், நாம் அறியவொண்ணாது. நாம் இன்ன உத்தேசத்தை நோக்கி நடைபெறுவோமென்றுந் தெரியமாட்டோம். ஆதி உயர்வான தர்மங்களை நாம் மனத்தில் வாங்கிக்கொள்வோமாகில், அறிவுடனே அனுஷ்டானங்களில், மாற்றவேண்டியவைகளை மாற்றிக்கொள்வோம். ஆதிதர்மத்தின் அழகைப்பற்றி மனத்தில் நினைக்க நினைக்க உலகஜாதியார்களுக்குள், இந்தியர்களாகிய நாம் பிரகிருத ஸ்திதியைவிட்டு உயர்வான பதவியைப்பெறத்தக்கர்களாவோம். இந்தியாதேசத்தின் பூர்வசரித்திரத்தைப்பார்க்கிறதில் அக்காலத்திய தர்மத்தின் சில முக்கியமான அம்சங்கள் ஸ்பஷ்டமாய் வெளியாகின்றன. ஸ்திரீ தர்மத்தின் தத்துவம் இன்னதென்றும், பிரகிருத சுபாவத்தில், ஸ்திரீகளுடைய நிலைமை இன்னதென்றும் ஸ்திரீகள் நடக்கவேண்டிய முறை இன்னவென்றும், மானிடவர்க்கம் உள்பட பிரபஞ்சத்திலிருக்கிற எல்லா வர்க்கங்களிலும், ஸ்திரீ புமான் என்ற மிது

னத்தின் தத்துவம் இன்னதென்றும் அறியவரும். இவை களெல்லாம், உலகவிகாசத்தில், இன்றியமையாதவைகளாயி ருக்கின்றன. ஸ்திரீ புமான் என்ற வேற்றுமையை அழித் துவிடவேண்டுமென்ற முயற்சி அதாவது, ஸ்திரீ புருஷர் தர்மத்தையும், புருஷன் ஸ்திரீ தர்மத்தையும் அவலம்பித்து நடக்க முயற்சித்தல், மானுட விகாச நேர்மைக்குத் தடை யாக முடியும். ஒவ்வொருவர்க்கத்திலும் சிலகுறிப்பிட்ட பிரத்தியக்ஷான குணாதிசயங்கள் ஏற்பட்டு நடைபெறுகின்ற ன. ஒவ்வொரு வர்க்கத்தின் எல்லையை முற்றும் மாற்றுத லானது விபரீதமாகமுடியும். அனுஷ்டானத்தைப்பற்றி விவஸ்தை செய்யும் முன் நம்முடைய உத்தேசத்தைத் தெளிவாகவும் ஸ்பஷ்டமாகவும் தீர்மானித்துக்கொள்ளவே ண்டும்.

ஸ்திரீகளுடைய சுபாவத்தையும், தர்மத்தையும் பற்றி இந்துக்களுடைய ஆதிக்கொள்கையென்ன? மனுஷ சிருஷ்டித் துவக்கத்தில் சிருஷ்டிகர்த்தா அர்த்தநாரீசுவரராகத் தம் மையாக்கிக்கொண்டார். அதாவது ஒருபாதி புருஷனாகவு ம், மற்றைப்பாதி ஸ்திரீயாகவும் ஆயினர். ஆகவே ஸ்திரீ புமான்கள் இருவரும் ஈசுவர அம்சமே. மனுஷ சிருஷ்டியி லும், உலகவிகாசத்திலும், ஸ்திரீ புமான்கள் இருவரும், அ வரவர் நடத்தவேண்டிய தொழில் இருக்கின்றது. ஆண் பெண் என்ற மிதுனம் மனுஷவர்க்கத்தில் மாத்திரம் இருப்

பதன்று. பிரபஞ்சத்தில் எல்லாவர்க்கங்களிலும், இம்மிது னமானது நடைபெறுகின்றது. ஆண் பெண் என்ற பேர் மாத்திரம் எல்லாவற்றிற்கும் உபயோகிக்கப்படுகிறதில்லை. பிரகிருதியில் வெளியாயிருக்கும் இம்மிதுனமானது, ஆண் பால் பெண்பாலாக ஜீவவர்க்கங்களில், பிரகாசமாகின்றன. மானுஷவர்க்கத்தில் சிலகுணாதிசயங்களின் தொகுதி ஆணி லும் மற்றும் வேறானகுணாதிசயங்களின் தொகுதி பெண்ணி லும் அமைகின்றன. தேவவர்க்கத்திலும் ஆண் பெண் என்ற இருபால் இருக்கின்றன. தேவன் உண்டு என்றால், தேவியும் உண்டு. ஆண் பெண் என்பவர் இணைபிரியா இரட்டையர்கள். ஒரே ஈசுவரனின் விகாசம் மிதுனமாக வேற்பட்டது.

வேற்றுமையான குணாதிசயங்கள் ஒரே ஸ்தூல சரீரத் தின்கண் ஒரேகாலத்தில் விகாசமாகி அபிவிர்த்தியடைய இயலா. ஆகையினால், இரண்டுவிதமான சரீரபாரம்பரியம் அந்தந்தக் குணாதிசயங்களுக்கு உற்றதாய் ஏற்பட்டிருக்கின் றன. ஒரே சரீரபாரம்பரையில் விக்ஞானம் பூர்ணவிகாசத் தையடைகிறது. மற்றொருசரீரபாரம்பரையில், அன்பின் வழியதாகிய புத்தி தத்துவம் பூர்ணவிகாசத்தைப் பெறுகி ன்றது. இவைகள் முறையே ஆண் பெண் சரீரங்களாம். அவைகளின் வேற்றுமையே, விகாச அபிவிர்த்திக்கு அனு கூலமாகும். மேன்மேலும் விகாசம் அபிவிர்த்தியாகி, அத

ன் கடைமுறையில், வரவர ஆண் பெண் வேற்றுமைப்பாடுகள் குன்றி அந்தியத்தில் இரண்டும் ஒன்றுபட்டு அர்த்தநாரியாக ஆரம்பம்போல் முடிவிலும் அமையும்.

ஆகவே, ஈசுவராம்சத்தில், ஒருபாதி ஸ்திரீரூபமாக அமைந்திருக்கிறது. அது தான் சரீரங்களை உண்டுபண்ணும் சுபாவமுடையது. அதுதான் க்ஷேத்திரமாக அமைகிறது. அதன்கண் வெவ்வேறான உருவங்கள் உண்டாகின்றன. அவைகள் அதனால் பேணப்படுகின்றன. அதன் ஆதரவைப் பற்றி அவ்வுருவங்கள் விளங்குகின்றன. சுருக்கமாகச்சொல்லின் பிரபஞ்சத்தின்கண் மாதிருஸ்தானத்தை அது வகிக்கின்றது. இதுதான் ஸ்திரீகளைப்பற்றிய மூலதத்துவம்; இதைப் பிராசீன கிரந்தங்களில் விவரித்திருக்கின்றனர். விகாசமாயிருக்கின்ற பிரபஞ்சத்தில், ஸ்திரீயானவள் பிரகிருதி தத்துவத்தின் அறிகுறியாய் அமைகிறாள். மாதாவாகி ரக்ஷிக்கும் தன்மையில்லாமல், புருஷன் விகாசம்முடியாது. பிரபஞ்சத்தில் ஸ்திரீயினுடைய மூலதர்மம் இத்தன்மையதென்று இதனால் நன்குவிளங்கும்.

பிராசீன கிரந்தங்களைப்படிக்கப் படிக்க தேவ அம்ஸம் விகாசமாகவேண்டுமானால், தேவி அம்ஸம் இன்றியமையாததாகவிருக்கிறது. தேவி அம்ஸம் ஏற்பட்டுத்தான் உத்தேசித்தகாரியம் நிறைவேறுகிறது. துர்க்காவதாரசம்பந்தமான கதையைப்பாருங்கள், உலகம் அசுரர்களால் பிடிக்கப்

பட்டிருந்தசமயத்தில், தேவர்கள் தங்களைக்காப்பாற்றிக் கொள்ளும்வகை தெரியாமல் நின்றார்கள். திரிமூர்த்திகளை ப்பிரார்த்தித்தார்கள். அத்திரிமூர்த்திபினிடமிருந்து ஒரு மகத்தான தேஜோரூபம் ஆவிர்ப்பவித்தது. அதுவே, துர்க்கை. தேவதாசக்திகளை துர்க்கையாக மூர்த்திகரித்தன. அந்தச்சக்திகளால், துர்க்காதேவி அபாயத்திலிருந்தும், கொடுமையிலிருந்தும், உலகத்தை விடுவித்தாள். தேவர்களுக்கு இடையூறுகளாகக் கொடுமைசெய்து வந்த பயங்கரமான அசுரர்களைத்தொலைத்தவள் இந்தத்துர்க்காதேவியே. இக்கதையினால் எக்காலத்தும் பொருந்தும்படியான ஒரு தத்துவ பாவம் ஏற்படுகிறது. அதாவது ஸ்திரீ அம்ஸமே ஈசுவர அம்ஸமாக இருக்கிறதென்றும், தேவியே திதிகர்த்தாவென்றும் எல்லாச்சக்திக்கும் ஆசிரயமென்றும், விளங்குகின்றன. இடையூறுகளை நிவர்த்திசெய்கிறவள் அந்தத்தேவியே. அபாயங்களினின்றும் பாதுகாப்பவளும், அந்தத்தேவியே. உலகத்திற்கு அடைக்கலமும், அந்தத்தேவியே. உலகங்களனைத்தும் தேவியின் பாதத்தில் சரணமடைகின்றன.

ஸ்திரீயினுடைய தர்மத்தைப்பற்றி ஹிந்துக்களுடைய கொள்கை மேற்கண்டவிதமாய் இருக்கிறது. அவர்களுடைய கிரந்தங்களில் இந்தத் தத்துவபாவம் எங்கே பார்த்தாலும் விளங்கும்.

மேலும் இந்தத் தத்துவம் உலகநடவடிக்கையில் விகாசிக்கிறதில், விவாகமூலமாக மனுஷத்தன்மை பூர்ணம் பெறுகிறது. ஸ்திரீ புமான்கள் இருவர்கள் என்ற பாவம் இல்லை. ஆனால் அவர்கள் இருவரும் ஒருவராகவே பாவிக்கப்படுகிறார்கள். பிரதக் பாவம் இல்லை. ஏகீபாவமாகவே அவர்கள் இருக்கின்றார்கள். இணைபிரியாத மிதுனமாக அவர்கள் ஏற்படுகிறார்கள். அவர்கள் இருவரும் பாதி பாதி சேர்ந்த ஒரே சரீரமே. தேவ தேவி விஷயத்தில், ஒரே தேவசக்தி எப்படி விளங்குகின்றதோ, அப்படியே ஸ்திரீ புமான் விஷயத்திலும், மானுஷ அமைப்பின் பூர்ணமானது விகாசிக்கின்றது. இருவர்களுக்குள்ளும் வேற்றுமை பாவம் நிகழாது. சத்துருபாவமும் பொருந்தாது. ஆண், பெண், ஸ்திரீ, புமான் என்ற பாவங்கள் பூர்ண மனுஷனின் இரண்டு பகுதிகளாம். விவாகத்தைப்பற்றி ஹிந்துக்களுடைய உயர்வான பாவம் என்னவென்றால், ஒருமைபயக்கும் தன்மை உண்மையாய் ஏகீபாவ நிகழ்ச்சி.

ஸ்திரீயினுடைய உருவத்தையும் வடிவத்தையும் கவனித்துப்பார்ப்போமாகில், அவளுடைய அந்தர்த்தர்மமும், பகிர்தர்மமும், இன்னதென்று அறிகுறியாய் அவள் சரீரத்தின்கண்ணே அமைந்துள. அழகும் அன்பின்வழியதாகிய புத்திவலிமையும், ஆழ்ந்தகருணையும், அவள் சரீரத்தின்கண்ணே விளங்குகின்றன. பூர்ணவிகாசம் பெற்ற மனுஷ ஜீவ

னில், ஸ்திரீயானவள் புத்தி அம்ஸத்தையும், புருஷனானவன் விக்ஞான அம்சத்தையும் அறிகுறியாய் நின்று விளக்குகின்றார்கள். இருவரும் இன்றியமையாதவர்கள். இருவரும் ஒருங்கு சேர்ந்து தான் பூர்ணம் லபிக்கவேண்டியதாக விருக்கின்றது. இந்த இருவிதகுணபாவங்களை வெளிப்படுத்தவே, அவர்களின் சரீர வேற்றுமைகள் வித்தியாசமாக அமைந்துள்ளன. இரண்டும் சம்பத்தித்து ஒருமைப்படுமாயின், விக்ஞானமும் புத்தியும் முறையே நடத்துகிறவனாகவும், நடத்தும் சக்தியாகவும் ஏற்படும் இவ்விரண்டும் ஒன்றுசேர நேர்மையான ஒழுக்கம் சம்பவிக்கிறது. அப்படி நேர்ந்த சமயத்தில் மனுஷன் உலகத்தில் தன் தர்மத்தை நேர்மையாய் நடத்தல்கூடும். இவ்வண்ணம் ஒருமைப்பட்டு ஏகி பாவமாய் இருவர் கருத்தும். ஒக்க ஸ்திரீ புமான்கள் நடைபெறுவார்களேயாகில், அதுவே மனுஷன் நடைபெறவேண்டிய ஒழுக்கத்தின் உயர்வாம். அதை முன்னோக்கியே இத்தர்மத்தை உத்தேசமாக எதிரில்வைத்துக்கொண்டே மனுஷர்கள் நடைபெறுவாராகின்றனர். இவ்வுயர்வான பாவத்திற்கு விரோதமாய், ஏகி பாவத்தைக் கெடுத்து பிரதக் பாவத்தை உண்டுபண்ணி ஆண் பெண் இருவரும் சத்துருத்துவம் பாராட்டிப் போட்டியாக உலகத்தில் நிகழ்வார்களேயாகில், அது மனுஷ அபிவிர்த்திக்குக் கேடு விளைக்கக் கூடியதாக விருக்கிறதுமன்றி ஊர்த்துவ முகமாய்ச் செல்வதை விட்டு அதோமுககதிக்குக் காரணமாயும் ஏற்படும்.

விருப்பும் வெறுப்பும் பற்றியதான அந்தக்கரண விருத்தி யானது (Emotions) சால விகாசத்தை அடைகின்றது. துக்கம் வந்தால், புருஷனைவிட அதிகமாய்ப் பாராட்டுவாள். சுகம் வந்தால், அதிகமாய்ச் சுகிப்பாள். ஆகவே அவளு டைய படிப்பு விஷயத்தில், அவளுக்கு உரிய குணபாவம் விகாசிக்கும்படியான ஏற்ற கல்விப்பயிற்சியை அமைத்தல் வேண்டும். ஆனால் விக்ஞான பாவமும், அவ்வளவு உயர்வு பெறாவிடினும், கூடிய வரை விகாசம் ஆகும்படியாகப் பார்த் துக்கொள்ளவேண்டும். இது கவனிக்க வேண்டிய முக்கிய மான விஷயம். மனுஷன் கடின சித்தம் உள்ளவனாகவும், சுயநய விருப்பம் உள்ளவனாகவும் ஆகாமல் இரக்கமும், செ ந்தண்மையும் அமையும்படியாய்க் கல்வி பயிலவேண்டும். அம்மாதிரியாகவே ஸ்திரீகளுக்கும் நடுநிலைமை நேர்மை குன் றிப்போகாமல், அறிவை அபிவிர்த்தி செய்தற்கு ஏற்ற கல் விப்பயிற்சி இருத்தல் வேண்டும். புமானிடத்தில் அறிவு மிகுதியாகவும், விருப்புவெறுப்புப்பற்றி அந்தக்கரண விரு த்தி குறையாகவும் இருத்தல்வேண்டும். அவ்விதமே, விரு ப்பு வெறுப்புப்பற்றி அந்தக்கரண விருத்தி அதிகமாகவும், அறிவு குறைவாகவும், ஸ்திரீயினிடத்தில் இருக்கலாம். ஆக இரண்டு குணங்களும் இருவர் இடத்திலும், ஏற்றத் தாழ்ச்சியாக இருக்கவேண்டும். இவ்விதமாக விகாசம் பெ ற்ற ஆண்பெண்கள் ஸ்திரீ புமான்களேயாமாகில், அப்போ

து சரியான விவாகம் அமைகிறது. இருவரும் நேர்மைபற்றி னவராய் இல்வாழ்க்கை நடத்துவார்கள். உண்மையான சிநேகிதர்களாவார்கள். ஒருவரையொருவர் அறிந்தவராய், உற்றதுணைவராவார்கள்.

"காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே—யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருண்
கண்ணிரண்டு மொன்றையே காண்."

அப்படியின்றி அவரவர்களுக்கு உரிய குண சுபாவம் மாத்திரம் அபிவிருத்தியாகி மற்றைய குண சுபாவம் பொய்த்துப்போமாகில், நேர்மைபற்றிய விவாகம் அவ்விருவருக்குள் நேர்வது துர்லபம். ஏனென்றால் இருவர்களும் தனித் தனியாய்த் தூரமான பிரதக்பாவம் உள்ளவர்களாய் இருக்கின்றார்கள். இருவருக்கும் பொதுவான மனோதர்மம் ஒரு விஷயத்திலும் நிகழாது சண்டை சச்சரவுக்கு ஆஸ்பதம் இருந்துகொண்டேயிருக்கும். அந்நியோந்நியமில்லாத விவாகம் ஏற்படும். அது ரசமாக இராது. இருக்கவேண்டியபடி பண்பும் பயனும் இல்லாததாகும்.

ஹிந்துக்களுடைய இலக்கியங்களில், விவாகத்தின் உயர்வைப்பற்றியும், இல்வாழ்க்கையின் மேம்பாட்டைப்பற்றியும், விரிவாய்ப் பிரஸ்தாபித்திருக்கிறது. களங்கம் அற்ற அளவுகடந்த அன்பும், ஆழ்ந்தபக்தியும், சிரத்தையும், மாறாத பதிவிரதாதர்மமும், எவ்விதச் சங்கடங்கள் நேரி

டினும், தளர்ச்சியடையாத தைரியமும், எவ்வித சோதனையான துன்பங்கள் சம்பவித்தாலும் சலிக்காத திறமையும், சோர்வு படாத மன ஊக்கமும், ஸ்திரீகளிடம் அமையக் காண்கின்றோம். குறைபடா இரக்கமும், இடையறாத யோசனையும், நல்வழியில் நடத்தும் குணமும், சீலமும், தளராத அன்பும், புமான்களிடம் அமையக் காண்கின்றோம். ஆகவே இம்மாதிரி இருவர்கள் சம்பந்தத்தினால் மனுஷ்ய கலியாண குணங்கள் ஒருங்கே நேர்மையாக அமையப்பெறும் பாக்கியம் உண்டாகிறது. ஹிந்துக்களில் ஸ்திரீ புமான்கள் இவ்வண்ணம் உயர்வான உத்தம குணங்களுடன் இல்வாழ்க்கை நடத்துவதனால், விவாகத்தின் மஹிமையும், பண்பான இல்வாழ்க்கையின் மேம்பாடும், நன்கு விளங்கியும் வந்தது.

ஆதிகால உயர்வையும், இக்கால அனுஷ்டானத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கில், என்னவிதமாய் நடைபெறுகின்றது என்று சொல்லுவோம்; ஆதி இலக்கிய புஸ்தகங்களில் சொல்லியபடி அக்காலத்தில், உத்தமஸ்திரீகள் உலகவாழ்க்கைக்கு உரிய எல்லாத் தர்மங்களையும், நேர்மைபற்றி நடத்தி வந்தார்கள். அந்த ஸ்திரீகளின் தன்மை எம்மாதிரி இருந்திருக்கவேண்டுமென்பதற்குச் சாக்ஷியாக, அடியில் வரையும் சுலோகங்களை மநு தர்மசாஸ்திரத்தினின்று எடுத்துக் காட்டுவோம்.

"சம்பத்துக்களை விரும்புவோராகில் பிதா சகோதரன் புருஷன் மைத்துனன் இவர்கள் ஸ்திரீகளைக் கவுரவமாக

நடத்தவேண்டும். ஆடை ஆபரணங்கள் கொடுத்துத்திரு ப்தி செய்யவேண்டும். ஸ்திரீகளை மஹிமைப் படுத்தினால், தேவர்கள் சந்தோஷிப்பார்கள். ஸ்திரீகளைக் கவுரவமாக நடத்தாமல் இருப்பார்களேயாமாகில், செய்யும் எல்லாக்கிருத்தியங்களும் பலனின்றி வீணாய்விடும். ஸ்திரீகள் துக்கிக்க அக்குடும்பம் சீக்கிரம் நாசம் அடையும். அப்படியன்றேல் அக்குடும்பம் செழுமையாயு மிருக்கும். ஸ்திரீகள் கவுரவம் பெறுமல் சபிப்பார்களே யாகில், சூனியம் வைத்தாற் போல முற்றும் நாசத்தை அடையும்.''

(மனு iii 55-56-57-58.)

இவை உயர்வான சங்கற்பமுள்ள உபதேசங்களாம். இவைகளினால் ஸ்திரீகள் ஒழுக்கம் இத்தன்மையாய் ஆதிகாலத்தில் இந்தியாவில் நடைபெற்று வந்தது என்பது தெரிய வருகிறது. குடும்பத்தின்கண் இல்வாழ்வாளும், அதன் புறம்பாக ஒழுகினவளும், ஸ்திரீ தர்மத்தைப்பற்றி முதலாவதாகக் கவனிக்க வேண்டியது. இல்வாழ்க்கை அன்றி நடைபெறும் ஸ்திரீ இக்காலத்தில் இல்லாமற் போயினள். பண்டைய காலத்தில் இத்தேசத்தில் விவாகம் இன்றிக் கன்னிகையாகவே, சில ஸ்திரீகள் இருந்து வந்தார்கள். அவர்களுக்குப் பிரம்மவாதினி என்ற பிரத்தியேகமான பெயர் வழங்கி வந்தது. அவர்கள் வேத பிரவசனம் பண்ணிவந்தார்கள். பிராசீன தர்மசாஸ்திரங்களில் அவர்களுடைய பெ

யர் வழங்கி வருகிறது. சாஸ்திரங்களில் அவர்களுடைய சுதந்தரங்கள் மரியாதைகள் இவைகளின் விவஸ்தை ஏற்பட்டிருக்கிறது. ஸ்திரீகள் பிரம்மவாதினி என்றும் கிருஹணி என்றும் இருபான்மையாக வகுக்கப்பட்டு நடைபெற்று வந்தார்கள். முதல் வகுப்பினராகிய பிரம்மவாதினிகள் யக்ஞோபவீதம் தரித்தவர்களாய், அக்கினி ஹோத்திராதிகள் செய்துவந்தும், அத்தியயனப்பிரவசனம் செய்துவந்தும் அவரவர்களுடைய கிருஹத்தில் விவாகம் இன்றிக் கன்னிகைகளாகவே காலங்கழித்து வந்தார்கள். ஹாரிதஸ்மிருதியை ஆதாரமாகக்கொண்டு மேற்கண்டபடி பிரம்ம வாதினிகளினுடைய சுதந்தரங்களேயும், மரியாதைகளேயும், பற்றிச் சொல்லியிருக்கிறேன். மற்ற ஆதாரங்களும் சொல்லக்கூடும். பண்டைய காலத்தில் புருஷ சந்நியாசிகளேப் போன்று துறவறம்பூண்ட ஸ்திரீ சந்நியாசிகளும் இருந்திருக்கிருர்கள். உதாரணமாக ஞானஜனகர் சபைக்குச்சந்நியாசினி வேஷம் பூண்டு தண்டத்தைத் தரித்துக் கொண்டு சமயவாதம் சாஸ்திரவாதம் செய்யக்கருதினவளாய் ஒருசந்நியாசினி வந்திருந்ததாக நாம் அறிகிருேம். பண்டைய காலத்தில் இத்தேசத்தில் பிரம்மவாதினிகளான இவ்வகுப்பினர் இருந்திருக்கிறபடியிஞல், வேதங்கள் அத்தியயனம்பண்ணப்படா என்றும், கற்கப்படா என்றும் இருக்கிற தடங்கல் அக்காலத்தில் இருந்திருக்கவில்லேயென்றும், தத்துவ சாஸ்திரம், சமய சாஸ்திரம், இவைகளேப்பற்றிய வாதங்களில்

அவர்களும் யாதோர் ஆக்ஷேபணையுமின்றி வாதங்கள் செய்து வந்தார்கள் என்றும் ஸ்திரீகள் வேத அத்தியயனப் பிரவசனம் செய்யப் படாதென்ற கட்டுப் பாடானது நவீனமாய் உண்டாயிருக்கிறதென்றும், அதைக் கிரந்தங்களில் நுழைத்துவிட்டார்கள் என்றும் தெரியவருகின்றன. புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் வித்வத் நிறைந்த விதுஷிகளாய் இருந்திருக்கிறார்கள். புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும், வேதங்களைக் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயராய் இருந்திருக்கிறார்கள். வேதமந்திரங்களில் சில முக்கியமாய் இருக்குவேத மந்திரங்களில் சில ஸ்திரீகள் மூலமாய் ஆதியில் பிரவர்த்தித்து இருக்கின்றன. அவர்கள் வாய்ப்பிறப்பாக வந்திருக்கின்ற சிரேயஸ்கரமான மந்திரங்களை இக்காலத்தில், அவருடைய வம்சத்தினராகிய புத்திரிகள் உச்சரிக்கவும் கூடாவாம்! அவைகளைப்படிக்கவும் கூடாவாம்! இதென்னகொடுமை! இதென்ன கொடுமை!! இருக்குவேத மந்திரங்கள் ஸ்திரீகள் மூலமாக விகாசமானதும் அன்றி ஞானகுரு ஆசாரிய பாரம்பரை ஜாப்தாவிலும், ஸ்திரீகளுடைய நாமங்கள் வருகின்றன. ரிஷிகள் ஞானிகள் அமைந்திருக்கின்ற ஒரு மகாசபையின்கண் பிரம்மவாதினி கார்க்கி (மாமி-ீ) ஒருத்தி இருந்துகொண்டு யாக்ஞவல்கிய ரிஷியைப் பிரச்னம் கேட்டாள்என்று உபநிஷத்துக்களில் வந்திருக்கிறதல்லவா?

ஆதிகாலத்தில் ஸ்திரீகளுடைய சுதந்தரத்தைப் பற்றியும், கௌரவத்தைப் பற்றியும், மேற்கண்ட வகுப்பினராகிய பிரம்மவாதினிகளாகிய உயர்வான கன்னிகா சிரோமணிகளைப்பற்றியும பேசுவானேன். குடும்பத்தில் இருந்த ஸ்திரீகளும் கூட அதிக சுதந்தரம் பெற்றவர்களாய் வெளிவந்து ஜனசமூக பொதுவான கைங்கரியங்களில் தாமும் தமக்குரிய வேலை முறைகளை வகித்து நடத்துவாராயினர். முன் பிரஸ்தாபித்த இருக்குவேத ஸ்தோத்திரங்களுக்கு ஸ்திரீகள் கர்த்தாக்களாய் இருந்திருக்கிறார்கள். குடும்பிகளாய் இருந்த ஸ்திரீகள் பெரிய உற்சவங்களில் தாமும் வந்து இருந்து நடத்தினார்கள் என்று இருக்கு வேதத்திலேயே ஆதாரங்கள் இருக்கின்றன. பிராமணர்களும் இராஜாக்களும் கனவான்களும் ஏனையரும் கூடியிருந்த பெரிய மகாசபையில் ஒரு பெரிய யாகம் நடத்திய சமயத்தில் ஸ்ரீராம சந்திரமூர்த்தியினுடைய தாயாராகிய கௌசல்யாதேவி முக்கிய ஸ்திரீயாக இருந்துகொண்டு புரோஹித கைங்கரியம் செய்ததாக இராமாயண மூலமாக அறிகிறோம். அவளே யாகஞ் செய்தாள். அவளே யாகத்திற்கு யஜமானியுமாக இருந்தாள். ஸ்திரீகள் அவர்களுடைய பர்த்தாக்களும் வேறு ரிஷிகளும், சாஸ்திர விசாரணைவாதங்கள் செய்துவந்த காலங்களில் தாங்களும் அவைகளில் புகுந்து வாதங்கள் செய்து வந்தார்கள் என்று காண்கிறோம். உதாரணமாகத் திரௌ

பதி, சீதை இவர்களைப் பாருங்கள். சங்கடங்கள் நேரிட்டகாலத்தில் லௌகிக விஷயங்களில் தங்களுடைய பர்த்தாக்களுக்கு அறிவுறுத்தி ஆலோசனை சொல்லி வந்தார்கள் என்று தெரிகிறோம். சீதை, திரௌபதி இருவர்களும் லௌகிகப் பிரக்ஞையுள்ளவர்களாயும், உலக நீதிகளை நன்றாய் அறிந்தவர்களாயும், தங்களுடைய பர்த்தாக்களுக்கு அறிவுவாய்ந்த புத்திமதி சொல்லக்கூடிய திறமையுள்ளவர்களாயும், தங்களுடைய யோசனைகளுக்கு மாறாய் இருக்கின்ற அபிப்பிராயங்களின் யோக்கியதையையும் தாரதம்மியத்தையும் நிதானிக்கக் கூடியவர்களாயும், எந்நெறிபற்றி நடந்தால் சிரேயஸ்ஸாய் இருக்குமோ அந்நெறியைத் தீர்மானித்து யோசிக்கக் கூடியவர்களாயும் இருந்தார்கள். துரியோதனன், ஸ்ரீகிருஷ்ணபகவானென்ன அவனுடைய பிதாவென்ன அவனுடைய குருவென்ன இன்னும் சபையில் இருந்த மூத்தோர்களென்ன இவர்களெல்லாம் புத்திசொல்லியும் தன்னுடைய துர்மார்க்கத்திலேயே பிடிவாதம் பற்றிக்கொண்டு இருக்க, ஒருவராலும் அவனுடைய துர்ப்புத்தியை மாற்ற முடியவில்லை. அக்காலத்தில் அவனுடைய மாதாவாகிய காந்தாரி என்பவளை வருவித்தார்கள். அந்த மகா சதஸுக்கு அவள் வந்தாள். சாமபேததான தண்டம் என்கிற நான்குவித உபாயத்தினால், அவனுக்கு அறிவுறுத்தினாள். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், ஆதிகாலங்களில் ஸ்திரீகள் உண்மையா

கப் புத்திசாலிகளாகவும், அவர்களுடைய ஆலோசனையில் கவுரவம் பாராட்டியும், அவர்களுடைய புத்திமதியை நன்கு மதித்தும், அதன்படி நடை பெற்றார்கள் என்றும் தெரிய வருகிறது. அறிவு பெற்று இருந்தமையால் பேசும் திற மையும் உண்டாயிற்று. ஞானமும் கல்வியும் அவர்களிடம் அமையவே அதிகார தோரணையில் அபிப்பிராயம் கொடுக்கத் துணிந்தார்கள்.

மேற்கண்ட விஷயங்களைப்பற்றி நூற்றுக் கணக்காய்த் திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டக் கூடும். இவைகளின் படிப்பினையினால், நாம்கொண்ட துணிபு யாதெனில், பண் டைய காலத்தில் ஸ்திரீகள் ஆழ்ந்தும் அகன்றும் வாசித்தார் கள் என்றும், கவுரவமான சுதந்தரம் பெற்று இருந்தார்கள் என்றும், தெரியவருகின்றன. விவாக சம்ஸ்காரத்தினால், ஸ் திரீ புமான் என்ற சம்பந்தம் நெருக்கமாயும், அபின்னமா யும் இருந்தது. பர்த்தா குடும்பகர்த்தாவாகவும், யஜமான னாகவும் குருவாகவும், புருஷனே தெய்வமாக மூர்த்திகரித் துவந்தார், என்றபாவம் பெற்றும், நடப்பாராயினர். ஸ்திரீ புமான் இருவரும் ஏகீபாவம் பெற்று ஒருமை பாராட்டுவா ராயினர். ஸ்திரீ, புருஷனுக்குப் பவ்வியமாய்ப் பணிவாளா யினள். இவ்விதமான நேர்மை இந்தியாவில் தான் காண் கின்றோம். இவ்வண்ணமாய் இருந்தாலும், ஸ்திரீயான வள் உயர்வான தர்ம முறைகளை நடத்த எவ்வித தடங்க

லும் இருந்திருக்க இல்லை. கிருஹத்திலும் அதின் புறம் பாகவும், தான் செய்யவேண்டிய தொழில்களைச் செய்து கொண்டு வருவாளாயினள். ஸ்திரீ புமான்கள் இருவரும் நேர்மைபற்றி யொழுக இருவர் ஞானமும், புத்தியும், ஒன்று பட்டு நடை பெறவும், சத்தியமான பாவமும், அது பற்றிய நல்லொழுக்கமும், சத்கர்மமும் உண்டாயின. ஆதி காலத்தில் ஸ்திரீகள் நடத்தி வந்த தர்ம முறைகளைப் பற்றி நான் சொன்னதெல்லாம் அற்பமே? சொல்லவேண்டிய விஷயம் எவ்வளவோ இருக்கிறது. ஆதிகிரந்தங்களைப் பார்க்கிறதில், ஸ்திரீகள் அதிக புத்திசாலிகளாகவும், ஆழ்ந்தவும் விரிவானவுமான கல்வி கேள்வி நிறைந்தவர்களாகவும், ஸ்திரீத் தன்மையானது பூர்ணவிகாசம் பெற்றதாகவும், ஸ்திரீகள் தீரர்கள் ஆகவும், மகத்தான கவுரவம் தங்கினவர்களாகவும், உயர்வான செல்வாக்கு அமைந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இப்படி நிகழுகையில் இந்திய இலக்கியங்களில் விவரித்திருக்கிற விவாகத்தைப்பற்றியும், கிருஹஸ்தாச்சிரமத்தைப்பற்றியும், உலகமெல்லாம் மெய்ச்சிக் கொள்ளுகிறது என்பது ஆச்சரியம் அன்று.

முற்காலத்தில் இந்தியாவில், ஸ்திரீகளுடைய நிலைமையையும் இக்காலத்தில் அவர்களுடைய நிலைமையையுமொப்பிட்டுப் பார்ப்போமாகில், இக்காலத்து ஸ்திரீகளுடைய நிலைமை நிரம்ப விசனகரமாய் இருக்கின்றது. ஆயினும் இந்திய

ஸ்திரீகள் இக்காலத்திலும் சிரேயஸ் மார்க்கத்தை விடாமல் பாதுகாத்து வருகின்றார்கள். விசுவாசமும் பக்தியும் இன்னும் பாராட்டுகின்றார்கள். நான் பல தேசங்களில் சுற்றியிருக்கின்றேன். பலநாகரீகங்களைப்பார்த்து இருக்கின்றேன். அந்நாகரீகங்கள் பற்றி ஒழுகும் பல மாதிரியான ஸ்திரீகளையும், கவனித்திருக்கின்றேன். க்ஷீணதசை அடைந்திருக்கிற இக்காலத்திலும்கூட இந்தியதேசத்து ஸ்திரீகளைப்போல மனோசீலமும், விசுவாசமும், சிரேயஸ்கரமும் ஆழ்ந்த உருக்கமான பக்தியும், மாசு இல்லாத ஒழுக்கமும் அழகும், அறிவும், அமைந்த பொறுமையும், மற்ற எந்த ஸ்திரீகள் இடமும்கண்டிலேன். இது நிச்சயம் என்று நான் உறுதிசொல்வேன்.

இக்காலத்து இந்திய ஸ்திரீகளுக்கு அறிவு விகாசமாகிறதற்குப்போதுமான சாதனங்கள் இல்லாவிடினும், அவர்களிடம் உயர்வான பண்பு அமைந்திருக்கிறதாகக் காண்கிறோம். நான் பார்த்த ஸ்திரீகளில் ஒவ்வொருவர் ஞாபகம் மனத்துக்கு வரும்போதெல்லாம், அவரவருடைய பண்பையும் சீலத்தையும்பற்றி மனனஞ்செய்வேன். போதுமான சாதகமும் சௌகரியமும் உண்டாக்கி இந்திய ஸ்திரீகளின்கண் அமைந்திருக்கும் எல்லா உயர்வான பாவங்களும், சீலங்களும், விகாசம் பெறுமேயாகில், இந்தியாவின் கௌரவமும் என்னமாதிரியாக நிகழும் என்று நானுகவே சங்கிக்கிறது உண்டு. சங்கடமானதும் பிரதிகூலமானதுமான நிலையில் இந்

தியஸ்திரீகளினுடைய யோக்கியதை மேற்கண்டவிதமாய் உயர்வுபற்றி இருக்கிறதை நினைக்க நினைக்க இந்தியாவுக்கு விமோசனம் பயக்கவேண்டுமானால், இந்தியஸ்திரீகளின்மூலமாக அஃது ஏற்படக்கூடும்என்று நான்எண்ணினது உண்டு. ஏனென்றால், ஸ்திரீகள் மனத்தில் மாத்திரம் இந்தியதேசத்து நிலைமை படுமேயாகில், ஸ்திரீகள் புருஷர்களைவிட ஆயிரமடங்கு பக்தி உள்ளவர்களாகவும், ஊக்கம் உள்ளவர்களாகவும் ஆவார்கள். ஸ்திரீயோ தன் உயிரையே தியாகம் செய்வாள். புருஷன் செய்யமாட்டான். ஆயிரக்கணக்கான வருஷங்களாக, ஆயிரக்கணக்கான தலைமுறைகளாக, குடும்பத்திலும், பர்த்தாவுடனும், சிசுவுடனும் தியாகம் என்ற படிப்பே படித்து வந்திருக்கிறாள். இயற்கையாய் ஏற்பட்டிருக்கிற அந்தத் தியாகபாவம் உயர்வான லக்ஷியத்தின் முகமாகத்திரும்பிச் சிரேயஸ்கரமான சம்பத்துக்களை அடைய முயலுமேயாமாகில், உலகத்திற்கே நன்மைபயக்கும்படியான சௌகரியம் நேர்வதாகும். இந்தியாவின் ஸ்திரீகளுடைய தியாகத்தினாலும், பக்தியினாலுமே இந்தியாவின் விமோசனம் கைகூடும்.

இவ்விதமாய் இந்தியா க்ஷேமம் பெறவேண்டுமானால், இந்தியாதேசத்து ஸ்திரீகள் இப்போது நடைபெறுகின்ற முறையில் கொஞ்சம் மாறுதல் செய்யவேண்டும். மேல்நாட்டு நாகரீகத்தைப்பற்றி இந்தியாதேசத்தில் தற்காலத்தில்

அநுஷ்டானத்தில் இருக்கின்ற கல்விப்பயிற்சி முறைகளைப் புருஷர்கள் அநுஷ்டானஞ்செய்து வருகின்றார்கள். அதின் பயனாக அநேக மாறுதல்கள் இந்தியாதேசம் முழுவதிலும் உண்டாகிக்கொண்டுவருகின்றன. புருஷர்கள் மேற்படி மாறுதல்களை அமைத்து நடைபெறுகின்றார்கள் ஆகையால், அவைகளுக்கு இயைந்து ஸ்திரீகளும் தங்களுடைய முறையில், உற்ற மாறுதல்களை அமைத்துக்கொள்ளவேண்டியவர்களாக ஆகின்றார்கள். அப்படி அன்றேல் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இருக்கின்ற பேதம் வரவர அதிகப்பட்டுவரும். கடைமுறையில் ஒருவருக்கொருவர் சம்பந்தம் விட்டு வேற்றுமைகள் பலப்படும். புருஷனுடைய விசாலமான பாவங்களை ஸ்திரீகள் உணராமற்போனால் ஆதிகாலம் போன்று லௌகிக விஷயங்களில் தன் பர்த்தாவுக்கும், புத்திரனுக்கும், ஸ்திரீகள் எவ்விதம் யோசனைசொல்லக்கூடும். எவ்விதம் புத்திகற்பிக்கக்கூடும். முன்காலத்தைப்போன்று லௌகிக விஷயங்களில் பழக்கம் இல்லாமலும், அவைகளைப் பற்றிஅறிகிறதற்குச் சந்தர்ப்பம் இல்லாமலும், கிருகத்தின் கண்ணே அடையப்பட்டு இருக்கின்றமையால், ஸ்திரீகளினுடைய மனமானது வரவரக் கூனிக்குறுகிவருகின்றது. ஆயினும் அவருடைய மனோபாவம் மாத்திரம் களங்கம் இல்லாமல் இன்னும் இருக்கின்றது. ஆகையினால் இப்போதிய

நிலைமையில், அந்நிலைமைபற்றி உண்டாகும் நியமவை பலிக்கா வண்ணம் அதில் ஒரு மாறுதலை அமைத்தல்வேண்டும்.

ஸ்திரீகளுக்கு நேர்ந்திருக்கின்ற நிர்ப்பந்தங்களில் சில இந்தியாதேசத்திற்கு உரியன அல்ல. மகமதியர்கள் படையெடுத்த காலத்தில் உயிரைக்காப்பாற்றும் பொருட்டும் உயிரைவிட அருமையான மானத்தைப்பாதுகாக்கும் பொருட்டும் காப்புமுதலிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. அந்தப்புர வழக்கமானது ஆரிய நாகரீக சம்பந்தம் அன்று, மகமதியர்களுடைய ஆசரணை. கோஷா ஏற்பாடானது, முற்காலத்தில் இருந்திருப்பது இல்லை. பூர்வீக இலக்கியங்களில் இதைப்பற்றிப் பிரஸ்தாபமேகிடையாது. அதற்கு முற்றும் விரோதமாய் நடைபெற்று வந்ததாகத் தெரியவருகிறது. தேசத்தில் அபாயம் நேர்ந்திருந்தகாலத்தில், ஸ்திரீகள் அபாயத்துக்கு உட்படாமலும், பந்தோபஸ்தாய் நடைபெறும் வண்ணம் இந்தக் கோஷா வழக்கம் தலைப்பட்டது. அதைப்பற்றி நான் குற்றம்சொல்லவில்லை, ஆனால் இத்தேசத்தின் சில பாகங்களில் ஸ்திரீகள் சம்பந்தமாய்க் கோஷா இருக்கும்படி நிகழ்ந்ததைப்பற்றி விசனிக்கிறேன். மகமதியர் ஆளுகையில்லாத இந்தியாதேசத்தின் மற்ற இடங்களில் கோஷா இல்லாமல் இந்து ஸ்திரீகள் ஆதி கவுரவத்தையும் மரியாதையையும் சுதந்தரத்தையும் வெகுவாய் அமையப்பெற்று இக்காலத்திலும் ஒழுகுவாராகின்றார்கள். மகமதியரு

டைய ஆளுகை நீடியகாலம் பெற்றிருந்த இடங்களில் மாத்திரம் அந்தப்புர நிர்ப்பந்தம் இருந்துகொண்டு இருக்கிறது. இது கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம். ஸ்திரீகளுடைய சுதந்தரத்தையும் தன் இஷ்டத்தையும் வரவரக் கொஞ்சங் கொஞ்சமாய் அதிகப்படுத்த முயன்றால், அப்படிச் செய்தல், இந்தியாதேசத்தின் ஆதி ஆசாரத்தைப்பற்றியே நடப்பதல்லாமல் மேற்குத்திசையாருடைய வழக்கத்தை அனுசரிக்கிறதாக ஏற்படமாட்டாது. இந்திய ஸ்திரீகள் ஆதிகாலத்தில் அனுபவித்துவந்த சுதந்தரத்தையே இப்போது கொடுப்பதாக ஏற்படும்.

ஆனால் இந்திய ஸ்திரீகளின் நிலைமையின் சீர்திருத்த முறையில் ஆக்ஷேபணை புருஷர்களிடம் இருந்து அதிகமாக இராது. ஸ்திரீகளிடம் இருந்தே வெகுவாய் ஆக்ஷேபணைகள் உண்டாகக்கூடும். புருஷர்களும், பிதாக்களும், ஸ்திரீகளுக்கு இருக்கின்ற நிர்ப்பந்தங்களை விலக்கவேண்டியவிஷயத்தில் பிரியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். வெகுநாளாய்ப் பலதலைமுறைகளாய் நடந்தேறிவந்த வழக்கமானபடியால், அந்நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டே இருக்க ஸ்திரீகள் பிரியமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள். சீர்திருத்தம் செய்வதில் ஆக்ஷேபிக்கிறார்கள். சீர்திருத்தம் நாளடைவிலேயே கொண்டுவரவேண்டும். அதினால் தீமைபயக்காமல் நன்மை உண்டாகும்படியாகப்பார்

த்துக்கொள்ளவேண்டும். இதற்கு உபாயம் என்னவெனில் ஸ்திரீகளுக்குக் கல்விகற்றுக்கொடுப்பதே யொழிய வேறு அன்றும். 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத்தூறுமறிவு,' கல்விப்பயிற்சியால் சிறுகச்சிறுக ஸ்திரீகளுடைய அறிவு விகாசம்பெற்று, ஆதிகாலத்தில் நிகழ்ந்தவண்ணம் உயர்வான அந்தஸ்தைப் பெறுவார்கள்.

படிப்பு விஷயத்தில் இற்றைக்கு இரண்டு மூன்று தலைமுறைக்குமுன் இருந்ததைவிட இக்காலத்து இந்தியாதேசத்து ஸ்திரீகளுடைய நிலைமை அதிகதாழ்மையாய் இருக்கிறது. யௌவனமான ஸ்திரீகளைவிட மூத்தின தலைமுறை சேர்ந்த விருத்த ஸ்திரீகள் கல்வி கேள்விகளில் அதிகமாய்ப் பயின்றிருக்கிறார்கள். இக்காலத்து ஸ்திரீகளோ இரண்டுங்கெட்ட நிலைமையில் இருக்கின்றார்கள். பழைய கல்வி முறையைப்பயின்றார்களில்லை. நவீன முறையும் ஆசரித்தார்களில்லை.

நவீனகல்வி முறையைப்பற்றி உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியது ஒன்றுஉண்டு. அஃதாவது மேனாட்டு ஸ்திரீகள் பயின்றுவரும் படிப்பை உங்களுடைய ஸ்திரீகளுக்கு அமைத்துக்கொள்ளுவது, புத்திசாலித்தனம் அன்று. நீங்கள் வேண்டுவது அம்மாதிரியான கல்விப்பயிற்சி அன்று. ஆதி ஆரிய ஸ்திரீகள் மாதிரியான பண்பு அமைந்த ஸ்திரீகள்

உண்டாவதற்கு அப்படிப்புமுறை சாதகமாகமாட்டாது. மேனாட்டின் ஸ்திரீகள் கல்விப்பயிற்சிக் கருத்து என்ன என்று சற்று யோசித்துப்பாருங்கள். அங்கு வழங்குகின்ற ஒழுகககுமுறையில் பெரும்பான்மையான ஸ்திரீகள் விவாகம் இன்றிக் கன்னிகைகளாகவே இருக்கும்படி நேரிடுகிறது. இவர்களுக்கு உடை உணவு கொடுக்கப் போஷகர்கள்வாஸ்தவத்தில் இல்லை. அன்னவஸ்திரம் கொடுக்கக்கூடிய பிதாக்கள் இறந்துபோகவும், சகோதரர்கள் அவரவர்கள் கிரகக்கிருத்தியங்களை மாத்திரம் தலைமேற்கொண்டவர்களாய் இருக்கவும், இந்த ஸ்திரீகள் தாங்கள் ஜீவிக்கவேண்டியதற்காகத் தாங்களே ஆர்ச்சிக்கவேண்டியவர்களாக ஏற்படுகிறார்கள். இதனால் ஸ்திரீகள் லௌகிக கிருத்தியங்களில் புருஷர்களோடு போட்டியாக நிகழ்வாராகின்றார்கள். ஜீவனார்த்தத்திற்கு உரிய பலவாறான தொழில்களைக் கைக்கொண்டு செய்வாராகின்றார்கள். ஆகவே போட்டி பலப்பட சரீர இரக்ஷணார்த்தமாகப் புரியும் போரானது மேன்மேலும் விருத்தியடைய ஸ்திரீகள் ஜீவனார்த்தமாகப் புருஷர்களுடன் பகைமை பாராட்டித்தாம் முந்தவேண்டும் என்ற பாவத்தை ஸ்திரீகளும் மனத்தில் வாங்கிக்கொண்டு அக்காரணத்தினால் ஸ்திரீகளுக்கு உயர்வான கல்விப்பயிற்சிவேண்டும் என்ற ஆவலாதி மேனாட்டில் உண்டாயிருக்கின்றது. இப்படிப்பின் நோக்கமெல்லாம் ஸ்திரீகளும் புருஷர்களைப்போல் பலவாறான தொழி

ல்முறைகளைத் தாமுங் கைக்கொண்டு புருஷர்களைப்போல் தாமும் ஆர்ஜிக்கும்படியாக உற்ற பயிற்சியையும், கல்வித்தி றமையையும், ஸ்திரீகளும் பெறவேண்டுமென்பதேயாம். இம்மாதிரியான கல்விப்பயிற்சி மேனாட்டில் வேண்டுவதின் நோக்கம் என்னவென்றால், சரீர யாத்திரை நிர்வாகத்திற்கே யாம். இந்துவானவன் தன்னுடைய இயற்கையான சுபாவத்தை இழந்துவிட்டாலன்றி மேனாட்டிற்போல இந்தியா தேசத்திலும், சரீர யாத்திரைக்கு உரிய ஆர்ஜிதக்கலையை ஸ்திரீகளும் கொள்ளவேண்டும் என்று நினையான். ஸ்திரீகளுக்கு மேனாட்டார்கள்போலக்கல்வி கற்பித்து அக்கல்வியின் மூலமாய்ப் பலதொழில்களிற்புகுந்து ஜீவனஞ்செய்துவரவேண்டும் என்று நோக்கான். இந்து ஸ்திரீகளுக்கு இவ்விசனகரமான நிலைமையை உண்டுபண்ணவேண்டுமென்று ஒரு இந்துவும் கருதான். அஃது உண்மை. நம்முடைய நோக்கமும் அவ்விதம் இல்லாமல் இருக்கையில் அவ்விதமான நோக்கம் பற்றிய கல்விப்பயிற்சி முறையை இத்தேசத்துக்கு ஏன் அமைத்துக்கொள்வான். இந்தியதேசத்திற்குப் பொருத்தமில்லாத அக்கல்வி முறையில் இந்தியப் பெண்கள் பயில்வது யுக்தமன்று. நமக்கெல்லாம் வேண்டிய கல்விமுறையானது, பின்வரும் நோக்கங்கள் பற்றியதாக இருக்கவேண்டும். இந்தியா தேசத்தில் ஆதிகாலத்தில் இருந்த உத்தமஸ்திரீகள் போன்று பண்புள்ள ஸ்திரீகள் இப்படிப்பிணையினால் அமை

யவேண்டும். பெரும்பான்மையாய்ப் பத்தினி தர்மம், மாதிரு தர்மம் முதலியவைகளில் உயர்வு பெற்ற ஸ்திரீகள் இக்கல்வியின் பயனாக உண்டாகவேண்டும். சிறுபான்மையாய் ஞானிகளாகவும், பொதுஜன உபகாரிகளாகவும், உள்ள முற்காலம்போன்று பிரம்ம வாதினிகள் இக்கல்வி முறையின் பயனாக ஏற்படவேண்டும்.

இவ்விதம் நிகழும்வண்ணம்கல்விமுறை எம்மாதிரி இருக்கவேண்டும்? முதலாவதாக ஸ்திரீகள் தேசபாஷையைக் கற்கவேண்டும். அதனுடன் சமஸ்கிருதபாஷா ஞானமும், சமஸ்கிருத இலக்கியப்பயிற்சியும் பெறவேண்டும். இம்முறையினால், ஸ்திரீகளின் உத்தமத்தன்மை இவ்விதம் என்று உணர்ந்து அதைத் தம்முடைய அநுஷ்டானத்திலும் கொண்டுவரப் பிரியமாய் முயலுவார்கள். இதுதான் ஸ்திரீகளின் கல்விமுறையின் அஸ்திவாரம். தேசபாஷையை வித்தியா அபிவிர்த்தியை உத்தேசித்துக் கற்கவேண்டும். இந்தியா தேசத்தில் சிரேயஸ்கரமான இலக்கியங்கள் அமைந்துள்ள தாய்ப்பாஷையான சமஸ்கிருதபாஷையைக் கற்கவேண்டும். பின்னும், ஆங்கிலபாஷா ஞானமும் ஸ்திரீகள் அமையப்பெறுவார்களாகில் அதினால் அவர்களுக்கு நன்மைபயக்கும் என்று தோன்றுகிறது. ஆனால் இதில் உங்களில் சிலர்களுக்கு அபிப்பிராயம் இல்லாமலிருக்கலாம். ஆனால் ஸ்திரீகள் தங்களுடைய பர்த்தாக்களும், புத்திரர்களும் பயிலுகின்ற ஆங்

கில பாஷைகளை அவர்களும் அநுஷ்டித்தார்களேயானல், அக்கல்விமுறையினல் உண்டாகும் நீதிகளை உணர்ந்து, ஏற்படும் தீயகுணங்கள் அவர்களிடம்விருத்தியாகாவண்ணம் தடுத்து இவர்கள் நடைபெறுவதற்குச்சௌகரியங்களும் சந்தர்ப்பங்களும் ஏற்படும். இக்காலத்தில் புருஷர்கள் அநுஷ்டிக்கும் கல்விமுறையினல் நாஸ்திகர்களாகவும், சாருவாகர்களாகவும் ஆகின்றார்கள். இவ்விதமானகல்விகேள்வி சம்பந்தம் இல்லாமல் இருக்கின்றமையால், ஸ்திரீகள் புருஷர்களுடைய ஆக்ஷேபணைதெரிந்து அவர்களுக்கு ஒத்துக்கொடுத்து அவர்களைச் சரியான மார்க்கத்திற் கொண்டுவர முயற்சிக்க அநர்களாய் இருக்கிறார்கள். வீட்டில் அடைபட்டு லௌகிகப் பிரக்ஞை இல்லாதவர்களாயும், அறிவு இல்லாத மூடபக்தி உள்ளவர்களாயும், தப்பான பாவங்கள் உள்ளவர்களாயும், ஸ்திரீகள் இருக்கின்றமையால், புருஷர்களிடத்தில் ஸ்திரீகளுடைய வார்த்தைச் செலாமணியாகவும் இல்லை. அவர்களுடைய வார்த்தையைக் கேட்பாருமில்லை. படிப்பு இல்லாத நிமித்தம் அறிவு இல்லாராய் ஸ்திரீகளை எண்ணுகிறபடியால் அவர்களுடைய வார்த்தைகளுக்கு எவ்விதமதிப்பும் கிடையாது. புருஷர்கள் மேற்றிசைப்படிப்பினல் கெட்டுப்போயிருக்கிறதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஐரோப்பியர்களுடைய கல்மஷம் இல்லாத மேன்மைபற்றிய சத்பாவங்களை இந்தியஸ்திரீகள் அறியும்வண்ணம் சாவதானமாய் ஆங்கிலப்

படிப்பினைக்கற்பிக்கவேண்டும். அப்படிக் கற்றுக்கொள்வார்களையாகில் தற்கால உலகநடவடிக்கை இம்மாதிரி என்று அவர்கள் தெரிந்துகொள்வார்கள். தங்களுடைய புருஷர்கள் நடைபெறும் கதியையும் அறிந்துகொள்ளவுங்கூடும். முன்போல ஸ்திரீகள் கிருஹத்தில் இருந்துகொண்டு புருஷர்களுக்கு ஆலோசனையும் புத்தியும் சொல்லுவார்கள். இப்போதோவென்றால் லௌகிகப்பிரக்ஞை ஸ்திரீகளுக்கு இல்லாமையினாலும், குடும்பத்திற்கு வெளியில் நடக்கும் அநுபோகம் இல்லாததினாலும், அசாத்தியமான விஷயங்களில் ஸ்திரீகள் பிடிவாதம் பாராட்டவும், குழந்தைகள் படிப்புமுதலான விஷயத்தில் அனாவசியமான தடங்கலும் இடையூறுகளும் செய்துவருகிறார்கள்.

தவிரவும் ஸ்திரீகள் கிரஹத்தில் யஜமானியாகப் பண்புடம் பயனும் பயக்கும்படியாக இருக்கவேண்டுமானால், சாஸ்திரப்படிப்பினையும் கற்றுக்கொள்ளவேண்டும். ஆதியில் இந்தியாதேசத்தில் கற்றுவந்ததுபோல இக்காலத்திலும் ஸ்திரீகள் சுகாதாரவிஷயங்களையும், உடற்கூற்றையும், பதார்த்தத்தினுடைய குணகுணங்களையும், அறிந்துகொள்ளும்படி அவர்களுக்குக்கற்பித்தல்வேண்டும். அதினால் கிருஹக்கிருத்தியங்களை நேர்மையாகநடத்துவள். அற்பவியாதி சொற்ப ஆபத்து நேர்ந்தால் வயித்தியனைக்கூப்பிடாமல் தானே சிகிச்சைசெய்வாள். கிழவிகள்பாலியஸ்திரீகளைவிட இக்காலத்தில் இவையெல்

லாந்தெரிந்தவர்களாய் இருக்கின்றார்கள். ஆகவே அறிவு பொறுமை சமயவிசுவாசம் தெள்ளிய பிரக்ஞையுள்ளவர்களாயும் பர்த்தாக்களுக்கு அநுகூலியாகவும் பிரியமான சகியாகவும் பர்த்தாவுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறவளாயும் உள்ள ஸ்திரீகள் உண்டாகும்படியாய் இக்கல்விமுறை யேற்படுத்த வேண்டும். இலக்கியப்படிப்பு, சாஸ்திரப்பயிற்சி சமயநெறி கற்றல் இவைகளுடனே ஸ்திரீகள் அலங்காரசாஸ்திர விஷயங்களைச் சிறுபான்மையேனும் அப்பியசித்தால் நலமாயிருக்கும். அது கிருஹத்தில் சந்தோஷமும், முகமலர்ச்சியும் உற்சாகமும் உண்டாவதற்கு அநுகூலமாயிருக்கும். அலங்கார சாஸ்திரப்பயிற்சியில் முக்கியமாய் சங்கீதம் அப்பியசிக்கப்படாதென்று ஒருதப்பான எண்ணம் இருக்கிறது. இதற்குக் காரணம் துன்மார்க்கம்பற்றி யொழுகுகின்ற வேசையர்கள் சம்பந்தத்தினாலேயேயாம். அந்தச் சாஸ்திரத்திற்கும்அவ்வேசையர்களுக்கும் வாஸ்தவத்தில் யாதொருவிதமான சம்பந்தமும் கிடையாது. அவ்வேசையர்கள் இருக்கிறதற்குக்காரணம் தற்காலத்தில் இந்தியாதேசமானது உயர்வான தர்மநெறியினின்று வழுவிக்ஷீணதிசையில் இருக்கிறதினால்தான். இந்தியாதேசத்தில் ஆணும் பெண்ணும் இழிவானநடவடிக்கைபற்றி ஒழுகுகின்றார்கள். உங்களுடைய புத்திரர்கள் கானரசம் அநுபவிக்கவேண்டுமென்று அபேக்ஷிப்பார்களாகில், துன்மார்க்கநிலையில் இருக்கின்ற ஸ்திரீகளிடம்போய்க்கேட்

கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ரஸக்ஞர்களாக இரு ப்பார்களேயாமாகில் (எல்லாப் பையன்களும் ரஸ அபேக்ஷை உள்ளவர்களாக இருக்கின்றார்கள்.) அதை அநுபவிக்கும்ப டியான சௌகரியங்கள் கிருஹத்தின்கண் இல்லை. அதுபற் றிக் கீழானவும் இழிவானவுமானவர்களுடன் சினேகம்பாரா ட்டிச் சல்லாபஞ்செய்து அவர்கள்மூலமாய்க் கானமுதலான சாஸ்திரரஸத்தை அநுபவிக்கும்படியாக ஏற்படுகிறது. இவ் வண்ணம் அவர்கள் செய்தல் சரியா? நேர்மையா? இதை உணர்ந்து இந்தியாதேசத்தில் சிலஇடங்களில் கவுரவம் மரி யாதை உள்ள சில குடும்பஸ்தர்கள் தங்களுடைய பெண்கள் வாய்ப்பாட்டிலும், வாத்தியங்களிலும் பழகக்கானசாலைகள் அமைத்திருக்கின்றார்கள். இதுவிஷயத்தில் ஆரம்பத்தில் பல மான ஆக்ஷேபணை இருந்தது. அக்கானசாலை ஏற்படுத்தின தைப்பற்றி ஆரம்பத்தில் பலவாறான கொடுமையான தூஷ ணைகளைச்செய்துவந்தார்கள். அவைகள் வரவர இப்போது ஒடுங்கின. இந்தக்கான சாலையில் வாசிக்கும் பெண்களுக்குக் கானசாஸ்திரத்தில் பயிற்சியிருக்கிற காரணம்பற்றியே வர ன்கள் வலுவில் ஒருவர்பின் ஒருவராய் வருகின்றனர் என்று அப்பள்ளிக்கூடத்தில் கானசாஸ்திரம் கற்பிக்கும் உபாத்தி யாயராகிய பிராமணரொருவர் நான் சென்னபட்டணம்போ யிருந்த காலத்தில் என்னிடம் சொன்னார். சென்னபட்ட ணத்தில் கானசாஸ்திரப்பயிற்சி பரவிக்கொண்டு வருகிறது.

பழைய தப்பான அபிப்பிராயமும் மாறிக்கொண்டுவருகிறது. பெண்களும் கானசாஸ்திரம் பயின்றவர்களாய் மேனாட்டுப்படிப்பில் பயின்றுவருகிற பையன்களுக்கு ரம்மியமான பத்தினிகளாக அமைய ஆயத்தமாகிக்கொண்டுவருகின்றார்கள்.

ஸ்திரீகளுடைய கல்விமுறையானது இத்தகையதாய் இருக்கவேண்டும். பொதுவாய் வழங்குகிறபடி இருக்கக்கூடாது.

ஆனால் இவ்விதமான கல்விமுறை நடைபெறுவதற்குப் பெரிய தடையொன்றிருக்கிறது. அதை நான் சொல்லாமற் போனால் தருமம் அன்று. அறிவுள்ளவர்களாயும் நீரர்களாயும் இருப்பீர்களேயானால் அந்தத் தடையை நீங்கள் நீக்கிக்கொள்ளலாம். அந்தத்தடை யாதெனில் குழந்தைப் பிராயத்திலேயே ஸ்திரீகளுக்கு விவாகம் ஏற்பட்டுக்குழந்தை பெறும்படியான உத்தரவாதத்தையும் பெறும்படியாக நேர்கிறது. முன்சொன்ன கல்விப்பயிற்சிமுறையை எவ்விதம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிறது. குழந்தையாயிருக்கின்ற ஸ்திரீயானவள் குழந்தை பெறுவாளேயாகில் உள்ளபடி மாதிருதருமத்தை வகிக்கிறதற்குரிய சரீரவளர்ச்சி முதலானது இல்லாமற்போய்விடும். முதலாவது உபந்நியாசத்தில் நான் சொல்லியபடி பாலியத்திலேயே விவாகஞ்செய்தலானது கல்வி அப்பியசித்தலுக்கு இடையூறாகவே இருக்

கிறது. இந்தப்பாலியத்தில் விவாகஞ்செய்கிறதைப்பற்றிநன்ருய் யோசித்து ஒருதீர்மானத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

ஸ்திரீகளை இரண்டுவிதமாக நடத்தலாம். ஒன்று பிராசீனமுறை. அது சுபாவமானது. நேர்மைபற்றியது. அது க்ஷேமகரமானது. மற்ருென்று நவீனமானது. நேர்மை தப்பியது. மூடத்தன்மைபற்றியது. நாசஹேதுவானது. பிராசீனமுறையில் ஸ்திரீகளுக்குக் கல்விப்பயிற்சியும் உண்டுபண்ணி அதன்மூலமாய் மேன்மையான நிலைமை பெறும்படியும் கௌரவமான சுதந்தரம் அமைந்து ஒழுகும்படியும் செய்தலுமாம். நவீன அவிவேகம் உள்ள முறையில் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்காமலும் அவர்களைக் குழந்தைப்பிராயமானநிலைமையில் இருக்கும்படி செய்தும், அறிவு விகாசம்பெறஹேதுவில்லாதபடி வெளியேருமல் அடைத்துப்போட்டும் செய்தலுமாம். இந்தியபுத்திரர்கள் தங்களுடைய மாதாவினிடம்பக்தி விசுவாசம் பாராட்டுகிற அழகான குணசீலம் மற்றெங்கும் கிடையாது. அவர்கள் அம்முறைமையை முன்போன்று அன்புடன் இனியும் பாராட்டி நடைபெறவேண்டுமானல், அவர்கள் மாதாக்கள் தற்காலநீதிக்கு இசையக் கல்விகேள்விகள் நிறைந்து இருக்குமாறு படிப்பினை அனுஷ்டிக்கவேண்டும். மகன் தாயைத் தெய்வமாகக் கொண்டாடுகிருன். 'தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' அவள்மனம்போல் நடைபெறுகிருன். இத்தகைய உயர்வான நேர்மைமுறையானது

மாறுபட்டிருக்கின்ற இக்காலத்திலும் அனுஷ்டானத்தில் இருக்கவேண்டுமானால் ஸ்திரீகளுக்குக் கல்விப்பயிற்சி அமைக்கவேண்டும். தற்காலத்திலோ லௌகிகப் பிரக்ஞை இன்றியும், மனம் விகாசம்பெறாமல் கூனிக்குறுகியும் வீட்டின்கண் அடைபட்டிருக்கின்ற ஸ்திரீயின் மனோபாவமும் அபிப்பிராயமும் தயாளத்துவமும் விரிவான தன்மையும் இல்லாமல் இருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ? மேற்கண்டபடி மாதாபுத்திரன் இவர்களின்கண் அமையும் முறை தப்பிப்போமாகில், இந்தியாதேசத்திற்கு மஹத்தான நஷ்டம்நேரிடும். அவ்விதம் நேராவண்ணம் இந்தியாதேசத்து ஸ்திரீகளைக் கல்விகற்று மேன்மையடையும்படி. செய்யவேண்டும். அப்படி நிகழ்ந்தால் தாய்வாசகம் அன்பும் அறிவும் நிறைந்து பிறக்கும். கார்பண்ணியமின்றிப் பண்பும் தயாளமும் பொருந்துவதாகும். தற்கால கதியை உணர்ந்து அதற்கு உற்ற அறிவும் யோசனையும் சொல்லுவாளாவள். வீணை பிடிவாதமான அபேக்ஷைகளைக் கோராள். ஸ்திரீகளின் படிப்பு மிக்கமுக்கியமானது. இதை அப்பியாசம் செய்யவேண்டிய முயற்சியைப் புருஷர்கள்தான் நடத்தவேண்டும். எல்லாச் சக்தியும் புருஷர்கள் கையில்தான் அமைந்திருக்கிறது. வாலிபமாகவும் அழகாகவும் இருக்கும் நிலைமையில் "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" என்றுசிலர் அபிப்பிராயத்தில் இருக்கலாம். அழகான குழந்தை உத்தண்டமாகவும், வெடு

வெடுப்பாகவும்வார்த்தையை வசனித்தால் மனத்துக்குப்பிரியமாகவும், வேடிக்கையாகவும் இருக்கலாம். தகுந்த வயதுள்ள பக்குவமான ஸ்திரீயாகவளர்ந்ததின்மேல், அறிவின்றியும், நடுநிலைமைஇன்றியும், நடைபெறும்ஸ்திரீ ஒழுக்கம், தொந்தரவாகவும், ஹிம்சைகரமாகவும், மனவருத்தம் கொடுக்கக்கூடியதாகவும், இருக்கும். முன்போல இனிமேலும் ஸ்திரீகள் செல்வாக்கு உள்ளவர்களாய் இருக்கவேண்டுமானாலும் சரி, தங்களைத் தங்களுடைய பர்த்தாக்களும்புத்திரர்களும் நன்குமதித்து மரியாதையுடன் நடத்தவேண்டுமானாலும் சரி, மனுஷவர்க்கத்தில் இருக்கவேண்டிய முறைப்படி ஒரு பகுதியார் என்ற கவுரவம் அமையநடக்கவேண்டுமானாலும் சரி, எவ்வண்ணம் பழக்கவேண்டுமோ, அவ்வண்ணம் புத்திரர்களைக் கல்விகேள்விகள் மூலமாய்க் கிருஹத்தில் பண்புபெறும்படியாகப் பழக்கவேண்டுமானாலுஞ் சரி, தம்முழங்காலைப் பிடித்துக்கொண்டு கொஞ்சிக்குலாவும் குழந்தைகளை மேன்மையான நோக்கம்பற்றிஒழுகச்செய்யவேண்டுமானாலுஞ்சரி, தம்மக்கள் சான்றோரெனக் கேட்கும்படியான பாக்கியம் வேண்டுமானாலும்சரி, ஸ்திரீகளின் கல்விப்பயிற்சி இன்றியமையாதது. இது முக்கியமாய் நீங்கள் அறிவுடனே கவனிக்கத்தக்க விஷயம். "குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து, நல்லம்யாமென்னு நடுவு நிலைமையாற், கல்வி யழகே யழகு." கல்விப்பயிற்சி

அன்றேல் கற்காத பெண்டிருக்கும், மேல்நாட்டுக் கலைக்ஞோனம் கற்றுள்ள புருஷர்களுக்கும் ஏற்கனவே, உள்ளவேற்றுமைப்பாடு மேன்மேலும் அதிகப்படும். எத்தகைய அன்பும் பண்பும் ஆதரவும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று பாவம் இருப்பினும் பேதம் விருத்தியாகாமல் இராது. பேதத்தை உண்டுபண்ணி அபிவிர்த்திசெய்யும்படியான கதிகள் இக்காலத்தில் அதிகமாக உண்டாகிவருகின்றன. அக்கதிகளைத் தடுத்தாலன்றிப் பிராசீனஉயர்வான ஆரியவிவாகமுறையும், இல்வாழ்க்கையும் குன்றியும் மறைந்தும் போவதாகும்.

ஆகவே இதுதான் இந்திய ஸ்திரீகள் விஷயமாய் நீங்கள் யோசித்து நடத்தவேண்டுவது. முற்காலத்திய உயர்வானமுறை எம்மாதிரி இருந்ததென்று அறியுங்கள். அதை முன்வைத்துக்கொண்டு எவ்விதமான கல்விமுறை அமைக்கப்பெறின், ஆதி உயர்வான மேன்பாடுபயக்குமோ அவ்விதமான முறையைக் கைக்கொண்டு நாட்டுமின். இருக்கின்ற யோக்கியதைகளை ஆராய்ந்து அவைகள் பூர்ணமாய் விகாசம்பெறும்படியான உற்ற கல்விப்பயிற்சியைத் தேடுமின். இவ்வண்ணம் செய்வீரேல் ஆதிகாலம்போன்று இந்தியாவில் இக்காலத்திலும் மாக்ஷிமைதங்கிய மாசில்லாதவும், உத்தமானவும், தைரியம் பக்தி சம்பன்னரானவுமான ஸ்திரீ ரத்தினங்கள் உண்டாவார்கள். இவ்வண்ணம் செய்யாமல் போவீராகில் இதில் தளர்ச்சிப்படுவீர்களேயாகில் கடைமுறை

யில் அதோகதிதான் பயக்கும். தைரியம் குறைய அன்பு குறையும். அது குறைய ஆதரவு குறையும்.

சகோதரர்களே! இந்த உபந்நியாசங்களில் அநேககஷ்டசாத்தியமான சீர்திருத்தமுறைகள் என்ன? விள்ளமுடியாத வினைகள் என்ன? பல அபிப்பிராயத்திற்கு இடங்கொடுக்கக்கூடிய விஷயங்கள் என்ன? இவைகளைப்பற்றித் தெரிவித்திருக்கிறேன். அநேகநூற்றாண்டுகளாயும், அநேக ஆயிரவருஷங்களாயும் சிறுகச்சிறுக க்ஷீணகதியை அடைந்திருக்கின்ற இந்தத்தேசத்தில் அக்கெடுதியின் பயனை ஒரு நொடியில் மாற்றவொண்ணாது. ஒருமுறை முயற்சியால் மாற்ற இயலாது. பலநாட்பயின்றுவந்த வழக்கத்தினால், மாற்றவேண்டுமென்ற எண்ணமே உங்கள் மனத்தில் பிரவேசியாமல் இருக்கின்றது. பிராசீனமேன்மையானமுறைகளை மேன்மேலும் அறிந்துகொள்வீர்களேயாமாகில், இக்காலத்தில் நடைபெறுகின்ற உலகமுறைகளில் உள்ள பற்று உங்களுக்கு நாளடைவில் விடும். கண்களைத் திறப்பீர்கள். தற்காலம் நடைபெறுகின்ற ஒழுக்கங்களை மாற்றவேண்டுவது அவசியம் என்று உணர்வீர்கள். அவ்வுணர்வுபற்றி முயற்சிப்பீர்கள். உங்களில் வயதானவர்கள் காதில் இந்தவிஷயத்தைப்போடுகிறேன். அவர்களை நோக்கிப் பிரஸ்தாபிக்கிறேன். சீர்திருத்தமான முறைகளைக் கைப்பற்றி நடக்க நீங்கள்தான் வல்லர். நீங்கள்தான் தலைமேற்கொண்டு நடத்தக்கூடி

யவர். நடத்தக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். வேறுமற்றவரால் சாத்தியமில்லை. இவ்வார்த்தைகள் வாலிபர்களுக்கன்று. வளர்கின்ற பாலர்கள் இதில் பிரவேசிக்கமுடியாது. அவர்களால் புதுமையான சீர்திருத்தமுறைகளை நாட்டி நடைபெறும்படி செய்ய இயலாது. அவர்கள் செய்யட்டும் என்று பெரியவர்கள் விடுவார்களாகில், பதவாகமின்றியும், முன்யோசனையின்றியும், முரட்டுத்தனமாயும், பாலருடைய இயற்கையானகுணம் தங்கியும் அஃதாவது பதட்டமானதாகவும் சீர்த்ருத்தமுறைகள் அமைவதாகும். அவர்களுக்குப் பிதாவான நீங்கள்தான் இம்முக்கியமான விஷயங்களை யோசனைசெய்து மாற்றவேண்டியவைகளை மாற்றவும், கைக்கொள்ளவேண்டியவைகளை கைக்கொள்ளவும் வேண்டும். "பழையனகழிதலும்புதியனபுகுதலும் வழுவலகாலவகையினானே."

பாலர்களின் புத்தியை மாற்றுவிக்கும் சுபாவமுடைய படிப்பினைக்கற்றுக்கொள்ளும்படி அவர்களைச் செய்கிறவர்கள் நீங்கள்தானே? ஆரியமதத்தில் பற்றுநீங்கவும் ஆதி உயர்வான ஒழுக்கமுறையைக் கெடுக்கவும், தங்குதடையின்றி நவீனமானபாவங்கள் பற்றவும் ஹேதுகரமான கிறிஸ்து மதஸ்தர்களால் நடத்தப்படும் மிஷன்பாடசாலைகளுக்கும் கவர்ண்மெண்டுபாடசாலைகளுக்கும் உங்களுடைய பாலர்களை போகும்படி செய்கின்றவர்கள் நீங்கள்தானே? அதனால் நேரிடும் பெருத்த உத்தரவாதம் உங்கள்தலைமேல் இருக்கின்

றது. பின்பு விபரீதமான பயன் நிகழும்போது நீங்களே முறையிடுகிறீர்கள். இப்பள்ளிக்கூடங்களில் கற்கும் மாணுக்கர்களில் பெரும்பான்மையார் மேற்றிசையார் நாகரீகம் முற்றும்பற்றி ஒழுகுகின்றூர்கள். பிராசீனதர்மமுறைகளைப் பெரும்பான்மையார் கருதுகிறூர்களில்லை. பெரும்பான்மையார் மேல்நாட்டாருடைய லௌகிகமுறைகளை இத்தேசத்தில் நாட்டவேண்டுமென்று உற்சாகமாய்ப்பிடிவாதஞ் செய்கிறூர்கள். அம்முறைகளைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவைகளால் ஏதோ அனேகங்களைச் சாதிக்கலாமென்று மனப்பால்குடிக்கின்றூர்கள். அவைகள் கனவுபோன்றனவாகும்.

இதன்கதி என்னவென்று நினைக்கிறீர்கள்? உங்கள் காலம் சென்றுவிடும், நீங்கள் போய்விடுவீர்கள். இச்சிறுவர்கள் கையில் இந்தியாவின்கதியை விட்டுவிடுவீர்கள். உங்கள் உயிர் சாசுவதமா? "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லையென்னும் பெருமை உடைத்திவ்வுலகு" அக்கினிக்கு இரையாவீர்கள். உங்கள் அஸ்தியைக் கங்கையில் போடுவார்கள். இனி நடைபெறும் இந்தியா என்பது இவ்விளைஞரைப் பற்றியதாம். அவர்கள் எவ்விதம் அமைகின்றூர்களோ அவ்விதம் அதன்கதி இயங்கும். ஆகையால் உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறது யாதெனில் அவர்களை நேர்மையாய் நடக்கச்செய்ம்மின். அவர்கள் அனுசரித்தொழுகும்வண்ணம்

பூர்வஉயர்வான ஆசாரங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்டு மின். அவர்களின் அபேக்ஷைகளை அறிந்து அவர்களின் மனோபாவங்களை அன்புடன் பேணுமின். அவர்கள் மனோபீஷ்டம் தவிர்த்து அலட்சியம் செய்யன்மின். அவர்கள் தம் நோக்கப்படி ஒருவழிப்பற்றி மேன்மேலும் சலிக்கவேண்டுமென்று விரும்புவார்களேயாகில், அவ்விருப்பமுணர்ந்து அதை அநுசரித்து அவர்களை நேர்வழியில் நடத்துமின். அவர்கள் கதியை அவ்வண்ணம் நேர்மைபற்றி ஒழுகும்படியாகச் செய்வித்து இந்தியாவின் க்ஷேமகதியானது சரியான நெறியில் இயங்கும்படியாக நீங்கள் செய்யக்கடவீர்கள். அன்றேல் இந்தியாவுக்குக் கேடுவிளைவிக்க நீங்களே காரணஸ்தராவீர்கள் உங்களுக்குப் பிற்காலம் அஃது அதோகதிபற்றியதாய் விமோசனமின்றி நாசமுறும்.

ஜனவொழுக்க முறையில் சீர்திருத்தமே வேண்டுவது இல்லையென்றும், அது கெடுதி பயக்குமென்றும், சொல்லும் வசனமானது யுக்தமானதன்று. ஆனால் இக்காலத்தில் நடைபெறும் சீர்திருத்த முறையானது தீமை பயக்க ஹேதுவாய் இருக்கிறதென்று உங்களுடைய அபிப்பிராயத்தில் நானும் இணங்குகிறேன். ஆதி உயர்வான ஆசாரங்களைச் சுத்தமாய் விட்டுவிடுதல் அறிவீனமே. நவீன சீர்திருத்த முறைகளைக் கைக்கொண்டால், இந்தியர்கள் என்ற பிரத்தியேகமான லக்ஷணமும் போய்விடும். அவர்கள் சமமுறை

யும், நன்மை பயக்கும் சக்திகுன்றிக் கடை முறையில் அற்றுப்போம். இவையெல்லாம் உங்கள் அபிப்பிராயப்படி வாஸ்தவமென்றே நான் நினைக்கிறேன். ஆனால் சீர்திருத்தமும் கூடாது என்ற உங்களுடைய அபிப்பிராயத்தில் நான் இணங்கவில்லை. அதிலும் அபாயம் இருக்கிறது. இருந்தபடி இருக்கவேண்டும் என்ற பிடிவாதமும் கல்போன்று அமைந்து அசையாத சுபக்ஷ துர்அபிமானமும், அகந்தையான தங்கள் மனோபாகமே சரியென்றும், அதன்கண் சலியாமல் நிற்கின்ற பேரும், ஒவ்வொன்றும் சலித்துக்கொண்டு இருக்கிறதையும் காலசக்கிரம் சுழன்றுகொண்டு இருக்கிறதையும் உணராதபேரும், இந்திய சமயத்திற்கு அபாயமான சத்துருக்களே. இவர்கள் இந்தியாவை முற்றிலும் மேற்கு நாகரீக முறைப்படி நடத்தவேண்டுமென்று முயன்று, இந்தியா என்ற பெயரையே சுத்தமாய்த் தொலைத்துவிடவேண்டுமென்று கருதுகிறவர்களைப்போல இவர்களும் கேடுஉண்டு பண்ணுகிறவர்களேயாம். இந்தியாவிற்கு முன்னிற்கும் அபாயம் யாதெனின், சிறுவர்கள் மேல்நாட்டு நாகரீகம் மனோபாவம் இவைகளின் பகட்டைக்கண்டு மயங்கிப் பிரமித்துக் கர்ணபரம்பரையாய் வந்திருக்கிற இந்து சமய ஆசாரமுறைகளினின்று நழுவிக்கொண்டு வருகின்றார்கள் என்பதேயாம். இதைத்தான் இன்று உங்களுடைய மனத்தில் பதியும்படி சொல்லுகின்றேன். இந்திய வாலிபர்கள் யதாப்பிரகாரம்

ஆதி உயர்வான ஆசாரமுறைகளில் பற்று வைக்கும்படியாக அவர்கள் மனத்தைத்திருப்பவேண்டும். சனாதனதர்மமுறையில் அவர்கள் மனம் ஊன்றிப் பதியும்படியாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிடில் இந்தியாவிற்கு க்ஷேமம் இல்லை.

இதுதான் நீங்கள் செய்யவேண்டுவது. இதுதான் நீங்கள் நடைபெறச்செய்யவேண்டும். அறிவுபற்றியநெறி பக்ஷபாதமான பாவத்தைவிடுங்கள். சீர்திருத்தமுறைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர மனம் துணியுங்கள். தீய ஒழுக்கங்களை மாற்றுங்கள். சிவப்புத் துணியைக் கண்டால் ஓட்டமெடுக்கும் காளைமாடு போல, சீர்திருத்தமென்றால் பயந்து ஓட்டம் பிடியாதேயுங்கள். சீர்திருத்தத்தில் யாதேனும் ஒன்று தீயதாய் இருந்தாலும், எல்லாச் சீர்திருத்தமும் அவ்வியல்பு உடையதென்றும், தீமை பயக்கத்தக்கதென்றும் மயங்க வேண்டாம். இருக்கவேண்டிய முறைப்படி இப்போழ்து இந்திய தேசமானது இல்லையென்பது நீங்களும் ஒப்புவீர்கள். எங்கே பார்க்கினும் துராசாரங்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? ஆங்கிலப் படிப்பில் பயின்ற வாலிபர்களில் பெரும்பான்மையார் பூர்வீக ஆசாரமுறைகளைவிட்டு நழுவி வருகிறார்கள் என்றதை நீங்கள் அறியவேண்டும். அவர்கள் மேல் குற்றஞ் சொல்வதில் பயன் இல்லை. அவர்களைத் தூஷிப்பதிலும் லாபம் இல்லை.

அவர்களை ஒழுகும்படியாகச் செய்விக்கவேண்டும். அவர்கள் இஷ்டப்படி நடைபெறவேண்டுமானால், அவர்கள்பேரில் கோபங்கொள்ளாது அன்பு பாராட்டுங்கள். எவ்விதமான சீர்திருத்தமும் கூடாதென்று ஒருதிறத்தாரும், எல்லாம் மாற்றவேண்டு மென்று மற்றொருதிறத்தாரும், ஆக இருவகையாய் இந்தியர் நடைபெறுதல், உங்களுக்குச் சம்மதமா? இஃது உங்களுடையதீர்மானமாகக் கைக்கொள்வீரேயாகில், இந்தியாவினுடைய கதி தீர்ந்துவிட்டது. மாறக்கூடியது அன்று. இந்தியா எந்த ஸ்தானத்தை வகித்துஇருந்ததோ அந்த ஸ்தானத்தை வேறு ஜாதியார் வகிப்பார். உபதேசஞ் செய்விக்கும் உன்னதமான அதன் தர்மத்தை அன்னிய நாட்டார் கைக்கொள்வர். வெள்ளமோடுங்கால் அதுபற்றி இயங்காத கல்லும் அசையாமல் பின் தங்கும். பிரவாகத்தை அறிவுபற்றி நேர்மையாய்க் கடத்திப் புகவிடாமல் குறுக்கே அணைபோட்டால் சொற்பக்காலம் அணையின் பலத்தால் காப்பாற்றிக் கொள்ளலாம். பின்னர் வெள்ளம் அதிகப்படக் கரையுடைந்துபோம். கரைபுரண்டு வெள்ளப்பிரவாகம் ஏற்படும். க்ஷேமம் பயக்காதே தேசத்திற்கு நாசம் சம்பவிக்கும். காசியில் நாங்கள் ஏற்படுத்தியிருக்கும் பிரதான இந்துவித்தியாசாலையின் நோக்கமெல்லாம் முன்பிரஸ்தாபித்திருக்கும் அபாயமான கதிநேராமல் நிவிர்த்திசெய்வதற்கேயாம். பிராசீன உயர்வான ஆசாரங்கள் இக்கால நீதிக்குத்

தக்கபடி அமையப்பெற்று அவ்வித்தியாசாலையின் கல்விமுறை நடைபெறுகின்றது. அவ்வண்ணம் இந்தவித்தியாசாலையில் செய்துவருகின்றோம். இந்தியாவின் க்ஷேமம் அந்நெறி பற்றியே சம்பவிக்கத்தக்கது. வாலிபர்கள் கல்விமுறையைப் பற்றி ஏற்பாடுசெய்வதுமன்றி வயதுவந்தவர்களைப்பற்றியும் கல்விமுறையை அமைத்தல் யுக்தமாம். இனிப் பெரியவர்களாகவேண்டியவர்களைப்பற்றி நாம்கல்விமுறையைச் சீர்ப்படுத்தவேண்டுமானால் இப்போது பெரியவர்களாயிருக்கிறவர்களுடைய கல்விமுறையைச் சீர்ப்படுத்தாமல் உபேக்ஷையாய் விடுதல் சரியன்று. இவர்களைச் சரிப்படுத்திக்கொண்டுதான் இனி வருபவர்களுடைய முறையை விவஸ்தைசெய்யவேண்டும்.

என்னுடைய கடைசி வார்த்தை யாதெனில் தப்பான அபிப்பிராயமென்ற திரையினால் கண்ணை மறைத்துக்கொள்ளன்மின். நீங்கள் ஆசரிக்கவேண்டிய நெறியானது தற்கால வழக்கத்திற்கு விரோதமாய் இருக்கிறதென்று சீர்திருத்தத்தை அணுகாது விடன்மின். பூர்விகநாகரிகத்தைப் பாது காக்கவேண்டுமென்ற பாவம்பற்றியவர்களாய்த் தற்காலத்திற்கேற்ற அவசியங்களைப்பாராது கண்மூடன்மின். இந்தத் தேசத்திற்குற்ற விஷயங்களைக் கவனிவாது நீங்கன்மின். பழமைபற்றிய இந்த இந்தியாதேசமானது எனக்கு அதிகப் பிரியமானது. முன்போலவே மேன்மையை அடையுமென்

னும் நம்பிக்கை இன்னும் என்மனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன். ஆகையினால்தான் இவ்வண்ணம் உங்களை அறிவுறுத்திக்கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது இந்தியாதேசமானது நிர்க்கதியாய்ச் சோர்வடைந்து தாழ்மையானநிலைமையில் இருக்கின்றது. மாக்ஷிமைதங்கிய அதன் ஆதிசமயமுறை மலினமாகிச் சக்திகுன்றி அதைப்பற்றிய ஞானமேயில்லாமல் வெளிவேஷங்கள் மாத்திரம் தங்கியிருக்கின்றன. அநேக நூற்றாண்டுகள் அநேக ஆயிரவருஷங்களின் பயனாக உண்டாயிருக்கின்ற துர் அப்பியாசங்கள் என்ற விலங்கில் இத்தேசமானது அகப்பட்டுக்கொண்டு சகிக்கமுடியாமல் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. அது மூர்ச்சித்து இருக்கின்ற நிலைமை மரணநிலையாய்முடியும்பக்ஷத்தில் இந்தியாவினால் இனி ஜகத்திற்குக் கிடைக்கக்கூடிய உபதேசம் என்ற வெளிச்சமானது அதன் தகனத்தீயின் பிரகாசமாகவே முடியும்போலிருக்கிறது. அதின் உயர்வான நாகரிகபாவம் முற்றும் அழிந்துதான் போகுமோ? இது நேர்ந்துதான் தீருமென்று சிலர் சொல்லுகின்றார்கள். அதற்கு விமோசனமே கிடையாதென்று சிலர் கூறுகின்றார்கள். அதினின்று உயிர் போய்விட்டதென்றும், அதின் யோக்கியதையை வேறு தேசத்தார் பெற்று நடைபெறுவார் என்றும், பின்னும் சிலர் வசனிக்கின்றார்கள். என் மட்டில் அது நம்பிக்கை கொள்ளவில்லை. அது மூர்ச்சையாய் இருக்

இன்ற நிலைமையில் அதை எழுப்பும்படி செய்யவேண்டுவன எல்லாம் செய்து பலிக்காமற்போயின், உயிரின் அறிகுறியான இயக்கமெல்லாம் அற்றுப் பிராணக் குறியே இல்லாமல் பொய்த்துப்போகும் நிலைமை வருமளவும், முன் சொன்ன அபிப்பிராயங்களை நான் ஒப்பேன். இந்தியர்களுக்குள் தங்களைவிடத் தங்கள் தேசம் பெரிதென்னும் அபிமானம் உள்ளவர்கள் ஒரு நூறு இருநூறு பெயராக மாத்திரம் ஏற்படட்டும். இந்தியா க்ஷேமம் அடையும் வண்ணம் களங்கமற்ற மனத்தினராய் பக்தி சிரத்தை உள்ள தீரர்களாய் தங்கள் உடல் பொருள் ஆவி என்ற மூன்றையும் தேவதைகளுக்குப் பலியாகத் தியாகஞ் செய்யக்கூடிய சிலர் மாத்திரம் ஏற்படட்டும். இந்தியர்களுக்குள் பூர்வீகம் போன்று தேசாபிமானம் பக்தி கொஞ்சமேனும் ஏற்படட்டும். இப்படி நிகழுமேயாகில், நாம் கூறுகின்ற சீர்திருத்தம் உண்டாகவே உண்டாகும். பழையதுபோலப் புதிய இந்தியா தேசமானது பிறக்கும். அதின் மகிமை முன் இருந்ததைவிட அதிகமாக விளங்கும். இன்னும் அவ்விதமான கதி சம்பவிக்கிறதற்குச் சாவகாசமும் காலமும் போகவில்லை. இரண்டு மார்க்கங்கள் இன்னும் இருக்கின்றன. ஒன்று ஊர்த்துவ முகமானது. மற்றொன்று அதோ முகமானது. முன்னது பெருகிய மேம்பாட்டைக் கொடுக்கும். உலகமெங்கும் உபதேசிக்கும் ஞானகுருவாக இந்தியா அமையப் பெறும். பின்

ணதோ வென்றால் பெருகிய துன்பம் விளைவிக்கும். நாளடைவில் க்ஷீண கதி அடைந்து இந்தியா நாசமுறும். அது தகன மாகிப் போய்ப் பஸ்மந்தான் மிஞ்சும்.

ஆக மேற்படி இரண்டு மார்க்கங்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து அது பற்றி ஒழுகுங்கள். தெரிந்து எடுக்கவேண்டிய கடமை உங்களது. என்னதன்று. என்னுடைய ஒரு நாவினால் என்ன செய்யக் கூடும். ஒரு மனத்திற்கு எவ்வளவு யோக்கியதை இருக்கக் கூடும். வாய் திறந்து சொல்லலாம். ஒரு ஜாதியை உண்டுபண்ண முடியாது. அது தன்னைத் தானே உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். என்னால் விஷயத்தை மாத்திரம் தெரிவிக்கக் கூடும். நீங்கள் செய்ய வேண்டிய கவலையை நான் வகிக்க ஒண்ணாது. நேர்வழி இன்னது என்று நான் உரைக்கக் கூடும். அதுபற்றி ஒழுகத்தான் வேண்டுமென்று நான் உங்களை நிர்ப்பந்திக்க அருகியல்லன். உத்தரவாதம் வகிக்கவேண்டியது நீங்கள். நான் அல்லன். இது சரி இது சரியன்று என்பதைத் தீர்மானிக்கவேண்டியது உங்கள் பொறுப்பு. என்னுடையது அன்று. இந் நெறி பற்றி ஒழுகினால் இந்தியா தேசத்திற்கு விமோசனம் உண்டாகுமென்று குறித்துக் காட்டியிருக்கிறேன். அம்மட்டில் என் வேலை முடிந்தது. நான் காட்டிய நெறி சரியென்று அங்கீகரித்தும் இடையூறுகளையும், கஷ்டங்களையும் நோக்கினராய் அந்நெறி பற்றி ஒழுக நீங்கள் பின்வாங்கு

வீர்களேயாகில், அந்நெறி அற்ப சுபாவமுள்ளவர்களாகிய உங்களைப் போன்றவர்களுக்கு உரித்தன்று. அத்தீரர்கள் அன்றே நடைபெறவேண்டிய பாதையை யோஜித்து உத்தரம் சொல்லுங்கள். உங்களுடைய கர்ம கதியென்ன. உலக கதி என்ன? தெய்வ சம்மதம் என்ன? இவைகளை யெல்லாம் அறிந்ததின்மேல் உங்களுடைய உத்தரம் ஏற்படட்டும். உங்கள் மேல் தங்கியிருக்கின்ற உத்தரவாதத்தைக் கவனித்து நோக்குங்கள். அவ்வண்ணம் செய்யுங்கள். என் மட்டில் நான் உள்ளநாள் வரை இத்தேசத்திற்கு வேண்டிய உதவி புரியச் சித்தமாய் இருக்கின்றேன். இத் தேசமோ முற்காலத்தில் ஒப்பு உயர்வு அற உயர்வு பெற்றது. உங்கள் மனோரதம் சரியாய் நிறைவேறுமாகில், இனி அவ்வுயர்வைத் திரும்பப் பெறவுங் கூடும். இத் தேசத்திற்குப்பாடுபடக் கூடியவர்கள் உளரேல், வாருங்கள். முயலுங்கள். இத்தேசம் நாசம் அடையட்டுமென்னும் எண்ணம் உள்ளவர்கள் உளரேல் தூங்குங்கள். அவ்விதம் நீங்கள் தூங்க இந்தியா நாசமுறும். அந்நிய தேசங்களில் வேறு ஜன்மாந்தரங்களில் பிறப்பீர்கள். அப்போது இந்திய தேசத்தைப் பற்றி அதன்பூர்வநிலைமையை உணர்ந்து உங்கள்மனம் சஞ்சலிக்கும். வருத்தமுறும். தேவதா அனுக்கிரஹமும் பற்றி நீங்கள் தெரிந்துஎடுக்கும் மார்க்கமானது அனந்த பலபுஷ்டியுள்ளதாக இருக்கிறது. ஆகவே தெரிமின். தெரிந்து நடமின்.

மேலான தெய்வங்கள் உற்ற வழியைக் காட்டுவார்களாக. "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை, யின்மை புகுத்தி விடும்" குறள்.

——0:0——

## பின்னுரை.

மேல் உபந்நியாசங்களில் அறிவித்த விஷயங்களை இந்து மத அபிமானிகள் ஒவ்வொருவரும் படிக்கிறதும் தவிர அநுஷ்டானத்திலும் கொண்டுவரவேண்டியது. அவைகள் அடியிற்கண்ட அம்ஸங்களாகச் சுருக்கி எழுதப்பெற்றுள.

I. ஒவ்வொருவரும் தங்கள் குமாரர்களுக்கு 18 வயதிற்கு முன்னர் விவாகமும், 20 வயதிற்கு முன்னர் ருது சாந்தி முகூர்த்தமும், தங்களுடைய குமாரிகளுக்கு விவாக காலத்தை 11வயதிற்கு மேலும், 14வயது வரையிலும், நிறுத்தி வைக்கவும், அவர்கள் ருதுசாந்தி முகூர்த்தத்தை 14வயது முதல் 16வயது வரை நடத்தவும் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது.

II. இந்து தேசம் விட்டு நாவாய் யாத்திரைசெய்து திரும்பி வருகிறவர்கள் இந்து மதஆசாரணையை அனுசரித்து ஒழுகுவார்களேயாகில், அவர்களைஜாதியில் சேர்த்துக்கொண்டு ஒழுகவேண்டியது.

III. நான்கு வர்ணங்களுக்குள் ஒவ்வொரு வர்ணத்திலும் இருக்கிற அவாந்தர பேதங்களைத் தவிர்த்து விவாகக் கொள்வனகொடுப்பனவைகள், பந்தி போஜனம் இவைகள் சம்பவிக்கும்படியாக முயற்சிக்கவேண்டியது.

IV. வைதிககிருத்தியங்களில் படிப்பில்லாதவரும், துன்மார்க்கம் உள்ளவருமான பிராமணர்களைச் சாத்தியமான மட்டில் தவிர்க்கவேண்டும்.

V. உங்களுடைய புத்திரிகளையும், குடும்பத்தில் மற்றும் உள்ள ஸ்திரீகளையும், கல்வி கற்கும்படி செய்தல் வேண்டும்.

VI. உங்களுடைய மக்களுக்குச் சோபன திரவியம் என்ற பிரதிப் பிரயோஜனத்தைக் கேட்கக்கூடாது.

VII. இந்தியதேசமெங்கும் மேற்கண்ட சீர்திருத்த முறைகளை அபிமானிகள் ஒவ்வொருவரும் நடத்துவார்களேயாகில், யாதொருகலகமுமின்றிச் சுலபமாய்த் தேசமெங்கும் சீர்திருத்தம் அமையப்பெறும். ஆனால் அறிவில்லாத பிடிவாதமுள்ளவர்களால், ஆக்ஷேபணை நிகழக்கூடும். அதைஜயிக்கும்வண்ணம்தெளிவியமனத்தினராயும், தீரர்களாயும், சீர்திருத்த முறைகளை அநுஷ்டிக்கிறவர்கள் இருக்கவேண்டும். தற்

காலத்தில் நடைபெறுகின்ற துராசாரங்களும் தீய ஒழுக்கங்களும், சமீபகாலத்தில் உண்டாயின. அவைகள் நேர்மையான வைதிக முறை என்று நினைக்கின்றார்கள். அவைகளைத் தொலைப்பது சிரமசாத்தியமானதுதான்.

மேற்கண்ட விஷயங்களில் எல்லாவற்றையுமாவது அல்லது சிலவற்றையாவது அங்கீகரிக்கிறேன் என்று எனக்குத் தெரிவிப்பார்களும், அல்லது புத்தியமைந்த தோஷாரோபணம் செய்வார்களும், அவ்விருவரும் எனக்குத் திருப்தியுள்ளவர்கள் ஆவார்கள் என்று நான் தெரிவிக்காமலே நீங்கள் அறிவீர்கள். தீரர்களும், சத்தியவான்களும், சேர்ந்தால் தான், இப்பெருங் காரியம் முற்றுப் பெறும். எல்லா ஜீவர்களும் சுபம் பெறுவாராக.

சுபமஸ்து.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 22 | எவ்வொரு | ஒவ்வொரு |
| 16 | 9 | அர்சர்கள் | அரசர்கள் |
| 20 | 7 | உத்தமதம | உத்தம மத |
| ,, | 10 | உடதேச | உபதேச |
| 26 | 13 | ஒருக்காலும் | ஒருகாலும் |
| 30 | 18 | மணத்திலும் | பணத்திலும் |
| 32 | 4 | மதா | மாதா |
| 38 | 17 | கிரகஸ்தன் | கிருகஸ்தன் |
| 41 | 21 | மேலென்ன | மேல்யௌவண |
| 49 | 19 | முயல்வோம் | முயல்வார்கள் |
| 54 | 2 | நிலைகாட்ட | நிலைகாட்ட |
| 58 | 14 | நிஷ்க்கல்மஷம் | நிஷ்கல்மஷம் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 58 | 15 | படிசெய்து | படி செய்து |
| 68 | 4 | பதக்தின் | மகத்தின் |
| 68 | 14 | விசாரஜை | விசாரணை |
| 69 | 2 | செல்லா | சொல்ல |
| 71 | 19 | மபசோவனல்ரே | பேசுவோமானல் |
| 75 | 21 | விட்டனென்றும் | விட்டனொன்றும் |
| 76 | 5 | அழைத்தன | அமைந்தன |
| 78 | 17–18 | மௌனமென்ன | மெல்ல மெல்ல |
| 80 | 21 | பசு சாந்தியில்லையோ | சந்ததியில்லையோ பசு |
| 83 | 11 | பதபாகம் | பதவாகம் |
| 141 | 18 | அம்ஸம் | அம்சம் |
| 144 | 7 | சம்பத்தித்து | சம்பந்தித்து |
| 177 | 8 | மனோபாகமே | மனோபாவமே |
| 183 | 15–16 | அல்லள் | அல்லேன் |